திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
4 APR 1961



கங்காளமூர்த்தி

மாலை 3] சார்வரி பங்குனி [மணி 7
ஏப்ரல் 1961

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு



தூத்துக்குடி சங்கரராமேசுவரர் கோயிலில் அறநிலைய அமைச்சர் திருவெம்பாவை-திருப்பாவை மாநாட்டைத் திறந்துவைத்தல்.

பொருளடக்கம்

1. திருக்குரங்கணின்முட்டம்
2. வெண்காடு மேவிய விகிர்தன்
3. திருவண்ணமலைக் கல்வெட்டுச் செய்திகள்.
4. சிவஞானபோதம்
5. திருக்குறிப்புத்தொண்ட நாயனர்
6. மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்
7. நவதிருப்பதி அநுபவம்
8. திருக்கேதீச்சரம்
9. அறநிலையச் சட்டம்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து.

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6.



மாலை 3] சார்வரி பங்குனி - ஏப்ரல் 1961 [மணி 7

திருக்குரங்கணின்முட்டம்

விழுநீர்மழு வாள்படை அண்ணல் விளங்கும்
கழுநீர்குவ ளைம்மல ரக்கயல் பாயும்
கொழுநீர்வயல் சூழ்ந்த குரங்கணில்முட்டம்
தொழுநீர்மையர் தீதறு துன்ப மிலரே.

—திருஞானசம்பந்தர்.

உலகத்திலுள்ள உயிர்கள் எண்பத்து நான்கு இலட்சம் வகைப்படும். அவற்றை முறையே படைத்த இறைவன் அவ்வுயிர்களுக்கு உயிராய் நின்று காத்துத் தண்ணருள் புரிகின்றான். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தப்பெருமான்—திருவீழிமிழலைத் தேவாரத்தில் "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம், நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" என்று திருவாய் மலர்ந்தருளினர். கடவுளின் திருமுன்னர் உயிர்களுக்குள் பேதம் இல்லை; ஏற்றத்தாழ்வில்லை; எல்லாமே அவன் திருவருளைப் பெறத் தகுதியானவை. "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்" என்பது ஆன்றோர் வாக்கு. இறைவன் அறக்கருணையாலும், மறக்கருணையாலும் உயிர்களுக்குத் தண்ணளி செய்கின்றான் என்பது நாம் புராணங்களில் கண்ட உண்மை. பறவை விலங்குகட்குப் பாரபட்சமின்றித் திருவருள் கிடைக்குமென்பதைக் காட்டவே அவைகளை வாகனங்களாகவும், கொடிகளாகவும் காண்கிறோம். சிவபெருமானுக்கு எருது, திருமாலுக்கு கருடன், பிரமனுக்கு அன்னம், விநாயகருக்கு பெருச்சாளி, முருகனுக்கு மயில், சனீசுவரனுக்கு காகம், பைரவர்க்கு நாய் முதலியன ஊர்தியாக உள்ளன. மனிதர், தேவர், அசுரர், அரக்கர் முதலியவர்கள் மாத்திரமேயன்றி, எல்லா உயிர்களுமே அவனுடைய பரங்கருணைக்குப் பாத்திரமாகும் பான்மையவை யென்பதற்குப் பலகதைகளை நம்முடைய நூல்களில் காண்கிறோம். கரிக்குருவிக்கு உபதேசித்தது, நாரைக்கு முத்தி கொடுத்தது, பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டியதுமுதலியவை திருவிளையாடற் புராணத்திலுள்ளவை. முள்ளிச்செடிக்கும் முத்திகிடைத்தது என்பதை உமாபதி சிவனார் வரலாற்றிலிருந்து அறிகிறோம். நம்முடைய தலங்கள் பலவற்றில் ஊர்வன பறவை விலங்கு முதலியவை வழிபட்டுப் பேறு பெற்றன. கழுகுகள் வழிபட்டது கழுக்குன்றம்; சம்பாதி, சடாயு என்ற பறவைகள் பூசித்தது புள்ளிருக்கும்வேளூர் என்னும் வைத்தீசுவரன்கோயில்; சிலந்தியும் யானையும் வணங்கியது ஆனைக்கா; சிலந்தி, பாம்பு, யானை இம்மூன்றும் இறைஞ்சியது காளத்தி; பாம்பு பூசித்தது நாகப்பட்டினம், நாகேச்சுரம், திருப்பாம்புரம்; மயில் பூசனைபுரிந்தது மயிலாடுதுறை (மாயூரம்), மயிலாப்பூர்; காமதேனு வழிபட்டது கருவூர் ஆனிலை; பசுக்கள் பூசித்தது பசுபதீச்சுரம் (திருஆவூர்);

எறும்பு வழிபட்டது எறும்பியூர்; வாலி யார் வழிபட்டது வடகுரங்காடுதுறை; குரங்கு பேறுபெற்றது குரக்குக்கா; ஆடு ஆனை வணங்கியது ஆடானை; இன்னோ ரன்னபிற.

இந்த வரிசையில் வைத்தெண்ணப் படுவது திருக்குரங்கணின்முட்டம் என் னும் சிவத்தலம். இது தொண்டை நாட்டு முப்பத்திரண்டு பாடல்பெற்ற பதிகளில் ஒன்று. காஞ்சிபுரத்திற்குத் தெற்கே ஆறு கல் தொலைவிலுள்ளது. குரங்கு, அணில், முட்டம் (காக்கை) இவை மூன்றும் இத் தலத்துப்பெருமானை வழிபட்டுப் பேறு பெற்ற காரணத்தால் **குரங்கணில்முட்டம்** என்ற பெயர் ஏற்பட்டது. குரங்கு என் பது வாலியாகிய வானர வீரனைக்குறிக்கும் என்றும், அவன் இப்பதியில் இறைவனைத் தொழுதபடியால் அவருக்கு **வாலீசர்** என்ற திருப்பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர். இவ்வூர்க்கோயில் கல்வெட்டுக்களில் "திருகுக்ரங்கணின் முட்டமுடையார்", "திருக்குரங்கணின் முட்டமுடையநாய னர்", "கொய்யாமலர் சூடுவார்" என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இத்தலத் தேவாரத்திலும் "கொய்யாமலர் சூடி" என்ற குறிப்பு வருகிறது. அம்பிகையின் திருநாமம் "**இறையார் வளையம்மை**" என்பது. இது சம்பந்தர் பாடலில் குறிக்கப்பெறு கிறது. அணிலும் காக்கையும் பூசித்த தைக் கோயில் வாயிலின் தென்புறமும், குரங்கு வழிபட்டதை வடபாலும் சிற்பங் களாகக் காட்டப்பெற்றிருக்கின்றன. கோயிலைச்சுற்றி காக்கைமடு என்ற நீர்நிலை இருக்கிறது. சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்தது.

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு பதினொரு பாடல்களையுடைய ஒரு திருப் பதிகம் பாடியருளியுள்ளார். இப்பதியின் இயற்கை வனப்பை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். "கொழுநீர் வயல்சூழ்ந்த", "கோலப்பொழில் சூழ்ந்த", "குடையார்புனல் மல்கு" குரங்கணின் முட்டம் என்றெல்லாம் கவினுற அமைத் துக் காட்டுகிறார். "குரங்கணில்முட்டம் நெறியால் தொழுவார் வினை நிற்க இலாவே" என்றும் பயன் கூறுகிறார்.

இத்தகைய பழம் பெருமைவாய்ந்த பதியிலுள்ள சிறுகோயில் சிதைவுற்ற சிவாலயமாக இருக்கிறது. அதைப் பழுது பார்த்துப் புதுப்பிக்க வேண்டுமென்று அன்பர்கள் சிந்தையில் எண்ணம் எழுந் தது. கயிறு சாத்திப்பார்த்துத் திருமா கறல்பெருமானை வழிபட்டுத் தமது ஒடிந்த காலைக் கூடப்பெற்றவரான திரு முறைச்செல்வர், சேலம் உயர்திரு சுப்ப ராய பிள்ளை அவர்கள் இக்கோயில் திருப் பணியைத் துவக்கி வைத்தார்கள். அர சாங்கமும் பதினாயிரம் ரூபாயை மானிய மாக வழங்கியிருக்கிறது. திருப்பணியும் நடைபெற்று வருகிறது. பிள்ளையவர்களும் வன்பார்த்தான்பனங்காட்டூர் என்ற இதன் அருகிலுள்ள மற்றொரு பாடல் பெற்ற பதியிலிருந்து கொண்டு திருப்பணி வேலைகளைக் கண்காணித்துவருகின்றார்கள். இக்கோயிலுக்குச் செல்லும் பாதையும் சீர்ப்படுத்த வேண்டிய நிலைமையிலிருக் கிறது. கூடிய விரைவில் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடைபெற எல் லாம்வல்ல பரம்பொருள் திருவருள் பாலிப் பாராக.

இக்கோயில் திருப்பணியில் மிக்க ஆர்வம்கொண்ட பல அன்பர்கள் திருப் பணிக் குழு ஒன்று அமைத்துள்ளனர். திருமுருக கிருபானந்தவாரியார் அவர் களும் தருமையாதீனகர்த்தரும் இதில் மிகவும் கவனம்செலுத்தி வருகின்றனர். ஆத்திக மக்களனைவரும் தங்களால் இயன்ற உதவிபுரியக் கடமைப்பட்டுள்ள னர்.

இறையார்வளை யாளையோர் பாகத்த டக்கிக்
கறையார்மிடற் றுன்கரி கீறிய கையான்
குறையார்மதி சூடிகு ரங்கணின் முட்டத்
துறைவா னெமை யாளுடை யொண்சுட ரானே.

கும்பகோணம்:— ஆதிகும்பேசுவரர் கோயிலில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் தேவார நிதியிலிருந்து நடத்தப்பெறும் திருமுறைப்பாராயணம் 1-3-61 முதல் நடைபெறும்.



கிழக்கு இராஜகோபுரமும் அக்கினிதீர்த்தமும்

வெண்காடு மேவிய விகிர்தன்

மண்ணொடுநீர் அனல்காலோ
டாகாயம் மதியிரவி
எண்ணில்வரும் இயமானன்
இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு
சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண்
காடிடமா விரும்பினனே

—திருஞானசம்பந்தர்.

பண்ணுளீராய்ப் பாட்டுமானீர்
பத்தர்சித்தம் பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்திலும்மைக்
கருதுவார்கள் காணும்வண்ணம்
மண்ணுளீராய் மதியம்வைத்தீர்
வானநாடர் மருவியேத்த
விண்ணுளீராய் நிற்பதென்னே
வேலைசூழ்வெண் காடனீரே

—சுந்தரர்.

ஊனைக் குமின்பம் வேண்டி யுழலாதே
வானைக் கும்வழி யாவது நின்மினே
தானைக் குந்தன் னடியவர் நாவினில்
தேனைக் குந்திரு வெண்காடடை நெஞ்சே

—திருநாவுக்கரசர்.

தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்கள் 274 என்று ஆன்றோர் கணக்கிட்டிருக்கின்றனர். கல்வெட்டால் பின்னர் அறியப்பெற்ற திருவிடைவாயில், பாம்புதீண்டி யிறந்த அப்பூதியடிகளின் மகன் உயிர்த்தெழ அப்பர் பெருமான் பதிகம் பாடிய திங்களூர் என்ற

புதன் (பூமிக்கடியில் கண்டெடுத்த விக்கிரகங்கள்) அர்த்தநாரீசுவரர்

இரண்டையும் சேர்த்தும் சிலர் கூறுகின்றனர். இவற்றில் மூவர் தேவாரப் பதிகங்கள் உடையவை 44 பதிகளேயாகும். அவைகளில் ஒன்று திருவெண்காடு. இது தஞ்சை மாவட்டத்தில் சீகாழிக் கோட்டத்தில் இருக்கிறது. சீகாழி இருப்புப் பாதை நிலையத்திலிருந்து தென்கிழக்கே ஒன்பது கல் தொலைவிலுள்ளது. சீகாழியிலிருந்து பஸ்கள் செல்கின்றன. இத்தலத்திற்குத் தெற்கே காவிரியும், வடக்கே மண்ணியாறும் (மணிகர்ணிகையும்) ஓடுகின்றன. திருச்சாய்க்காடு, காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம், திருவலம்புரம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருக்கலிக்காமூர் முதலிய பாடல்பெற்ற பதிகள் திருவெண்காட்டைச் சூழ உள்ளன.

திருவெண்காட்டிற்கு சுவேதராண்யம், வேதவெண்காடு, முத்திநகர், ஞானவனம், சுவேதவனம், தமோநாசபுரம், முருகன் பூண்டி, பாதாள கயிலாயம், சிவானந்தக்காடு, கணபதிநகரம், ஆதிசிதம்பரம், திருவூர், உமையூர், மாலூர், தலநாயகம், பெரியமயானம், பேரரங்கம், காலாஞ்சரம், சித்திநகர் முதலிய பெயர்கள் உள்ளன. கோயிலிலுள்ள கல்வெட்டுக்களிலும், தேவாரம் முதலிய திருமுறைகளிலும் திருவெண்காடு என்ற பெயரே காணப்படுகிறது. தலபுராணத்தில்,

முத்திநகர் தமோநாசபுரம்
பாபநாசபுர முருகன்பூண்டி
சித்திநகர் பாதாளகயிலாய
ஞானவனஞ் சிவானந்தக்கா
டொத்தகண பதிநகரமாதி
சிதம்பரந்திரு வுமையூர்மாலூர்
மெய்த்தலநா யகம்பெரியமயான
மெனும்பேருடனும் விளங்கிற்றன்றே

என்ற பாடலில் இத்தலத்தின் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெயருக்கும் காரணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மூன்று என்று சொல்லப்பட்ட சிறந்தவைகளை இங்கே காணப்பெறுவதால் இத்தலத்திற்குப் பெருமை அதிகம். சுவேதாரண்யர், அகோரர், நடராஜர் என்ற மூன்று மூர்த்திகள், அயன், அரி, அரன் என்ற முக்கடவுளர், சோம, சூரிய, அக்கினி என்ற மூன்று தீர்த்தங்கள், பெரியநாயகி, காளி, துர்க்கை ஆகிய மூன்று அம்பிகைகள், வட

வால், கொன்றை, வில்வம் ஆன மூன்று தல விருட்சங்கள் ஆகியவை இத்தலத்திற்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன. இம்மட்டோ! அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவருமே இத்தலத்திறைவன்மீது தேவாரப் பதிகங்கள் ஓதியருளியுள்ளனர், "வெண்காடே வெண் காடே என்பீராகில் வீடாத வல்வினைநோய் வீட்டலாமே" எனத் தாண்டகவேந்தர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றமையால் இத்தலத்தின் மகிமையைச் சொல்லவும் வேண்டுமோ ?

"பண்மொழியால் அவன் நாமம் பல ஓதப்பசுங் கிள்ளை வெண்முகில் சேர்கரும் பெண்ணமேல் வீற்றிருக்கும் வெண்காடே" என்று ஆளுடைய பிள்ளையார் அருளியுள்ள இவ்வூருக்கு நடுநாயகமாகக் கோயில் விளங்குகின்றது. நாற்புறமும் மடவளாகமும், தேரோடும் திருவீதிகளும் இருக்கின்றன. அழகிய திருமதில்கள், கிழக்கு, மேற்கு வாயில்களை அணிசெய்யும் இரண்டு இராஜ கோபுரங்கள் முதலியவைகள் உள்ளன. கோயில் கிழக்கு நோக்கியது. இரண்டு பெரிய பிரகாரங்கள் இருக்கின்றன. கீழ் வாயில் வழியே உள்நுழைந்ததும் இடதுபுறம் நாலுகால் ஊஞ்சல் மண்டபம் உயர்ந்து நிமிர்ந்து நிற்கின்றது. அதன் அருகே அக்கினீசர் கோயிலும், புதிதாக ஒன்பது ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பெற்ற மெய்கண்டார் கோயிலும் உள்ளன. இவைகளின் பக்கம் அக்கினி தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. நந்தி, பலிபீடத்தைத் தாண்டியதும் உட்கோபுர முகப்பில் காட்சியளிப்பது அண்மையில் கட்டப்பெற்ற திருக்கல்யாண மண்டபம். இதற்கு 26,000 ரூபாய் செலவாயிற்று. அதன்மேல் இருமருங்கும் கணபதி, முருகன் திருவுருவங்களும், நடுவில் சிவபெருமான் திருமணக்கோலக் காட்சியைக் காட்டும் வண்ணச்சுதை உருவங்களும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

உட்கோபுரத்தைத் தாண்டி உட்சென்றதும் சுவேதாரண்யர் திருச்சந்நிதியின் முன்புள்ள மகாமண்டபம் காணப்பெறுகிறது. அதன் வடபுறச்சுவரில் இறைவனின் ஆனந்த தாண்டவம் வண்ண ஓவியமாகத் தீட்டப் பெற்றிருப்பது கண்ணைக் கவர்கின்றது. கர்ப்பக்கிரகத்தில் சுவேதாரண்யர் சிவலிங்க மூர்த்தியாய் எழுந்தருளி யிருக்கின்றார். சுவேதாரண்யேசுவரர், சுவேதவனப்பெருமான், சுவேதவனநாதர், திருவெண்காட்டீசர் என்ற பல திருநாமங்கள் உண்டு. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் திருவெண்காடுதேவர், திருவெண்காடுடைய நாயனார், திருவெண்காட்டுப்பெருமாள் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

தெற்கு உட்பிரகாரத்தின் திருமாளிகைப் பத்தியில் அறுபத்துமூவர், பத்திரகாளி இவர்களின் சந்நிதிகள் உள்ளன. கிழக்கு நோக்கி சோமாஸ்கந்தர், பெரியவாரணப் பிள்ளையாரின் சந்நிதிகளும் இருக்கின்றன, ஒரு கல்வெட்டில் விநாயகர் பெயர் பெரிய பிள்ளையார் என்று காணப்படுகிறது. கர்ப்பக் கிரகத்தென்பக்கம் தென்முகக்கடவுள் எழுந்தருளியுள்ளார். மேதா தட்சிணாமூர்த்தி வடிவம், சனகாதி நால்வருக்கு உபதேசமில்லை; பிரமனுக்கு உபதேசிக்கிறார். இவர்க்கு அண்மையில் சுதையினாலான சட்டைநாதர் உருவம் இருக்கிறது.

மேற்குத் திருமாளிகைப் பத்தியில் திருமால் நின்ற கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். மூலஸ்தானத்தின் பின்புறம் வடமேற்கில் நடராஜசபை அமைந்திருக்கிறது. சிதம்பரத்தின் அமைப்பிலேயே இருப்பதுடன், இரகசியம், ஸ்படிக லிங்கம் முதலியவைகளும் உள்ளன. ஆண்டுக்கு ஆறு அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. அப்போது பஞ்சகிருத்திய தீபாராதனை நிகழ்வது தனிச் சிறப்பு வாய்ந்தது.

இத்தல மகிமைக்கு மிக முக்கிய காரணமாக இருப்பது அகோரமூர்த்தியின் சந்நிதி. வடமேற்கு உட்பிரகாரத்தில் தெற்கு நோக்கியிருக்கிறது. இவரை அகோர வீரபத்திரர் என்றழைப்பது தவறு, சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவிக்கப்பெற்று, தட்சன்யாகத்தை அழிக்கச் சென்றவர் அகோரவீரபத்திரர். ஆனால் இக்கோயிலில் எழுந்தருளியுள்ளவர் சிவபெருமானே அகோரமூர்த்தி வடிவங்கொண்டு மருத்துவாசுரன் என்பவனின் வலிதொலைக்கத் தோன்றியவர். அவருடைய திருவுருவத்தை,

கருநிறமு மணிமாலை புனையழகும்
வளையெயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல
இணையடியும் இலக எட்டுக்

கரநிலவ மணிபலகை வெண்டலைவாள்
கடிதுடியேர் சூல மேற்று
வெருவமருத் துணையடர் அகோரசிவன்
துணைப்பதச்சீர் விளம்பு வாமே

என்று தலபுராணப் பாடல் அழகுபெறத் தீட்டிக் காட்டுகிறது. பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் இவர் சந்நிதியில் சிறந்த அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அதை அகோர பூஜை என்பர். அந்த நாளில் ஏராளமான மக்கள் வழிபடுகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் அகோரர் உற்சவமூர்த்திக்கு 55,000 ரூபாய் செலவில் அண்மையில் பெருமண்டபம் ஒன்று எழுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அப் பிரகாரத்திலேயே சண்டேசுவரர், சுவேதலிங்கர் சந்நிதிகளும் இருக்கின்றன. கிழக்குத் திருமாளிகைப் பத்தியில் காசித்துண்டி விநாயகர், துர்க்கை, நவக்கிரகம் முதலியவர்கள் எழுந்தருளியுள்ளனர்.

தெற்கு வெளிப்பிரகாரத்தில் சூரியேசர் கோயிலும், சூரியதீர்த்தமும் உள்ளன. மேற்கு வெளிப் பிரகாரத்தில் நூற்றுக்கால் மண்டபம், ஆறுமுகக் கடவுள் சந்நிதி, அம்பிகையின் தனிக்கோயில் இவைகள் இருக்கின்றன. அம்பிகைக் கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது. அதில் உட்பிரகாரம் ஒன்றும் உண்டு. பிரமவித்தியாநாயகி, பெரியநாயகி என்பன அம்பாளின் திருநாமங்கள். வேயன தோளி நாச்சியார் என்று இக்கோயில் கல்வெட்டொன்று அறிவிக்கிறது. இத்தலத் தேவாரப் பாடலில் "வேயனதோள் உமை" என்று வருவதைக் கல்வெட்டுக்காரர் கையாண்டிருப்பது அறிந்து மகிழ்தற்குரியது.

அம்பாள் கோயிலின் முன்புறம் நவக்கிரகங்களில் ஒன்றான புதனுக்குத் தனிக் கோயில் அமைக்கப்பெற்றிருக்கிறது. பொதுவாகச் சிவன்கோயில்களில் சண்டேசுவரரை அவசியம் வழிபடவேண்டியது போல இக் கோயிலில் புதனைத் தரிசிக்கவேண்டுமென்பர். புதன் கோயிலுக்கு வடபக்கம் பிரம சமாதி இருக்கிறது. "நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்", "எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும் மண்மிசைமால் பலர் மாண்டனர்" என்ற கணக்கில் இறந்தவர்களுடைய ஈமச்சுடலை இது என்பர். அம்பிகைக் கோயிலுக்கு முன்புறம் சந்திரதீர்த்தம் இருக்கிறது. அதன் கீழ்ப்பக்கம் சோமேசர் சந்நிதி அமைந்திருக்கிறது.

சூரியதீர்த்தம், சந்திரதீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற மூன்று திருக்குளங்களும் இக்கோயிலுள் இருப்பவை மிகவும் மகிமை வாய்ந்தவை. தேவி வேண்ட ஆண்டவன் ஆனந்த தாண்டவம் ஆடும்போது முக்கண்களிலிருந்து சிந்திய மூன்று துளிகள் இந்த மூன்று தீர்த்தங்களாயின என்றும், பின்னர் அகோரமூர்த்தியின் முக்கண்களினின்றும் சிந்திய மூன்று துளிகளும் இவைகளைச் சேர்ந்தன என்றும் தலபுராணம் கூறுகிறது. இந்த முக்குள நீராடி, திருவெண்காட்டீசனை வழிபட்டு மெய்கண்டாரைப் பெற்றெடுத்தனர் அவர் தாய் தந்தையர் என்பது வரலாறு கண்ட நிகழ்ச்சி. பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் பிள்ளைப் பேறின்மையைக் குறித்து அவர் குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியரிடம் விண்ணப்பித்தார். அவர் திருமுறையில் கயிறு சாத்திப் பார்க்க,

பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோ டுள்ள நினை
வாயினவே வரம்பெறுவ
ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத்
தோயாவாந் தீவினையே

என்ற சம்பந்தரின் திருவெண்காட்டுத் திருப்பதிகப் பாடல் அகப்பட்டது. அதன் மேல் குரு ஆணையிட்டவண்ணம் அச்சுதகளப்பாளர் தம் மனைவியொடும் திருவெண்காடு சென்று முக்குள நீராடி இறைவனை வழிபட்டு வருவராயினர். சில காலத்தின்பின் அவ்வம்மையாரும் வயிறு வாய்க்கப்பெற்று ஆண்மகவொன்றை ஈன்றனர். அதற்கு சுவேதவனப்பெருமான் என்று இறைவனின் திருநாமத்தையே சூட்டினர். அந்த இளஞாயிறே சைவசித்தாந்தத் தலைமணி நூலாகிய சிவஞானபோதத்தை உலகுக்களித்த மெய்கண்டார். மூன்று தீர்த்தங்களையும் "முக்குள நீர்", "முக்குளம் நன்குடையான்", "தடமூன்றுடையான்" என்று தலத் தேவாரப் பாடல்களில் குறிக்கப் பெற்றுள்ளது

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பெறும் சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற நீர்த்துறைகள் இவைகளாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சிப் பேரறிஞர் சிலர் கருதுகின்றனர். காவிரி சங்கமத்தில் நீராடச்சென்று திரும்புங்கால் மக்கள் இங்கும் வந்து முக்குளம் படிந்து செல்லல் இப்போதும் வழக்கமாக இருக்கிறது.

இப்பதிக்கு மூன்று தலவிருட்சங்கள் உண்டு. வடவால், கொன்றை, வில்வம். இவை வடக்குப் பிரகாரத்திலேயே இருக்கின்றன. கயா க்ஷேத்திரத்திலுள்ளதுபோல் அக்ஷய வடம் என்ற அழியாத ஆலமரம் இங்கிருக்கிறது. கயாவிலுள்ளதை விஷ்ணுபாதம் என்றும்; இங்குள்ளதை ருத்ரபாதம் என்றும் கூறுவர். முக்குள நீராடி இம்மரத்தடியில் பிதிர்க்கடன்களைச் செய்கின்ற வழக்கம் இப்போதும் இருக்கிறது.

திருவெண்காட்டுக்கு, பட்டினத்தடிகளின் வரலாற்றுச் சம்பந்தமும் உண்டு. காவிரிப்பூம்பட்டினத்திலே அவதரித்த இவருக்குத் திருவெண்காடர் என்றே பிள்ளைத் திருநாமம் சூட்டினர். சுவேதாரண்யர் சந்நிதியிலேயே இவருக்கு இறைவனால் சிவபூசை செய்விக்கப்பெற்ற செய்தி அவருடைய வரலாற்றிலிருந்து தெரிகிறது. இல்லறத்திலிருந்து பட்டினத்தார் துறவறத்தை மேற்கொண்டபொழுது அவருடைய கருவூலத்திலுள்ள பொருள்களை யெல்லாம் மக்கள் எடுத்துப்போகும்படித் திறந்துவிடுமாறு அவருடைய கணக்கரான சேந்தனுருக்குச் சொன்னார். அதையறிந்த அரசன் மற்ற பொருள்களையும் அவர்காட்டவில்லை யென்று சேந்தனுரைச் சிறையிலிட்டான். பல தலங்களை வழிபட்டுத் திரும்பிய பட்டினத்தாரிடம் சேந்தனுரின் மனைவியும் மகனும் முறையிட்டனர். அவ்வளவில்,

மத்தளை தயிருண் டானும்
மலர்மிசை மன்னினனும்
நித்தலும் தேடிக் காணு
நிமலனே நீஇன் றேகிச்
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச்
சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி என்முன்
காட்டுவெண் காட்டுளானே

என்ற பாடலைப் பாட விநாயகப்பெருமான் சென்று சேந்தனுரின் விலங்கை நீக்கினர். ஆதலின் அவருக்கு விலங்குதறித்த விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. அவருடைய கோயில் திருவெண்காட்டீசர் கோயிலுக்குத் தென்மேற்கே இருக்கிறது.

திருஞான சம்பந்தர் இப்பதிக்கெழுந்தருளியபோது எல்லாப் பொருள்களும் சிவலிங்கமயமாகத் தோன்றியதால் மிதிக்க அஞ்சி அம்பிகையைக் கூவியழைத்தார். அம்பாளும் சென்று அவரை இடுப்பில் எடுத்துவந்தார். அதனால் பிள்ளையிடுக்கியம்மன் என்ற பெயர் ஏற்பட்டது. பிள்ளையை இடுப்பில் வைத்திருக்கும் உருவம் அம்மன் கோயில் பிரகாரத்தில் இருக்கிறது. "ஊரெலாம் சிவலோகம் மணல் எலாம் சிவலிங்கம்" என்று தொடங்கும் தனிப்பாடல் ஒன்று இதைக்குறித்து நிற்கிறது.

இத்தலத்தில் இந்திரனும் ஐராவதமும் இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இச்செய்தி தேவாரப் பாடல்களிலும், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் இவைகளிலும் குறிக்கப் பெற்றிருக்கிறது. வெள்ளையானை வழிபடுவதுபோன்ற கற்சிற்பம் கர்ப்பக்கிரகத் தென்புறச் சுவரில் செதுக்கப்பட்டிருக்கிறது.

திருவெண்காட்டு இறைவன்பேரில், சம்பந்தர் மூன்று பதிகங்களும், அப்பர் இரண்டு பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியருளியுள்ளனர். "விருந்தினனாகி வெண்காடதனில் குருந்தின்கீழ் அன்றிருந்த கொள்கையும்" என்று மாணிக்கவாசகர் கூறியிருப்பதோடு, திருக்கோவையாரில் ஒரு பாடலிலும் இத்தலத்தைக் குறித்திருக்கிறார். கபில தேவ நாயனார், பரணதேவ நாயனார், பட்டினத்தார் இவர்களுடைய பாடல்களும் இத்தலத்துக்குள்ளவை பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. பெரியபுராணம், க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ், சிவாலய மான்மியக் கோவை, கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவைகளிலும், வான்மீகி முனிவரின் இராமாயணத்திலும் இப்பதியைப் பற்றிய குறிப்புக்கள் காணப் பெறுகின்றன.

"சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை" என்று பறைசாற்றிய பெரும்புலவர்

சைவ-எல்லப்ப நாவலர் இயற்றிய "திருவெண் காட்டுப் புராணம் என்னும் நூலும் இத்தலத்தைப் பற்றியதே. இப்புலவரின் 'திருவருணைக் கலம்பகம்' மிகச் சிறந்ததென்று அறிஞரால் போற்றப்படுவது. திருவெண் காட்டுப் புராணத்தில் 18 சருக்கங்களும், 614 பாடல்களும் இருக்கின்றன. 1905-ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்றிருக்கிறது. 1906-ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்ற ஸ்ரீ அகோரரந்தாதி என்னும் நூல் சிவானந்தர் என்பவரால் இயற்றப்பெற்றது.

வடமொழியில் ஸ்வேதாரண்ய க்ஷேத்ர மாகாத்ம்யம் என்ற நூலில் 51 அத்தியாயங்கள் இருக்கின்றன. கையெழுத்துப் பிரதியாக கோயில் அர்ச்சகர் திரு. சு. நடேச குருக்களிடம் இருக்கிறது. அச்சுவாகனம் ஏறவில்லை. பல அரிய கருத்துக்கள் நிறைந்த அந்நூலைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிட்டால் மக்களுக்கு மிகவும் பயன்படும்.

இந்தக் கோயிலில் நாள்தோறும் ஆறு கால பூசை முறையாக நடைபெறுகிறது. பன்னிரண்டு மாதங்களிலும் விழாக்கள் நடைபெறுகிறது. மாசிப் பெருவிழாவை இந்திர மகோற்சவம் என்பர். காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்றதைச் சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றிருப்பதை இது நினைவூட்டுகிறது.

இக்கோயிலிலிருந்து 1896-ல் 13 கல் வெட்டுக்களும், 1918-ல் 80 கல்வெட்டுக்களும் அரசாங்கத்தார் படியெடுத்துப் பதிவு செய்திருக்கின்றனர். கி.பி. 10-ஆம் நூற்றுண்டு முதல் 17-ஆம் நூற்றுண்டுவரையுள்ளவை. சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர், தஞ்சை மகாராட்டிர மன்னர்கள் காலத்தவை. இராசராசன்-I, இராசேந்திரன்-I, இராசாதிராசன்-I, குலோத்துங்கன்-I, விக்கிரமசோழன், விக்கிரமபாண்டியன், சுந்தரபாண்டியன், ஸ்ரீவல்லபதேவன், குலசேகரபாண்டியன், பராக்கிரமபாண்டியன், கிருஷ்ணதேவராயர், விருப்பண்ண உடையார், துக்கோஜி முதலிய மன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்றவை. நாள் பூசை, சந்திகள், மாதவிழாக்கள் நடைபெறுவதற்கும், விளக்கெரிப்பதற்கும் நிலம், ஆடு, பொன் முதலியவை வழங்கப்பெற்றதையும், பொன் கபாலம், பொற்பூ, வெள்ளி தங்க அணிகலன்கள், உலோகச் சிலைகள் இவைகள் செய்தளிக்கப் பெற்றதையும், கோசாலை, ஆதுலர்ச்சாலை, மடம், நந்தவனம் முதலியவற்றை ஏற்படுத்தியதையும் இன்னும் பல அரிய செய்திகளை இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

தருமபுர ஆதீன அடியவருள் ஒருவரான வெள்ளியம்பலத் தம்பிரான்சுவாமிகள் நடராசர் சபையைக் கட்டினார். கி.பி. 1730-ல் தண்டாயுதபண்டாரம் என்பார் பெரியநாயகியம்மன் கோயில் மதிற்சுவர்களைக் கட்டினார். தேவகோட்டை திரு. மு. இராம. சுப. சுப்பிரமணியஞ் செட்டியார் குடும்பத்தினர் அம்மன் கோயில் முழுவதும் கருங்கல்லாலான திருப்பணியை 1940-ல் முடித்துக் கும்பாபிஷேகம் நடத்தினர். அண்மையில் கோயில் தர்மகர்த்தர்களின் பெருமுயற்சியால் திருக்கல்யாண மண்டபம், அகோரர் (உற்சவர்) மண்டபம், மெய்கண்டார் கோயில் முதலியவை புதிதாகப் பெருஞ் செலவில் கட்டி முடிக்கப்பெற்றன. உட்கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள் முதலியவை வண்ணம் தீட்டப்பெற்றுக் காட்சியளிக்கின்றன. இத்திருப்பணிகட்கெல்லாம் சிகரமாக சார்வரி பங்குனி 13-ஆம் நாள் (26-3-1961) ஞாயிற்றுக்கிழமை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் கண்டுகளித்தனர்.

கன்னியொரு புறத்திருந்து சிலைவேளை
யெரித்த நுதற் கண்ணுபோற்றி
வன்னிவடி வெனப்பொலிந்துங் கங்கை மங்கை
புணருமண வாளாபோற்றி
அன்னமிகுஞ் சாய்க்காட்டில் வெண்காட்டி
லகலாத வமலா போற்றி
பொன்னிநதி யுடையானே சென்னிமதி
யுடையானே போற்றி போற்றி.

—தலபுராணப்பாடல்

திருச்சத்திமுற்றம் :—சக்திவனேசுவரசுவாமி கோயிலில் 27-2-61ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் ஆலயத் திருப்பணியை துவக்கிவைத்தார்கள்.

திருவண்ணாமலைக் கல்வெட்டுச் செய்திகள்

(பகுதி இரண்டு)

[வித்துவான். திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்],

அருங்குன்றங்கிழான் நாற்பத்தெண்ணாயிரப்பிள்ளையும் மங்கையர்க்கரசியாரும் செய்த திருப்பணிகள்:—

மங்கையர்க்கரசி மண்டபத்தைக் கல்லாலே செய்வித்து, அதில் சுந்தரப் பெருமாளையும் நாச்சியாரையும் எழுந்தருளுவித்தனர். சூரம்பிக்கேணியில் திருமஞ்சனக் கிணற்றைக் கல்லாலே கட்டுவித்தனர். பிரமதேசத் தோப்பிலே நூற்றைம்பது தெங்கம் பிள்ளைகளை வைத்துப் பயிராக்கினர். இருபத்து நான்காவது பஞ்சத்திலே காசிக்கு உழக்கு அரிசி விற்கையில் பூண்ட பொன்னையும், தேடின பொருளையும், நெல்லையும், முற்றக் கொடுத்து திருநதியைக்கட்டி ஏரியை வெட்டினார்கள். நுந்தா விளக்கினுக்கு முப்பத்திரண்டு பசு விட்டனர். ஐந்தலை மணி செய்து வைத்தனர். சக்கிலிக்குத் தரிசனம் காட்டிய தோலாலே செய்த திருவடி நிலைக்கு மேகடுக் குகைக்குச் செம்பொன் இட்டனர், நாச்சியார்க்குத் திருக்கண்வேர்வாளி இரண்டுக்கு நாற்கழஞ்சு பொன் இட்டனர். இது நிகழ்ந்தது திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவரின் 24-ஆம் ஆண்டாகும்.

விஜயநகரபரம்பரை அரசர் கிருஷ்ண தேவ மகாராயர் செய்த திருப்பணிகள்:

ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டினார். இதற்கு முன்னால் (எதிர்ப்பக்கத்தில்) வசந்தன் தெப்பத் திருநாளுக்குத் திருக்குளம் வெட்டி, இதற்குத் தண்ணீர் வருகைக்காக, திருமலைதேவி அம்மன் சமுத்திரத்தை வெட்டினார். பதினொரு நிலையுடன் கூடிய கோபுரத்தையும், ஏழாம் திருநாள் மண்டபத்தையும் கட்டினார். விநாயகர்க்குத் திருத்தேர் பண்ணுவித்தார். வானவதரையன் சோழன் வாசல் கதவு, கதவு கால், உத்தம சோழன் திருவாசல் கால், கதவு, மேற்படி பலகணி வாசல் இவைகளுக்குப் பொன் பூசினார். இந்த வாசலின் முன் கொடிங்கைக்குப் பத்தரைமாத்தில் பொன் பூசினார். உண்ணாமுலை நாச்சியார் கோயில் கால், கதவுகளுக்கும், சடைப்பெருமாள் நயினார் சந்நிதிக்கு மேற்கு வாசல் கால், கதவுகளுக்கும், ஸ்தூபிக்கும் பொன் பூசினார். நாச்சியார் கோயில் மடப்பள்ளிமுன் ஆராவமுதுக் கிணற்றை வெட்டினார். இறைவர்க்கு கிருஷ்ணராயன் பதக்கம், நாகாபரணம் வாகுவலயம், உத்தரீயம் இவைகளைச் செய்து வைத்தார். இந்திரவிமானம், வெள்ளி விந்திகை, பொன்னின் சேகண்டிகை இவைகளைச் செய்து வைத்தார். அஸ்திரதேவ நாயனார்க்கு உச்சிமேல் பொன்பூசிய வெள்ளித் தகட்டைச் செய்துவைத்தார். திருமஞ்சனம் எடுக்க வெள்ளிக்குடம் செய்து வைத்தார். தம்பேரால் கிருஷ்ணதேவராயர் சந்நிதிக்குக் கட்டளையாக அரிசி, எண்ணெய்க் காப்பு, பழம், கற்பூரம் இவைகளுக்கும், திருமஞ்சனம் எடுப்பார், பெரிய திருப்பாட்டு ஓதுவார், தேவரடியார், அத்தியயனஞ் செய்வார், இவர்களுக்கு நிவந்தம் அளித்தார். இந் நிகழ்ச்சிகள் அனைத்தும் நிகழ்ந்தகாலம் சகாப்தம் 1438—அதாவது கி.பி 1516-க்குப் பிறகு ஆகும்.

திருவண்ணாமலை உடையார்க்கு அளிக்கப்பட்ட ஊர்கள்:—

குலோத்துங்க சோழதேவரின் 27-ஆம் இராச்சிய ஆண்டில் திருவண்ணாமலை உடையார்க்குத் திருமடைப் பள்ளிப்புறமாக, சயங்கொண்ட சோழமண்டலத்துப் பெண்ணை வடகரை வாணகோப்பாடி ஆடையூர் நாடுடைய மலையன் நரசிங்கன் மகனான கரிகால சோழ ஆடையூர் நாடாள்வான் விடான் பற்றில் வேங்கைக்காவும், எயில் நாட்டில் நரசிங்க நல்லூருமாக இவ்விரண்டு ஊர்களையும்; இம்மன்னனது 29-ஆம் இராச்சிய ஆண்டில், ஆற்களூர் சந்திரன் வாணராயன், பெண்ணை வடகரை செங்குன்ற நாட்டுக் கங்கநல்லூரைத் தேவதானமாகவும்; குலோத்

துங்கசோழ தேவரின் பதினெட்டாம் இராச்சிய ஆண்டில் மலையன் வினைவென்றானை கரிகால சோழ ஆடையூர் நாடாள்வான் பெருமாக் கடப்பான வினைவென்ற நல்லூரையும்; மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் 27-ஆவது இராச்சிய ஆண்டில், சயங்கொண்ட சோழமண்டலத்து அழகிய சோழன் வரந்தரும் பெருமாள் சோளேந்திர சிங்கப் பிருதிவி கங்கன், திருமடைப்பள்ளிப் புறமாக மாகக்களிக்கொற்றபாடி என்னும் ஊரையும், திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசராச தேவரின் 17-ஆம் இராச்சிய ஆண்டில் ஆற்களூருடைய தெம்பையாழ்வான் இராசராசதேவன் வாணகோவரையன், பொன்பரப்பின பெருமாள் சந்திக்கும், எடுத்தது வல்லபெருமாள் திருநாளைக்கு உடலாகவும், இராசராச வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணைத் தென்கரை மெய்குன்று நாட்டுக் கூவனூரையும்;

மூன்றும் இராசராச தேவரின் 24-ஆம் இராச்சிய ஆண்டில், கிளியூருடையான் அகார சூரன் திருவண்ணாமலைப் பெருமாளான இராசகம்பீர சேதிராயன், திருமடைப் பள்ளிப்புறமாக, பெண்ணை வடகரைக்குக் கோடியான சோழனேற்கப் பிறந்தான் நல்லூரையும்; இம்மன்னனது 30-ஆம் ஆட்சியாண்டில் தியாகசமுத்திரப்பட்டை சித்தமரசர் திக்காணைப்பெருமாளான திருக்காளத்திதேவர் திருமடைப் பள்ளிப்புறமாகவும், சலமிக்கக்கண்டன் சந்திக்கு உடலாகவும், இராசராச வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணைத் தென்கரை மெய்குன்று நாட்டுச் சிற்றூரையும்;

மூன்றும் இராசேந்திரசோழ தேவரின் ஐந்தாம் ஆண்டில், மனுமகாபிரதானன் சிங்கணதண்ணயக்கன், திருமடைப்பள்ளிப் புறமாக அம்மான் கம்பயத்தண்ணயக்கர் திருமேனிக்கு நன்றாகக் கண்ட சந்திக்கு, அமுதுபடி, கறியமுது, வெஞ்சனம், சாத்துப்படி உள்ளிட்டனவற்றிற்கும், திருவேகம்பமுடையான் திருமதில் திருப்பணிக்குத் தச்சுக் கூலிக்கும் உடலாக விட்ட பங்கள நாட்டுச் செய்யாற்றுக்குத் தென்கரைப்பட்ட ஊர்களில் மகிழம்பூண்டி நிலத்தில் தேவதானம், பட்டவிருத்தி நீக்கி, நீக்கிநின்ற நிலமும் இந்த நிலத்தால் வந்த ஆயம், பாடிகாவல், தறிஇறை மற்றும் எப்பேர்ப்பட்ட ஆயங்களும் உள்பட தேவதான இறையிலியாகவும்; சகலபுவனச் சக்கரவர்த்தி காடவன் அழகிய சீயன் கோப்பெருஞ் சிங்கதேவரின் 31-ஆம் ஆண்டில் திருநீற்று வீரமாகத சோழன் தன் பெயரால் நிறுவப்பெற்ற திருநீற்று வீரமாகத சோழன் சந்திக்கும் திருப்பணிக்கும் உடலாகத் தச்சூரையும்; கொடுத்துள்ளனர்.

கிழக்குக் கோபுரப் பாடல்களால் அறியப்படும் புலவர் பெருமக்களின் வரலாற்றுக் குறிப்புக்கள்:—

கிழக்குக் கோபுரம் பதினொரு நிலைகளுடன் கூடியது. இதை உலகநாதர், சிவநேசர் இவர்கள் வேண்டுகோளின்படி கட்டியவர் தஞ்சையை ஆண்ட நாயக்கவம்சத்து சேவப்பர் ஆவர். இது கட்டப்பெற்றகாலம் சகம் 1494—அதாவது கி.பி. 1572. இக்கோபுரத்தில் வடமொழி, தமிழ், கன்னடம், என்னும் மொழிகளில் செதுக்கப்பட்ட பாடல்கள் இருக்கின்றன. இவைகளை ஆக்கியவர்கள் சீநிவாச தீட்சதர், எல்லப்பநயினார், கோவிந்த சூரி என்னும் புலவர் பெருமக்கள் ஆவர்.

சீநிவாச தீட்சதர்:—

இவர் இக்கோபுரத்திலுள்ள நான்கு வடமொழிப் பாடல்களைப் பாடியவர். இவர் வடார்க்காடு ஜில்லா, வேலூர் தாலுகாவிலுள்ள சத்திமங்கலம் என்னும் ஊரினர். இவருடைய தந்தையார் ஆண்டாம் பிள்ளை, தாயார் இலக்குமி. இவர்க்குக் கேசவன், அர்த்தநாரீஸ்வரன், இராசசூடாமணி என்னும் மக்கள் மூவர் இருந்தனர். இவர் தஞ்சை நாயக்க மன்னர்களால் பெரிதும் ஆதரிக்கப் பெற்றவர். வடமொழியில் இவர்க்கு இருந்த புலமை பாராட்டத்தக்கது. சூரிய அஸ்தமனத்தின் அழகைப்பற்றி இவர் வடமொழியில் பாடிய பாடலை வடமொழியாளர் பெரிதும் பாராட்டுவர்.

எல்லப்பநயினார்:—

இவர் தமிழகத்தில் சிறந்த புலமை வாய்ந்தவர். கிழக்குக் கோபுரத்தில் இவருடைய பாடல்கள் மூன்று இருக்கின்றன. இவர் சேவப்பரால் ஆதரிக்கப் பெற்றவர்.

கோவிந்த சூரி:—

சகம் 1502-இல் செதுக்கப்பட்ட இவருடைய இரண்டு பாடல்கள் கிழக்குக்கோபுரத்

தில் உள்ளன. அப்பாடல்கள் இவரை ஆதரித்த சேவப்ப பூபதியின் சிறப்புக்களைப் பற்றியனவாகும்.

பொதுச்செய்திகள்

நித்தமும் சிறுகாலைச் சந்தியில் இறைவர் பஞ்சகவ்வியம் ஆடியருளும்பொருட்டு நிவந்தம் அளிக்கப்பட்டிருந்தது. கோமூத்திரம், கோமயம், பால், தயிர், நெய் இவை பஞ்ச கவ்வியங்களாகும். இச் செய்தியை "திருவண்ணாமலை உடையார்க்கு பஞ்சஹவ்யம் ஆடியருள நித்தமும் சிறுகாலைச் சந்தியில் திருவண்ணாமலை என்னும் நாழியால், கோமூத்திரம் உழக்கும், ஹோமயம் ஆழாக்கும், பால் நாழி உழக்கும், தயிர் நாழி உரியும், நெய் நாழியும் ஆக இப்படி நித்தமும் செய்வதற்கு"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். வலங்கை, இடங்கை சாதிப் பூசல்கள் நாட்டில் நடைபெற்று வந்தன. திருவண்ணாமலையில் இப்பூசல் இல்லை. இவ்வூரில் இரண்டு தெருவில் கைக்கோளர்க்கு முன்பு பூர்வம் நடந்துபோந்த சங்கு, தண்டு, யானை, சாமரம், மற்றும் வலங்கைக்குள்ள வரிசைகள் எல்லாம் நடக்க வேண்டுமென்று வீரதேவராயர் குமாரர் விஜயபூபதி உடையார் கட்டளையிட்டிருந்தனர். திருக்காளத்தியில் நூற்றுக்கால் மண்டபத்தையும், பெரிய கோபுரத்தையும் கட்டியவர் கிருஷ்ணதேவ ராயர் ஆவார். அதை அவர் கட்டிய காலம் சகம் 1438—தாது வருடம் ஆகும். இச் செய்தியை இவ்வூர்க் கல்வெட்டு உணர்த்துகிறது. இக் கோயிலில் பெரிய திருப்பாட்டு பாடிவந்த வழக்கத்தைக் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு அறிவிக்கின்றது. பெரிய திருப்பாட்டு என்பது திருத்தாண்டகமாக இருக்கலாம். திருவண்ணாமலை உடையார்க்கு திருநீற்றுக் கோயில் ஒன்று, திருமுத்துவாளி இரண்டு, திருவாலத்தி ஒன்று இவைகள் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் 31-ஆம் ஆட்சிக்காலத்தில் மீண்டாண்ட நாச்சியார் கொடுத்ததை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. இவற்றுள் **திருநீற்றுக் கோயில்** என்பது திருநீற்று மடலாகும். சகம் 1359-இல் ஏற்பட்ட கல்வெட்டு ஒரு வயலுக்கு அருணகிரிநாதன் ஏந்தல் என்று பெயர் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

சக்கிலிக்குத் தரிசனம் காட்டிய வரலாறு:—

இது இக்கோயில் கல்வெட்டால் புலப்படுகிறது. இச்செய்தியைச் "சக்கிலிக்குத் தெரிசனம் காட்டி தோலாதே செய்த திருவடி நிலைக்கு மேகடுக் குகைக்கு பத்துக்குப் போத செம்பொன் அறுகழஞ்சு"—என்னும் திரிபுவனச் சக்கரவத்தி குலோத்துங்கசோழ தேவரின் 24-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. திரிபுவனச் சக்கரவர்த்தி இராசாதிராச தேவரின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று மிருகத்தை வேட்டையாட எய்த அம்பு, இலக்குத்தப்பி வேறு ஒருவர் மீது பட்டு அவர் இறக்க, எய்தவர்க்குப் பிராயச்சித்தமாக திருவண்ணாமலை உடையார்க்கு ஒன்றரைத் திருவிளக்கு நாடோறும் எரிப்பதற்கு, 52 பசுக்கள் விடுமாறு உத்தரவு செய்யப்பட்டதைக் குறிக்கின்றது.

காப்புரை:—

அறஞ்செய்யப் புகுந்தோர் தாங்கள் செய்த அறச் செயலைக் கல்லில் செதுக்கி வைக்குங்கால் அக் கல்வெட்டின் அடியில், சிவனடியார் பலர் அச் செயலைப் பாதுகாக்க வேண்டுமென்றும், அதை அழிப்பவர் இன்ன பாவத்துக்குட்படுவர் என்றும் செதுக்கிவைத்திருப்பர். இதற்குக் காப்புரை என்று பெயர். இங்ஙனம் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்ற காப்புரைகளில் சில பின்வருமாறு:—

"என் வம்சத்தில் இத்தர்மம் இறக்குவான் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவத்தைப் படுவான். இதுபன் மகேஸ்வர ரக்ஷை (S. I. I. Vol. VIII Ins. No. 126)

"இதில் ஒரு மாச்சின்னம் கொள்வான் கங்கைக் கரையில் குரால் பசுக் கொன்றான் பாவம் கொள்வான்." (S. I. I. Vol. VIII Ins. No. 127)

"மாறுவான் சிவதுரோகியுமாய் புக்கு ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறந்தானுமல்லாய் கோமாம்சத்தைப் புசிப்பானுமாய் கங்கையிடைக்குமரியிடை குரால்பசுக் கொன்றான் பாவம் கொள்வான்" (S. I. I. Vol. VIII Ins. No. 80).

"இவை நானுதல் என் வம்சத்தில் உள்ளாராதல் விலக்குவான் கங்கையிடைக் குமரியிடை குரால்பசுக் கொன்றூர் செய்த பாவங்கொள்வான். பெண்டிழந்தானுக்குச் செருப்புமெடுத்து தம்பலமும் தின்று அவன் காற்கீழ் இருந்தவனுவான். இது பன்மாகேஸ்வர ரக்ஷை. இது விடுவித்தார் கவுணியர் பெருமான். (S. I. I. Ins. Vol. VIII Ins No. 127.)

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் இவ்வூர், மதுராந்தக வளநாட்டுப் பெண்ணை வடகரை திருவண்ணுமலை என்றும்; வீரதேவராயர் குமாரர் வீரவிசய பூபதி ராயர் காலத்தில் இவ்வூர் சயங்கொண்ட சோழமண்டலத்து, செங்குன்றக் கோட்டத்து பெண்ணைவடகரை வாணகோப்பாடி அண்ணு நாட்டுத் தனியூர் திருவண்ணுமலை என்றும் கூறப்பெற்றுள்ளது.

மெய்கண்டதேவர் காலம்

திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசராச தேவரின் 16-வது இராச்சிய ஆண்டில் திருவெண்ணெய்நல்லூர் உடையார் மெய்கண்ட தேவர் ஊருடைப் பெருமாளான எடுத்தது வலிய வேளார் என்பார் திருவண்ணுமலை உடையார் தேவதானம் செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் மெய்கண்ட தேவப்புத்தேரியை வெட்டுவித்ததையும், அவ்வூரில் மெய்கண்ட ஈஸ்வரம் உடைய நாயனுரை எழுந்தருளுவித்து அவர்க்குப் பூசைக்கும் அமுதுபடிக்கும் நிலநிவந்தம் அளித்ததையும் இக்கோயில் கல்வெட்டொன்று (S. I. I. Vol. VIII No. 70) உணர்த்துகின்றது.

சோழமன்னர்களில் பரகேசரி இரண்டாம் இராசராச சோழனும் (கி.பி. 1146—1163); இராசகேசரி மூன்ரும் இராசராச சோழனும் (கி.பி. 1216—1256) இராசராச தேவர் என்னும் இயற்பெயருடனும், திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்னும் பட்டத்துடனும் ஆண்டவர்கள் ஆவர். மேற்குறித்த கல்வெட்டில் கண்ட இராசராச தேவர் பரகேசரியா (அ) இராசகேசரியா என்பதை அக்கல்வெட்டு உணர்த்தவில்லை. இக்கல்வெட்டு இராசராசன் II காலத்தது என்று கொண்டால் இது கி.பி. 1162-இல் ஏற்பட்டதாகும். இராசராசன் III காலத்தது என்று கொண்டால் கி.பி.1232-இல் ஏற்பட்டதாகும். கி.பி. 1162-க்கும் கி.பி. 1232-க்கும் இடையில் எழுபது வருட வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த எழுபது ஆண்டுகளில் கல்வெட்டு எழுத்துக்கள் (Thec haracters-writing)symbols மாறியிருக்கின்றன. ஆதலின் கல்வெட்டின் எழுத்துக்களை நேரில் பார்த்துதான் முடிவு செய்தல் வேண்டும்.

குறிப்பு: சென்ற மாசி இதழில் பக்கம் 294 வரி 5-இல் உள்ள இராசராச தேவரின் என்பதை, இராசாதிராச தேவரின் என்று திருத்திப் படிக்கவும் வேண்டுகின்றேன். (வை. சு.)

திருப்போரூர் :—கந்தசாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19-2-61 முதல் 4-3-61 வரை சிறப்பாக நடைபெற்றது.

லால்குடி :—சப்தரிசீசுவரர் கோயிலில் திருமுறைக்கோயில் பிரதிட்டை முதல் ஆண்டு விழாவும் வாரவழிபாடு துவக்கவிழாவும் 22-2-61 நடைபெற்றன.

திருக்கண்ணபுரம் :—சௌரிராஜப்பெருமாள் கோயிலில் மாசி மகோற்சவம் 21-2-61 முதல் 6-3-61 வரை நடைபெற்றது.

திருமுருகன்பூண்டி :—முருகநாதீசுவரர் கோயிலில் தேர்த்திருவிழா 23-2-61 முதல் 6-3-61 வரை நடைபெற்றது. அதில் தேர்விழா 2-3-61ல் நடைபெற்றது.

சங்கர நயினர் கோயில் :—சங்கர நாராயணசுவாமி கோயிலில் வாரவழிபாடு இரண்டாவது ஆண்டு விழா 9-2-61ல் நடைபெற்றது. பாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கப்பெற்றது. சமயச் சொற்பொழிவுடன் இனிது முடிவுற்றது.

சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன் தொடர்ச்சி)

முதற் சூத்திரம்:

அவன் அவள் அது எனும்
அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே;
ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி
என்மனார் புலவர்.

எனவரும்.

(i) சூத்திரக்கருத்து:—

மெய்ந்நெறிக் கொள்கைகளை குறைபடுத்தி உணர்த்தும் நூல்களால் விளக்கப்படும் பொருள்கள் இறை, உயிர், தளை என்னும் மூன்றும் ஆம். அவற்றுள் இறை எனப்படும் முதற்பொருள் மெய்யுணர்ந்தோர்க்குத் தலைப்பட்டு உணர்ந்தின்புறும் பொருளாகும். ஆயினும் ஏனையர்க்குக் காணப்படாததாய், உய்த்துணரத் தக்கதாய் உள்ளது. ஆகலின், உலகத்தைத் தொழிற்படுத்தும் ஒரு முதற்பொருள் உண்டென்பதை மெய்ந்நூற் பொருணிலைக்கு இயைய, அளவையானும் பொருந்து மாற்றானும் நெறிப்படவைத்து உணர்த்துவதைக் கருத்தாகக் கொண்டது இச் சூத்திரம்.

அளவைகள் காட்சியும், அனுமானமும் ஆகமமும் என மூன்று. அவற்றுள் காட்சியாவது பொருள்களைப் பொறிகளால் நேர்படக் கண்டுணர்தல்; அனுமானமாவது மறைந்த இடத்துள்ள பொருள்களைக் காணப்படும் குறிகளால் உய்த்து உணர்தல்; ஆகமமாவது மெய்யுணர்ந்தோரது வாய்மொழி. ஒப்புப் பற்றி உணரும் உவமையும், இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் என்னும் மூன்றினையும் கூட்டி அளவைகளை ஆறென்பாரும், பிறவாறு கூறுவாரும் உளர். அவையெல்லாம் காட்சி, அனுமானம், ஆகமம் என்னும் மூன்றனுள் அடங்கும்.

பொருந்துமாறாவது இது கூடும், இது கூடாது என ஒருவனது நெறிப்பட்ட உணர்வின்கண்ணே தோன்றும் துணிவு.

இனி, இச் சூத்திரத்திற்கு ஆதாரமாக உள்ள ஆகம மொழிகளுட் சில இங்கே தரப்படுகின்றன:—

(அ) "ஏதுக்க ளாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன்
எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்கல் உறுவீர்மனம்
பற்றி வாழ்மின்"

—திருஞானசம்பந்தர்.

(ஆ) விரிந்தனை குவிந்தனை விழுங்குயிர்
உமிழ்ந்தனை"

—திருஞானசம்பந்தர்.

(இ) "அண்டம் ஆர்இரு ளூடுகடந் தும்பர்
உண்டு போலுமோர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங்(கு) ஆர்அறிவார்? அறிவார்
[எலாம்
வெண்டிங் கட்கண்ணி வேணியன்
[என்பரே."

—திருநாவுக்கரசர்.

(ஈ) "அர்வாக்தேவா அஸ்ய விஸர்ஜநே நாஃதா
கோவேத யத ஆபபூவ
யோ அஸ்யாத்யக்ஷ: பரமே வ்யோமந்
ஸோ அங்கவேத யதிவா நவேத."

—இருக்குவேதம்-10,129,6,7.

[தேவர்கள் உலகப் படைப்பிற்குப் பின்னர்த்தான் உளராயினர்; எனின், அஃது எங்கிருந்து தோன்றிற்று என்பதை ஆர் அறிவார்?

பரவெளியில் (திருச்சிற்றம்பலத்தின் கண்ணே) எவர் இதற்கு (உலகத்திற்கு) முதல்வராய் நின்றாரோ, அவரே அதனை அறிவார்; ஏனையயாரும் (அதனை) அறியார்.]

இத்தகைய அநுபவமொழிகளைக் கேட்டோர்க்கு உலக முதல்வன் ஒருவன் உண்டென்னும் உணர்வு தோன்றும்; ஆயினும்

முதல்வனைத் தன் அகத்தே கண்டறியும் மெய்யுணர்வு இன்மையானும், முதல்வனை இல்லை என்பார் மொழி கேட்கப்படலானும் ஒருவனுக்கு ஐயம் தோன்றும். அன்னோனை ஐயத்தை நீக்கித் தெளிவித்தற்கு எழுந்ததே இம்முதற் சூத்திரம், இச்சூத்திரத்தின் கருத்தைப்பின்வருமாறு உரைக்கின்றார் மெய் கண்டதேவர்:—

"என்பது சூத்திரம்; என்னுதலிற்றோ எனின், சங்கார காரணனுயுள்ள முதலேயே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று."

எல்லா உலகங்களையும் ஒருங்கே ஒடுக்கி மீளத்தோற்றவல்ல பொருளே முதற்பொருள் என்பது மெய்ந்நூல்களின் துணிபு; அதனை இச்சூத்திரம் அனுமான அளவையால் உணர வைப்பதைக் கருதிற்று என்றபடி.

கடவுள் உண்மையைப் பெறுவித்தற்கு அனுமான அளவை கூறிய நூல்கள் மெய் கண்டதேவர் காலத்திற்கு முன்னும் இருந்துள்ளன. அவற்றுள் ஈண்டைக்கு ஏற்புடையவையாய்க் குறிக்கத்தகும் நூல்கள் இரண்டே ஆகும். ஒன்று வியாச சூத்திரம்; மற்றொன்று உலகம் போற்றும் திருக்குறள். அவற்றுள் கூறப்பட்ட அனுமானங்களை முன்னர் உளங்கொள்ளுதல் சூத்திரப் பொருளை வரலாற்று முறையின் வைத்து உணர்தற்கு ஏதுவாகும்.

வியாச சூத்திரமாவது:—

ஜந்மாத்யஸ்ய யத:—(அதாவது, ஜந்மாதி அஸ்ய யத:) என்பது. இதன் பொருள்: "தோற்றம் முதலியன இதற்கு எங்கிருந்து?" என்பது.

இதன் கண் இதற்கு என்றது அறிவுள்ளதும் இல்லதுமாகக் காணப்படும் பொருள்களின் தொகுதியாகிய உலகத்திற்கு என்றபடி. எனவே, இவ்வுலகத்திற்குத் தோற்றம் முதலியவை எங்கிருந்து, எதனால் உள்ளனவோ, அது பிரமம் (பெரும் பொருள் எனப்படும் முதற் பொருள்) என்பது கருத்தாயிற்று.

இங்குத் தோற்றம் முதலியவை (ஜந்மாதி) என்றதொடர்க்குத் தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில் என்பதையே கருத்தாகக்கொண்டனர் சங்கரர், இராமாநுசர் முதலாயினோர்.

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார் எவர்?
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே."

என்னும் கம்பராமாயணச் செய்யுளுக்கு மூலம் மேற்காட்டிய பிரம சூத்திரமும் அதன் உரையும் ஆகும்.

தோற்றம் முதலியவை என்றதனால் தோற்றம், நிலை, இறுதி, கட்டு, வீடு என்னும் ஐந்தொழிலைக் கொண்டார் சிகண்ட ஆசிரியர். இப்பொருள் முன்னைய பொருளினும்சிறந்து, ஆழ்ந்த கருத்தைக் குறிப்பதாகும். இதுவே சித்தாந்த சைவர்க்கு உடன்பாடாவதும் ஆகும்.

இனித் திருக்குறளின் முதற்பாட்டுக் காணப்பட்ட உலகைக்கொண்டு காணப்படாத கடவுட்கு உண்மை கூறும் அனுமான வாக்கியம் ஆம் என்பது சிறிது நுணுகி உணர்வார்க்கும் எளிதின் விளங்கும். பின்வருமாறு மேற்கோள் முதலிய உறுப்புக்களை உடையதாய்க் கூறப்படுவதே பிறர்பொருட்டு அனுமானம் எனப்படுவது:—

1. அம்மலை தீயை உடையது (மேற்கோள்)

2. புகை உடைமையால் (ஏது)

3. (அ) யாண்டு யாண்டுப் புகை உளது, ஆண்டு ஆண்டுத் தீயும் உளதாகும் (வியாத்தி வசனம்)

(ஆ) அடுக்களைபோல (எடுத்துக்காட்டு.)

இவ்வுறுப்புக்களுள் மேற்கோளும், எடுத்துக்காட்டும் வெளிப்படையாகக் கூறப்பட்டு, ஏதுவும், வியாத்தி வசனமும் குறிப்பாற் பெற வைத்துள்ள அனுமான வாக்கியமே முதற்குறள் என்பதைப் பின்வருமாறு வைத்துக் காண்க:—

(1) மேற்கோள்: "உலகு ஆதிபகவன் முதற்றே."

(2) ஏது: (முதன்மையின்றித் தொழிற்பாடு உடைமையின்)

(3) (அ) வியாத்தி வசனம்.

(யாது யாது முதன்மையின்றித்தொழிற்பாடு உடையது, அது அது தனக்கு முதலாவதொன்றனை உடையதும் ஆகும்)

(ஆ) எடுத்துக் காட்டு:
"(ஆதி) அகரமுதல எழுத்தெல்லாம்"
—அதுபோல.

இவ்வாறு கொண்டு உரைப்பதே திரு வள்ளுவர் கருத்தாம். செந்தமிழ் மொழியில் முதனூல் இயற்றிய ஆசிரியர்களுள் முதன் முதலாகக் கடவுள் உண்மைக்கு அனுமான அளவை கூறியவர் திருவள்ளுவர் என்பது மேற்கூறியவற்றால் விளங்கும். இனி அவ் வாசிரியர்க்குப் பின் இவ்வனுமான அளவை யைச் சுருங்கல், விளங்கல், திட்பம், நுட்பம், குறைவிலா நிறைவு என்னும் இயல்புகள் எல்லாம் ஒருங்கே அமையக்கூறியருளிய சிறப்பு அருளாசிரியர் மெய்கண்ட தேவர்க்கே உரியது. இக்கருத்து விளங்குதற் பொருட்டே பிரமசூத்திரமும் முதற்குறளும் இங்குத்தந்து உரைக்கப்பட்டன.

(ii) சூத்திரத்தின் பொழிப்புரை:—

அவன் என்றும், **அவள்** என்றும், **அது** என்றும், இவ்வாறு (1) அவயவப்பகுப்புடைய தாய், (2) பலவாய் அறிவிலதாய், (3) சுட்டி யறியப்படுவதாய் உள்ள உலகத்தொகுதி தோற்றம், நிலை, இறுதி என்னும் மூவகை நிலைமாற்றம் உடையது; ஆதலின், அது ஒரு முதல்வனால் தோற்றுவிக்கப்பட்ட உள் பொருளே ஆகும். இனி, அது தோன்றுங் கால் எங்கிருந்து, யாரால், எதன் பொருட் டுத்தோன்றும் எனின், தான் முன் ஒடுங்கு தற்கு நிலைக்களமாகவும் வினைமுதலாகவும் இருந்த, ஊழி முதல்வன் எனப்படும் முற்றழிப் புக் கடவுளினின்றும், அவன்றன் நினைவாற் றலால், உயிர்களைப்பற்றியுள்ள இயற்கை மலம் எனும் மாசு கழிதற்பொருட்டுத் தோன் றும். இங்ஙனமாதலின். அந்தத்தைச் செய் யும் முற்றழிப்புக் கடவுளே உலக முதற் பொருள் ஆகும் எனத் துணிந்து கூறுவர் அளவை நூற்புலமை உடையோர் என்றபடி.

அவை—தொகுதி, அதாவது அறிவில் பொருளும் அறிவுடைப் பொருளும் என்னும் இவற்றது தொகுதியாகிய உலகம்.

தோற்றிய திதி—தானே தோன்றாது வேறொரு முதலால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள். திதி — உள்பொருள் (Entity) உலகம் கயிற்றில் அரவுபோல முதற்பொருளின் திரிவுக் காட்சியாகிய பொய்ப்பொருள் என்பர் சங்கரர்: அது தமிழாசிரியர்களுக்கும் சித்தாந்த சைவத்திற் கும் உடன்பாடன்று. உலகம் காரண காரி யத்தொடர்புக்கு உட்பட்டு மாறுபடுதற்கு உரிய உள்பொருள்; அதாவது, உலகம் அநித் தப்பொருள், ஆயினும் அஃது உள்பொருளே யன்றி முயற்கோடுபோல இல்பொருள் அன்று.

ஒடுங்கி—பெயர்; உலகெலாம் தன் கண் ஒடுங்கும்படி ஒடுக்கி, ஒடுக்கத்திற்கு நிலைக் களனாகவும் வினை முதலாகவும் நின்ற முத் றழிப்புக் கடவுள் (சருவசங்கார கருத்தா) ஒடுங்கியின்—என இன் உருபு விரித்து உரைக்க. அவ்வுருபு நீக்கப்பொருளையும் ஏதுப்பொருளையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மலத்தால் என மூன்றன் உருபு விரித் துரைக்க.

அந்தமே ஆதி—எனப் பிரிநிலை ஏகாரம் விரித்துரைக்கப்படும்.

(iii) சூத்திரப் பொருட் பாகுபாடு:—

இச்சூத்திரத்தால் உணர்த்தப்படும் முடிபுகள் மூன்று. அவை (1) **உலகம் முத் தொழில் உடையது**, (2) ஆகலின், அஃது உள் பொருளாய் ஒருவனால் தோற்றுவிக்கப் பட்டது; அவ்வொருவன் முற்றழிப்புக் கட வுளே யாவன், (3) ஆகலின், அந்தத்தைச் செய்யும் கடவுளே முதற்கடவுள் ஆவன்; பிறர் ஆகார்-என்பவை. இம்மூன்றும் விவா தத்துக்குரியனவாய் ஆராயத்தக்கவை (Issues) ஆகலின், இவை மூன்று அதிகர ணங்களாக வைத்து ஆராயப்படும். இவை ஒன்றற்கு ஒன்று ஏதுவும் பயனுமாய்த் தொடர்ந்து ஒரு பொருள்மேல் வருதல் காண்க.

முதல் அதிகரணம்

சூத்திரப்பகுதி: **அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் என்பது.**

இதன் வார்த்திகம்: "ஈண்டுத் தோற் றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின், உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்டது பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் உடைத்தென்றது" எனவரும்.

'இங்குக் கூறப்படும் பொருள் (proposition) **உலகம் தோன்றி நின்று அழிவது**" என்பது.

2. உலகம் தோன்றி நின்று மறைவதோ, அன்றி ஓரிடம் அழியப் பிறிதோரிடம் தோன்று நிற்ப இங்ஙனம் மொத்தத்தில் மாற்றமின்றி ஒருபடித்தாயிருப்பதோ என்பது ஐயப்பாடு.

3. பிறர்கூறும் பக்கம் (Prima facie objections from opposite sides):—

உலகத்தின் தோற்றமாகிய முதற்கோடியையும் அதன் அழிவாகிய இறுதி நிலையையும் யாம் கண்டோம் இல்லை ஆதலின் நித்தம் என்றலே பொருத்தம் என்பர் உலகாயதர்.

மீமாஞ்சகர் உலகத்தின் தோற்றம் ஈறு என்பவை காணப்படவும் இல்லை; அனுமானத்தால் துணியப்படுவனவும் அல்ல; வேதத்தால் விதிக்கப்படுவனவும் அல்ல என்பர்.

4. மறுத்துக்கூறும் சித்தாந்தத் துணிபு (Final Judgment):—

(அ) பொருட்பெற்றிகளைக் காட்சி அளவை ஒன்றால் மட்டும் உணர்தல் இயலாது. யாரும் காட்சியை மட்டும் நம்பி வாழ்வதும் இல்லை. இறந்தகாலத்தில் நிகழ்வனவற்றைக் கேட்டுணர்ந்து, நிகழ்காலத்தில் நிகழ்வனவற்றைக் காட்சி, ஆய்வு கேள்வி என்பவற்றால் தெளிந்து, அவற்றுக்குத்தக்கபடி எதிர்காலப் போக்கைக் கற்பனைசெய்துணர்ந்து திட்டமிடுவதே உலகியலிலும் கைக்கொள்ளப்படும் நெறிமுறை. ஆகலின், எடுத்துக்கொண்ட பொருளிலும் அந்நெறிமுறையைப் பின்பற்றலாம்:

உலகத்தில் திதித்தொழில் (நிலைத் தொழில்) நடைபெறும்போது அது ஏனைத் தோற்றத்தையும் ஈற்றினையும் துணையாகக் கொண்டே நிகழ்கின்றது. ஒவ்வொரு பொருளின் நிகழ்ச்சியையும் அதன் தொடக்கம் முடிவு என்னும் இவற்றோடு கூட்டியே உணர்கின்றோம் (தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்). ஆதலால், உலகிற்கும் அவ்வாறு தோற்றமும் ஈறும் ஆகிய இரு கோடிகள் உள்ளன என்பது காட்சி பற்றியே உணரப்படும். சினையின் இயல்பே முதலுக்கும் ஆம் (Part implies the whole) என்னும் மரபுபற்றி உலகப் பொருள்களுள் ஒவ்வொன்றனுக்கும் தனித்தனிக் காணப்படும் முத்தொழிலுடைமை உலகத்திற்கும் உண்டெனக் கொள்ளுதல் பொருத்தமே. மேலும், கார்காலத்தில் ஒரு வகை உயிர்கள், செடி, கொடிகள் ஒருங்கே தோன்றி வளர்தலையும், வேனிலில் அவை யாவும் ஒருங்கே அழிதலையும் காண்கின்றோம். ஆதலால் ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வோர் இனப்பொருள்கள் ஒருங்கே தோன்றலும், ஒருங்கே நிற்றலும், ஒருங்கே அழிதலும் கண்கூடு. அக்காட்சிபற்றி உலகம் முழுவதும் ஒருங்கே தோன்றத்தலைப்படும் காலமும், அவ்வாறே அழியும் காலமும் என்றாயினும் உள்ளனவே ஆம் என ஆராய்ந்து முடிப்பதே அறிஞர்கள் கொள்கையாம். "ஓதாரோ—ஒன்றொன்றிற்றோன்றி உளதாய் இறக்கண்டும்—அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து." இது உலகாயதரை மறுக்கும் மறுப்பு; மீமாஞ்சகரை மறுத்தற்கும் ஆம்.

(ஆ) இனி மீமாஞ்சகர் அனுமான அளவையை உடன்படுவோர் ஆகலின், அவரை அனுமானங்கூறி மறுத்தற்கு, ஏதுவைக் குறிப்பிக்கும் வகையில் உலகத்திற்கு அடையாக 'அவன் அவள் அதுவெனும்' என்னும் பகுதி சூத்திரத்தில் வைக்கப்பட்டது. அடையின் பொருள் (1) அவயப் பகுப்புள்ள (2) பல்வாய் அறிவிலதாய (3) சுட்டியறியப்பட்ட என்னும் மூன்றனுள் ஒன்று ஆகத்தக்கது. ஆகலின் இப்பொருளைக் கொண்டு மூன்று அனுமானங்கள் கூறலாம்.

அவை,

(1) உலகம் முத்தொழில் உடையது; அவயவப் பகுப்புடையதாகலின், குடம்போல

(2) உலகம் முத்தொழில் உடையது; பலவாய்ச் சடமாதலின், ஆடைபோல.

(3) உலகம் உற்பத்தி திதி நாசம் உடைத்து; சுட்டியறியப்படுதலின்,

(யாது யாது சுட்டியறியப்படுவது. அது அது முத்தொழிற்படுவதே ஆம்;)

ஆடை, குடம் முதலியவற்றைப் போல எனவரும். இவை மூன்றும் ஒரு முடிவையே சாதிக்கத் தக்கவை. ஆயினும், சூத்திரத்தாற் பெறப்பட்ட மூன்று ஏதுக்களுள் மூன்றாவதாகக் காட்டப்பட்ட சுட்டியறியப்படுதலின் என்னும் ஏதுவே முடிநிலையாய்ச் சிறந்தது. இக்கருத்துப்பற்றியே, மாணாக்கர்க்கு உணர்வு பெருகுதற்பொருட்டுப் பொதுப்

படக்கூறிச் சிறந்த பொருளை உய்த்துணர வைக்கும் ஆசிரியர், சூத்திரத்துள் ஆண் பெண் அலி என்றுவது, ஒருவன் ஒருத்தி ஒன்று என்றுவது ஓதாது, அவன் அவள் அது எனச் சுட்டுப்பெயர்களால் ஓதினர். இக்கருத்தை மேலும் உணர்த்துதற்பொருட்டு வார்த்திகத்துள் "ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்" என உரைக்கப்பட்டது. நுண்ணிலையிலிருந்து பருநிலைக்கு விரிவது என்பது பிரபஞ்சம் என்னும் சொல்லின் இயல்பு.

"அசத்தாம் சுட்டியுணர் பொருளான எல்லாம்" எனச் சித்தியாரினும், "அறிவினல் அறிந்த யாவும் அசத்தாதல் அறிதி" எனச் சிவப்பிரகாசத்தினும் எழுந்த திருவாக்குகள் இவ்வதிகரணப் பொருள்பற்றியவையே ஆகும்.

இனிப் பிரபஞ்சத்திற்குத் தோற்ற ஒடுக்கங்கள் உபநிடதங்களினும் ஸ்மிருதிகளினும் கூறப்படுகின்றன என்பது அறியத் தக்கது.

5. கருத்துரை

இவ்வதிகரணப் பொருள் நிலையிலிருந்து நாம் தெரிந்துகொள்வது உலகத்தைப்பற்றி இரண்டு கருத்துக்கள் பண்டும் இன்றும் உள்ளன என்பது: ஒன்று உலகம் தனக்குள் ஒரு பாகம் ஒடுங்க, மற்றொரு பாகம் தோன்றப் பிறபாகங்களெல்லாம் இருந்தாங்கு இருப்ப- இவ்வாறு தன் மொத்த வடிவில் மாறுதலின்றியே இருக்கும் என்பது: மற்றொன்று உள்ளே நிகழும் மாறுதலைக்கொண்டு உலகம் முழுவதுமே ஒருங்கே தோன்றும் காலத்தையும், பின் ஒருகாலத்து ஒருங்கே அழியும் நிலையினையும் உடையது என்பது. இவற்றுள் பின்னைய கருத்தே வேத ஆகமங்களுக்கும், திருவள்ளுவர் முதலிய தமிழ்ச்சான்றோர்க்கும் உடன்பாடாவது ஆம், அதனையே மெய்கண்ட தேவர் காட்சிபற்றியும் அனுமானம் பற்றியும் நிறுவியுள்ளார்.

சார்பு கொள்கையை (Theory of Relativity) நிறுவிய ஐன்ஸ்டினுக்கும் காலமும் இடனும் ஆய இவற்றது பிண்டமாகிய உலகம் ஓர் எல்லைப்பாற்பட்டதென்பதும், தோன்றி மறைவது என்பதுமே கருத்தாம்.

சென்ற வாரச் செய்தியில், இங்கிலாந்து விஞ்ஞானிகள் சிலர் கூடி ஆராயும் ஆராய்ச்சியின் விளைவாகப் பின்காணும் முடிபுகள் வெளிப்போந்துள்ளன:—(1) உலகம் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட தொடக்கத்தை உடையவை (The universe had a definite beginning),(2) எல்லாப்பொருள்களும் பெருவெளியில் கருத்தைக் கடக்கும் விரைவில் ஒன்றிலிருந்து ஒன்று விலகிச்செல்கின்றன. (All matter in the universe is rushing out into space at fantastic speed), (3) பிரபஞ்சத்திற்கு ஒரு முடிவு உண்டு (The universe will not lost for ever), இம்முடிவுகளைக் கேட்டு மேலை நாட்டினர் வியப்பு அடைகின்றனர். மெய்கண்ட தேவர் போன்ற அருட்கண்ணர் அறிவுரை கேட்டு வரும் நம்மனோர்க்கு இக்கேள்வி மகிழ்ச்சியைத்தருமேயன்றி வியப்பைத்தராது.

(தொடரும்)

செட்டிகுளம்:—தண்டாயுதபாணி கோயில் பங்குனி உற்சவம் 23-3-61 முதல் 4-4-61 வரை நடைபெறும். தேர்விழா 31-3-61ல் நடைபெற்றது.

திருமோகூர்:—காளமேகப்பெருமாள் வகையரு கோயிலில் கஜேந்திரமோட்ச விழா 2-3-61ல் நடைபெற்றது.

◆ ◆ ◆ ◆

காஞ்சிபுரம்:—தேவராஜசுவாமி கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீதிருமங்கை ஆழ்வாருக்குத் திருக்கோயில் ஒன்று எழுப்ப 5-2-61ல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஓ. வி. அழகேசன் அவர்கள் தலைமையில், இந்து அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அஸ்திவாரக்கல் நட்டார்கள்.

◆ ◆ ◆ ◆

காஞ்சிபுரம்:—மெய்கண்டார் கழகத்தார் காஞ்சிச்சிவதல வாரவழிபாடு 26-2-61ல் காலை 7 மணிக்கு ஏகாம்பரநாதர் கோயில் நல்லகம்பப்பெருமான் திருக்கோயிலில் திருமுழுக்கு வழிபாடும், பின் திருவேகம்பப்படலத்தில் 'நல்கம்பர் மேன்மை' என்பது பற்றிய திரு வே. மு. பிரமேச முதலியார் அவர்களது விரிவுரையும் நடைபெற்றது.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

திருத்தொண்டத் தொகை

திருத்தொண்டத் தொகையுள் திருநாளைப் போவார் நாயனாரை அடுத்துத் தனியார்கள் வரிசையில் பதினெட்டாம் எண்ணு முறைமைக்கண் நிற்பவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். இவரைப்பற்றிக் கூறும் திருத்தொண்டத் தொகைப் பகுதி,

"திருக்குறிப்புத் தொண்டர்தம்
அடியார்க்கும் அடியேன்"

என்பது.

நம்பியாரூரர் நாயன்மார்கட்குத் தம்மை அடியவராக அருளிச் செய்யுமிடத்துச் சிலருக்கு நேரே அடியராகவும், சிலருக்கு அவர் தம் அடியார்க்கு அடியவராகவும் அருளிச் செய்துள்ளார். எவ்வாறருளிச் செய்யினும் இருவகையையும் எல்லா நாயன்மார்கட்கும் பொருந்துவனவாகவே கொள்ளுதல் வேண்டும்; ஏனெனில், நாயன்மார்களுள் ஏற்றத் தாழ்வு காணுதல் அவரது கருத்தன்றாகலின்.

ஆளுடைய நம்பிகள் தம்மை நாயன்மார் தம் அடியார்க்கு அடியவராக அருளிச்செய்தவர்களுள் ஒருவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்பது, மேற்காட்டிய திருத்தொண்டத் தொகைப் பகுதியால் விளங்கும்.

பெயர்க் காரணம்

'திருக்குறிப்புத் தொண்டர்' என்பது சிவனடியார்களது திருக்குறிப்பை அவர்கள் சொல்லு முன்னரே ஏற்றுச் செய்துவந்தமையாற் பெற்ற சிறப்புப் பெயர் என்பதனை,

"புண்ணியமெய்த் தொண்டர்திருக்
குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத்
தொண்டரெனும் சிறப்பினார்"

எனச் சேக்கிழார் விளக்கினார்.

நாயனார் வாழ்ந்த இடம்

திருக்குறிப்புத் தொண்ட நாயனார், இறைவி, இறைவனை, என்றும் ஏத்தி வழிபட்டும், அறம் வளர்த்தும் இருந்தருள்கின்ற திருக்காஞ்சி நகரத்தில் வாழ்ந்தவர். அதனைக் குறிக்கப் புகுங்கால், அந்நகரத்தைத் தன்னகத்துடைய தொண்டை நாட்டின் சிறப்பினை முன்னரும், அந்நகரத்தின் சிறப்பினைப் பின்னரும் மிக விரிவாக விளக்கியருளினார் சேக்கிழார் நாயனார்.

விரிவிற்குக் காரணம்

'இந்நாயனாரது புராணத்தில், சேக்கிழார், மற்றைய எந்த நாயனார் புராணத்திலும் இல்லாத வகையில், நாட்டுச் சிறப்பினையும், நகரச்சிறப்பினையும், நாயனாரது வரலாற்றைவிட மிக விரிவாகக் கூறியது என்னை; அவை, திருத்தொண்டர் புராணம் முழுவதற்குமாக முதலிற் கூறிய நாட்டுச் சிறப்பு நகரச் சிறப்புக்களினும் விரிந்துள்ளனவே?' எனப் பலரும் ஐயுறுவர். அவ்வையத்திற்குச் சிலர், 'தொண்டை நாடு சேக்கிழார் பிறந்த நாடு; அதன் தலைநகர் காஞ்சி; ஆதலால் அவற்றின் சிறப்பை அத்துணை விரியக் கூறினர்; இத்தகைய நாட்டுப்பற்று, பெரும் புலவர் ஒருவர்க்கு இருக்கத்தக்கதே' எனத் தீர்வு காண்பர்

உலகியல் வகையில் நோக்கினால், பிறந்த நாட்டின்மீது ஒரு தனிப்பற்று இருக்கத்தக்கதே; ஆயினும், மெய்ந்நெறி வகையில் நோக்குமிடத்து, "யாதும் ஊரே; யாவருங் கேளிர்" என்னும் நிலையே வேண்டற்பாலது. சேக்கிழார், உலகங்கடந்த நாயன்மாரது நெறியில்நிற்க விரும்புபவரல்லது. உலகத்தார் நெறியில் நிற்க விரும்புபவரல்லர்; ஆகவே, அவர், தொண்டை நாட்டின் சிறப்பையும், காஞ்சி நகரின் சிறப்பையும் தமதுபிறப்பிடம் பற்றிய பற்றினாலே விரித்துக் கூறினார்

எனல் பொருந்தாது. மற்று, இன்றியமை யாத சில காரணங்கள் பற்றியே அவற்றை அவர் அவ்வாறு கூறியிருத்தல்வேண்டும். அவற்றை நோக்குவோம்:

காஞ்சித் தலத்திற்கு உள்ள சிறப்பு, 'அங்கு அம்பிகை என்றும் இறைவனை வழி படுகின்ருள்' என்பதும், 'அறம் வளர்க்கின் ருள்' என்பதுமே ஆகும். அவற்றுள் இறை வனை வழிபடுதல் என்பது சைவ சமயத்தின் முடிந்த பொருளாகும். அதனைச் சிறிதும் குறைபாடில்லாமற் செய்து காட்டுதற்கு உரி யவள் உமையம்மையை யன்றிப் பிறர் ஒரு வரும் ஆகார். அவள் அதனை அங்ஙனம் என்றும் செய்து நிற்கின்ருள் என்ருல், அவ் வரலாற்றை விளக்குவது சைவ சமயத்தின் முடிந்த முடிபினை விளக்குவதேயாகும். இச் சிறப்புப் பற்றியே காஞ்சித்தலம் திருமுறை களிற் பலவிடங்களிற் குறிக்கப்படுகின்றது. அம்மை வழிபாடு செய்தலும் கூறப்படுகின் றது. ஆகவே, காஞ்சித்தலத்தின் சிறப்பினை விரித்துக் கூறுதல் சைவத்தின் முடிந்த உண்மையையும், திருமுறைகளின் பொருளை யும் விளக்குவதாகவே அமைவதன்றி, வேரு காது. அச்சிறப்பினை அவர்,

"ஆன தொன்னகர் அம்பிகை தம்பெருமானை
மான அர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்டு
ஊன மில்அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்டஅப் பெருமையை அறிந்தவா
விளம்பில்"

எனத் தொடங்கி அம்முறையிலேயே கூறிச் செல்கின்ருர். இவ்வரலாறு அவர் காலத்தில் பிற இடங்களில் விளக்கப்படாமை இங்குக் கருத்திற்கொள்ளத்தக்கது.

இது கருதி இதனை விரித்துக் கூறப் புகுந்தவர், அதற்கேற்ப அந்நகரத்தைத் தன் னகத்துக்கொண்டுள்ள தொண்டைநாட்டின் சிறப்பினை விரித்துக் கூறினர். தொண்டை நாட்டுச் சிறப்பை விரித்ததற்குக் காரணம் இதுவே என்பதனை, அவர், அதனைத்தொடங் கும்பொழுதே,

"ஏயு மாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னுன்தனி யாயின தலைவரைத் தழுவ
ஆயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னுடு"

எனத் தொடங்குதலால் அறியலாம். அங்ங னம் தொடங்கிய தொண்டை நாட்டின் குறிஞ்சி முதலிய நிலவளங்களை அவர் கூறுங் கால், அவை, காளத்தி முதலிய தலங்களைக் கொண்டுள்ளமையினுலேயே சிறந்து நிற்கின் றன என முடித்தலைக் காணலாம். ஆகவே, இறைவன் உயிர்களின் பொருட்டுத் திருக் கோயில் கொண்டுள்ள தலங்களின் பெருமை களை விளக்குதல் அவரது கருத்தேயன்றி யன்றிவேறில்லை என்பது விளங்கும். அம் முறையில் அவர் கூறுதல்தானே அவரது பிறந்த நாட்டின் பெருமை கூறுதலாக அமையுமாயின், அஃது அவர்க்கு இயற்கை யில் வாய்த்த ஒரு வாய்ப்பெனக் கொள்ளுதல் வேண்டுமன்றி, தாம் பிறந்த நாடென்பது பற்றியே அங்ஙனம் கூறினர் எனக்கொள் ளுதல் கூடாததாம். அரிய பொருள்களை அவற்றின் பயன் நோக்கிச் சிறிது இயைபு பற்றி எவ்விடத்திலாயினும் தந்துரைத்தல் சான்ருேர் நெறியே என்பதனை வேறு நூல் களில் வரும் சில பொருள்கள் பற்றியும் உணரலாகும்.

இனித் திருக்குறிப்புத் தொண்ட நாய ஞர் புராணம் அவரது வரலாற்றைக் கூற எழுந்ததேயாயினும், அஃது ஏகாம்பரநாதர் புராணமுந்தான் என்பதும் அவர் கொள்ள வைத்தமையின், உமையம்மை பூசித்த வர லாற்றை விரித்துரைத்தது பெரிதும் இயை புடையதேயாய் நிற்றலும் அறிக. இக்கருத் துத் தோன்றவே, ஏனைய புராணங்களிற் போல் இறைவனைப் பொதுப்படக் கூருது, இப் புராணத்துள் 'ஏகாம்பரநாதர்' எனவும், 'அம்மையின் வழிபாட்டு நிலையை அளக்கத் துணிந்த பெருமான், இந்நாயனரது திருத் தொண்டின் நிலையை அளக்க வந்தான்' என வும் அவர் குறிக்கின்ருர். ஆகவே, தொண்டைநாட்டின் சிறப்பினையும், காஞ்சி நகரின் பெருமையையும் இன்றியமையாத சில பயன் கருதியே சேக்கிழார், இந்நாயனர் புராணத்துள் விரித்துக் கூறினர் என்பது பெறப்படும். இந்நகருள் வாழ்ந்த நாயன்மார் வேறு சிலரும் உளர்; அவர்கள் வரலாற்றில் இந்நாடு நகரங்களைப்பற்றி ஒரு சொல்லே னும் பின்னர் அவர் கூறினரில்லை.

நாயனரது குலம்

எத்துணை விரித்துக் கூறினும் அத்துணை யும் பொருந்துவதாய அளவற்ற பெருமையை

யுடைய அக்காஞ்சியம்பதியில் வாழ்ந்த திருக் குறிப்புத் தொண்ட நாயனர் தோன்றி யருளிய குலம் ஏகாலியர் குலம். "கச்சிப் பலதளி" என்னுமாறு அந்நகரத்தில் உள்ள அளவற்ற சிவாலயங்களுள் கடைவீதியில் உள்ள, 'முத்தீசுரர் கோயில்' என்னும் திருக் கோயிலே இந்நாயனருக்கு இறைவன் திரு வருள் புரிந்த இடம் என்பதனை,

"சித்த மாசொரீஇ விளங்குமே காலியர்
திருக்குறிப் புத்தொண்டர்
அத்தலத்தினில் வீடுபே றெய்தினர்"

எனக் காஞ்சிப்புராணங் கூறுதலும், அக் கோயிலின், அறங்காவல் முதலியன ஏகாலி யருக்கு உரியனவாய் இருத்தலும் இங்கு அறியத் தக்கன.

உணர்வின் பெருமை

குலத்தால் ஏகாலியராய் இருந்த இந் நாயனர், உணர்வால் ஒப்பற்ற உயர்பெருந் தவத்தராய் விளங்கினர். அஃதாவது, முதற் றொட்டே தமது மனம், மொழி, மெய் என் னும் மூன்றனையும் சிவபிரானது திருவடி யிலே பொருந்தச் செய்து ஒழுகினர். இதனை,

"மண்ணின்மிசை வந்ததற்பின்
மனமுதலா வினைமூன்றும்
அண்ணலார் சேவடியின்
சார்வாக அணைவிப்பார்"

என்றருளினர் சேக்கிழார். மனம் முதலிய மூன்றனையும் இறைவன் திருவடிக்கே உரி யனவாகச் செய்தல் சிறந்த யோகிகட்கும் கூடாத ஒன்று. ஒருநெறிய மனம் வைத்த ஆளுடைய பிள்ளையார், முத்தொண்டும் புரிந்த ஆளுடைய அரசுகள், "வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும் நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி—உய்த்தனன் தனக்கே திருவடிக்கடிமை உரைத்தக்கால் உவமனே யொக்கும்" என் றருளிய ஆளுடைய நம்பிகள், "சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்—கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி—வந்தனையும் அம் மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி" என்றருளிச்செய்த ஆளுடைய அடிகள் என்னும் இவர்களைப் போன்ற பெருமக்கள் ஒரு சிலர்க்கே அந்நிலை கூடுவ தாகும். ஆகவே, அவ்வரியநிலையினைப் பிறப் பிலேயே பெற்று நின்ற இந்நாயனரது பெரு மையை யாம் எவ்வாறறிந்து சொல்லுதல் கூடும்!

வாழ்க்கை நிலை

காஞ்சி ஒரு கோநகரம். அதனால், அது அதற்கேற்ற பல சிறப்புக்களைப் பெற்றிருத் தல் இயல்பு. கோநகராதலே யன்றி வேறு பல பெருமைகளையும் உடையது காஞ்சி நகரம். அதனால், அஃது உலகப்புகழ் பெற்று விளங்குவதாகும். இது,

"தேரொலிக்க மாவொலிக்கத்
திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி

எனச் சேக்கிழாரால் குறித்தருளப்படு கின்றது.

இதன் அகநகருள், 'நகர மாந்தர்' எனப் பட்டுச் செல்வச் சிறப்புடன் வாழ்ந்தோருள் ஒருவரல்லர் திருக்குறிப்புத் தொண்ட நாய னர்; மற்று, அதன் புறநகருள், அகநகரத்து மக்களுக்கு ஆடையொலித்துக் கொடுக்குந் தொழிலாளராய் இருந்தவரே யாவர்.

"அவ்வகைய திருநகர
மதன்கணொரு மருங்குறைவார்"

எனவும்,

"காஞ்சி—ஊரொலிக்கும் பெருவண்ணர்"

எனவும் போந்த சேக்கிழாரது திருமொழிகள் இதனை நமக்கு நன்கு விளக்குவனவாகும். (துவைத்தல், ஒலித்தல் என்பன ஒருபொருட் சொற்கள்.) 'பெருவண்ணார்' என்றது, நற் பண்புடையவராக நகர மக்களால் கருதப் பட்டார் என்பதனைக் குறிப்பதாகும்.

திருத்தொண்டின் சிறப்பு

பிறப்பாலும் தொழிலாலும் ஏகாலிய ராய் இருந்த இவர், தம் வாழ்க்கைநிலைக்கு ஏற்பச் சிவனடியார்களுக்குக் கூலிபெறுமலே ஆடையொலித்துக் கொடுக்கும் தொண் டினைச் செய்துவந்தார். எனவே, ஊரார்க்கு ஆடையொலித்துக் கொடுத்தலை வாழ்க்கை யின் பொருட்டாகவும், அடியார்க்கு ஆடை யொலித்துக் கொடுத்தலை அன்பு காரணமாக வும் செய்துவந்தார் என்பது புலனாகும். இவரது இவ்வுண்மை நிலையை நோக்கின், இவரைப் பிறப்புந் தொழிலும் பற்றி, 'வண்ணர்' என எளியவராக மனத்தால் நினைத்தலோ, வாயாற் சொல்லுதலோ கூடுமோ! கூடா என்பதனை,

"ஊரொலிக்குப் பெருவண்ணார்
எனஒண்ணு உண்மையினர்
நீரொலிக்க அராஇரைக்க
நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க்
கொலிப்பர்பெரு விருப்பினெடும்'

என மனம் உருகிப் பாடுகின்றார் தொண்டர் சீர் பரவுவார்.

சிவனடியார்களது ஆடையிலுள்ள அழுக்கைக் கழுவவந்த இவரது செயல், அவ்வாறு ஆடையைக் கழுவுதலாயே ஒழியாது, பிறவிக்குக் காரணமாய் உள்ள மும்மல அழுக்கைக் கழுவுவதாய் அமைந்தது என்பதனை அருண்மொழித் தேவர்,

"...................அடியார்தம்
தூசுடைய துகள்மாசு
கழிப்பார்போல் தொல்லைவினை
ஆசுடைய மலம்மூன்றும்
அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து
வருநாளில்"

என உணர்த்துகின்றார்.

இறைவன் அருட்செயல்

இத்துணைப் பெருநிலையினராய் இருந்த இந் நாயனாரை நாயனாராக நம்மனோர் அறிந்து அவர்பால் அன்பு செலுத்தி உய்தற் பொருட்டு இறைவன் செய்த அருட்செயலை இனி நோக்குவோம்.

இறைவன் வருகை

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் சிவனடியார்களுக்கு அவர்கள் சொல்லாமல் தாமே கேட்டு வாங்கி ஒலித்துக் கொடுத்து வருதலாகிய தொண்டினைச் செய்துவரும் நாட்களில், வானம் மழைபொழியும் நிலையிலுள்ள நாட்களில் ஒருநாளில் இறைவர் இந் நாயனாரது பெருமையை உலகிற்கு அறிவித்தற்பொருட்டு, மிகவும் எளியவராய் மெலிந்த உடம்புடனும், அழுக்கேறிய உடையுடனும் சிவனடியார் வேடத்துடன் இவரிடம் வந்தார். திருமேனி முழுவதும் அழகாகப் பூசப்பட்டிருந்த திருவெண்ணீற்று ஒளியின் இடையிலே அவரது உடை கருமேகம் போலக் காட்சியளித்தது.

நாயனார் அடியவரை வரவேற்றல்

அவரைக் கண்ட உடனே திருக்குறிப்புத் தொண்டர் மிகவும் மகிழ்ச்சியுற்று, எதிர்கொண்டழைத்து, அன்பினால் உடலில் மயிர் சிலிர்க்க அவர்முன் விழுந்து வணங்கி யெழுந்து, தம்மிடம் வந்த அவரது கருத்தை (ஆடையை வெளுத்துக்கொண்டு போக வேண்டும் என்னும் எண்ணத்தை) அறிந்து, "அடிகளே, திருமேனி மிகவும் மெலிந்திருத்தற்குக் காரணம் என்னோ!' என்பது போலும் முகமனுரை பலவற்றைக் கூறி, 'உமது ஆடையை வெளுத்துக் கொடுத்தற்குத் தந் தருளும்' என்று கேட்டார்.

அடியவரது கட்டளையும் நாயனாரது உடன்பாடும்

அடியவராய் வந்த இறைவர், 'இந்தக் கந்தையுடை ('கந்தை' என்பது முழங்கால் அளவாக உடுக்கும் ஆடைக்குப் பெயர், இதனை, 'வட்டு,' எனக் கூறுவர்.) கையால் எடுக்கவும் கூடாத வகையில் மிகவும் அழுக்கேறி யிருத்தலால் வெளுக்கப்பட வேண்டுவதே; ஆயினும், குளிர்பொருந்திய இந்த நாளில் இக்குளிரைத் தாங்கமாட்டாமையால் இதனை உடம்பைவிட்டு நீக்காமல் அப்படியே உடுத்துக்கொண்டு இருக்கின்றேன்; ஆகவே, சூரியன் மறைவதற்குள் திரும்பக் கொடுப்பதாயின் தருகின்றேன்' என்றார். நாயனார், 'நல்லது! அதுபற்றி நீங்கள் ஐயுறுதல் வேண்டா: சிறிதும் காலந் தாழ்த்தலின்றி மாலைநேரம் வருவதற்குள் கொண்டுவந்து கொடுக்கின்றேன்; ஆடையைத் தந்தருளுங்கள்' என்றார்.

அடியவர், 'இதனை வெளுத்து உலர்த்தி விரைவில் இப்பகற் பொழுதிற்குள்ளே கொடுத்துவிடுதல் வேண்டும்; இல்லையேல், நீர் இந்த உடம்பிற்குத் தீங்கிழைத்தவர் ஆவீர்' என்று சொல்லிக் கந்தையைக் கொடுத்துவிட்டுச் சென்றார். அதன்பின் அவர் எங்குச் சென்றார்? எங்கே இருந்தார்? என்பதனை ஒருவரும் அறியார். (மறைந்தருளினார்.)

முதலில் நாயனார், "கந்தையினைத் தந்தருளும்கழுவ" எனக் கேட்டதும், அதற்கு அடியவர், "மேல் கடற்பால் - அக் குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன் தருவீரேல்-கைக்கொண்டுபோய் ஒலித்துக் கொடு

வாரும்'' எனக் கூறியதும், 'கந்தையை வெளுத்து உலர்த்திக் கொடுப்பது' என்னுங் கருத்திற் கூறியனவே யன்றி வேறில்லை. ஏனெனின், 'ஆடையை வெளுத்துக்கொடுப் பது' என்பது, 'பின்பு அதனை அப்படியே உடுத்துக்கொள்ளும் நிலையில் கொடுப்பதே' என்பது வழக்கத்தில் நன்கறியப்பட்டது. ஆயினும், அடியவர், "கந்தையிது ஒலித்து உணக்கித் தாரீரேல்'' எனப் பின்பு அதனை எடுத்துக் கூறியது, நாயனாரை மேலும் ஒரு சிக்கலில் அகப்படுத்தியது அன்று; 'இன்று வானம் உள்ள நிலையில் உலர்த்துதல் அரிதாகும்' என்பதனை நினைவு படுத்தியதேயாம். "கடிது, இன்றே தாரீரேல்'' என விரைவையும், கால வரையறையையும் மீண்டும் வலியுறுத்தியதும் அதன்பொருட்டேயாம். நாயனார் அவ்வளவையும் எண்ணியே வாங்கிச் சென்றார் என்பது இவற்றாலெல்லாம் இனிது விளங்கும்.

நாயனாரது முயற்சி

கந்தையை வாங்கிச் சென்ற நாயனார், அடியவரது கருத்துப்படியே அதனைத் திரும்பக் கொடுத்து விடுவதற்காகச் சிறிதும் காலந் தாழ்த்தாது அதன்கண் உவர்மண் முதலியவற்றைச் சேர்த்தல், வெள்ளாவி வைத்தல், துவைத்தல் முதலியவற்றையெல்லாம் விரைவிற் செய்து நன்கு வெளுத்து முடித்துப் பிரித்து உலர்த்தப் புகும்பொழுது, இறைவரது திருவருளால் மழை தொடங்கிவிட்டது. இதனை,

"மறிக்கரத்தார் திருவருளால்
மழையெழுந்து பொழிந்திடுமால்''

எனத் தொடங்கி விரிக்கின்றார் சேக்கிழார்.

அம்மழைதான் எத்தகைய மழை! கிழக்கு மேற்கு முதலிய திசைவேறுபாடுகள் தெரியாதபடி மேகங்கள் மிக அடர்ந்து மூடி, மழைத்தாரையும் கண்ணுக்குப் புலனாகாதபடி பேரிருளை உண்டாக்கிப் பொழியும் மழை. அதனைக் காணுந்தோறும் திருக்குறிப்புத் தொண்டர் ஒன்றுந் தோன்றாது கலக்கம் உற்றார். அடியவருக்குத் தாம் கூறிய உறுதிமொழியை நினைத்து, 'இனி யான் என்ன செய்வேன்!' என்று வருந்தினார்.

விடாது பொழிகின்ற மழையைப் பார்த்து, 'இப்படி எவ்வளவு நேரம் பெய்யும்! சிறிதுநேரமாயினும் விட்டே தீரும்,' எனக் கருதி வேறொன்றும் செய்யத் தோன்றாமல் நின்றிருந்தார். (இந்நாயனார் இறைவனை அடைந்தது சித்திரைத் திங்களாகையால், அப்பொழுது பொழியும் மழை சிறிது நேரம் சென்றபின் நின்று, வானம் வெளியாகும் என நினைத்தார் போலும்!)

நின்றிருந்தும் யாது பயன்! மழை விடவேயில்லை. சூரியனும் மறைந்துவிட்டான்; இராப்பொழுதும் அணுகிவிட்டது. அதனை, "மேவார்போற் கங்குல்வர'' என்கின்றார் சேக்கிழார்.

நாயனாரது துன்பமும் துணிவும்

இராப்பொழுது வந்துவிட்ட பின்பு நாயனார் செய்வது என்ன இருக்கின்றது! 'அந்தோ! அடியவருக்கு நான் உடன்பட்ட தொண்டும், உறுதிச்சொல்லும் பொய்த்தொழிந்தனவே; என்செய்வேன்!' என்று சொல்லிச் சோர்ந்து விழுந்தார்!

பின்னர் எழுந்து, 'இம்மழை சிறிது நேரமாயினும் விடும் விடும் என்று நினைந்து ஏமாறினேன்! விடாது என்று அறிந்திருப்பின், முன்பே ஆடையை இல்லத்தில் கொண்டுபோய் விரித்துக் காற்றோட்டத்தில் புலர்த்தியிருப்பேன்! மழை விடுவதாயினும் விடுக என்று அதனைச் செய்யாதொழிந்தேன்! என் அறியாமை இருந்தவாறு என்னே!' என்று பதைத்தார்.

"இந்த உடற்கு இடர்செய்தீர்'' என அடியவர் முன்பு கூறியவாறே அவரது மெலிந்த திருமேனி இன்று குளிரால் வருந்துமாறு செய்துவிட்டேன்; தவிர்க்கலாகாத இன்னதொரு பெரியதொரு தீங்கினைத் தலைவர்க்குச் செய்த அடியானாகிய எனக்கு இனி இதுவே தக்க கழுவாய்; அஃதாவது, அடியார்களது ஆடையை அழுக்கு நீக்குதற்காகப் புடைக்கும் பாறையின்மீது என் தலையைப் புடைத்துச் சிதறுவேன் என முடிவு செய்து கொண்டு சென்று அங்ஙனமே அக் கற்பாறையின்மீது தம் தலையைப் புடைத்தார்; அப்பொழுது, குழைகம்பராகிய ஏகாம்பரநாதரது செந்தாமரை மலர்போலும் திருக்கை அப்பாறையின் பக்கத்தே தோன்றி

அவரது தலை கல்லில் தாக்காதவாறு பிடித்துக்கொண்டது. நீர் மழை நீங்கிப் பூமழை பொழிந்தது.

நாயனார் திருவருள் பெறுதல்

உடனே இறைவனார் பெருமாட்டியுடன் விடையின்மீது நாயனார் காணக் காட்சி கொடுத்தருள, நாயனார் அன்பினால் மனம் உருகிக் கண்ணீர் பெருகிக் கைகூப்பி வணங்கி நின்றார்.

இறைவர் அவரைத் தமது அருட் பார்வையால் நோக்கி, 'உனது அன்பின் நிலையை மூவுலகத்தில் உள்ளவர்களையும் அறியச் செய்தற்பொருட்டு, நாமே இவ்வாறெல்லாம் செய்தோம்; ஆதலால், இனி நீ என்றும் அழிவில்லாததாய் உள்ள நம் உலகத்தில் பிறப்பிறப்பில்லாது வாழ்வாயாக' என்று அருளிச்செய்து சென்று, திருவேகம்பத் திருக்கோயிலை அடைந்தருளினார்.

நாயனாரது தொண்டின் நிலை

இந்நாயனார் செய்துவந்த தொண்டு அடியவர்க்கு அவர் கூறுமலே குறிப்பறிந்து ஆடை யொலித்துக் கொடுத்தல். அதனை, ஓர் அடியவர் ஒருமுறைக்கு இருமுறை பன்னிப்பன்னிச் சொல்ல, இவர் உடன்பட்டு நிறைவேற்ற இயலாத நிலையை இறைவன் உண்டாக்கினான் எனின், அஃது இவரது தொண்டிற்கு அன்றோடு ஒழியும் இறுதியைச் செய்ததேயாகும். தொண்டிற்கு இறுதி வந்துவிட்ட பின்பு, உண்மை நாயனார், தாம் இறுதி எய்தாது இருப்பரோ! இரார்! ஆகவே, அவர் அத்தகையதொரு முடிபினைச் செய்துகொண்டு, அவ்வாறே செய்யத் தலைப்பட்டார். என்னே இறைவனது சோதனையின் அளவும், அதற்கு எள்ளளவும் குறையாத நாயனாரது திருத்தொண்டின் நிலையும்! இந்நிலைமை இத்தகையதாதல் பற்றியன்றோ, இதனை மூவுலகும் அறியச் செய்தான் இறைவன்!

(இறைவன் இத்தகைய அடியவர்களை இவ்வாறு சோதித்தல், அவர்களது அன்பின் நிலையைத் தான் அறிதற்பொருட்டன்றி உலகத்தார் அறிந்துகொள்ளுதற்பொருட்டே என்பது பெரியபுராணத்துட் பல இடங்களிலும் இனிது எடுத்துச் சொல்லப்பட்டது.)

'மூவுலகம்' என்பவற்றுள் சுவர்க்கலோகம், நரகலோகம் என்பன மேலேயும் கீழேயும் இருப்பனவாகச் சொல்லப்படுதல் அவற்றின் நிலைமை பற்றியும் சேய்மையில் உள்ளனவாகச் சொல்லப்படுதல் அவற்றின் எல்லை பற்றியுமாகும். ஆகவே, அவை இந் நிலவுலகத்தோடும் கலந்துள்ளனவேயாம். அவை இவ்வுலக உடம்பின் வேறுபட்ட உடம்புகட்கு இடமாவன. அதனால், அவற்றையுடையவர் நம்மனோருடன் தொடர்பு கொள்ளுதல் அரிதாய் இருப்பினும், இங்கு நிகழும் சில பல நிகழ்ச்சிகளை அவரும் அறிகின்றனர் என்பதும், அச் செயல்கள் பற்றி அவர்கட்கு விருப்பு வெறுப்புகள் உண்டாகின்றன என்பதும் நூல்களின் துணிபு. ஆகவே, இறைவன், "மூவுலகும் நின்னிலைமை அறிவித்தோம்" என்றருளிச் செய்தது உண்மையேயாகும்.

"தேவர்கள் பூமழை பொழிந்தனர்' என்று கூறுதல், அவர்கள் மகிழ்ச்சியுற்றனர் என்பதை உணர்த்துதற்பொருட்டுச் சொல்லப்பட்டு வருவதொரு மரபு. அம்மரபுபற்றியே சேக்கிழார் பலவிடத்தும் அவ்வாறு கூறுவர்; இந்நாயனார் புராணத்திலும் கூறியுள்ளார்.

இங்ஙனம் இந்நாயனாரது பெருமையை இறைவன் மூவுலகமும் உய்ய உணர்வித்த பின்னரும் உணராது நாம் நாளை வாளா கழிப்போமாயின், நமது அறியாமையின் வலியை என்னென்பது! அதனால், "மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்—ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ" (சிவஞான சித்தியார்) என்னும் இலக்கணத்திற்கு ஒரு சிறிதாயினும் இலக்கியமாக, மனமுதலாயின மூன்றும் அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிக்கும் நிலையைப் பெறுதற்பொருட்டு இந்நாயனாரை வழிபடுவோமாக.

காஞ்சிபுரம் :—ஏகாம்பரநாதர் சந்நிதியில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் 17-ஆம் ஆண்டு நினைவுத் திருநாளான 18-3-61ல் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகளின் பொருளுதவியிலிருந்து அன்று பகலில் சிவநேசச் செல்வர்களுக்குத் திருவமுது செய்விக்கப்பெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருவாறன்விளைப் பதியையநுபவித்து முடித்தோம்கீழ். இப்போது திருவல்லவாழ்ப்பதியை யநுபவிக்கப் புகுகின்றோம். இப்பதியை மலைநாடர் 'திருவல்லாய்' என வழங்குவர்கள். 'திருவல்லவாழ்' என்பதே ஆழ்வார்களுகந்த திருநாமம். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடிய தலம் இது. இருவரும் பதிகம் பாடியுள்ளார்கள். நம்மாழ்வாருடைய பதிகம் திருவாய்மொழியாயிரத்தில் ஐந்தாம் பத்தில் ஒன்பதாவதாக அமைந்துள்ளது. திருமங்கையாழ்வாருடைய பதிகம் பெரிய திருமொழியாயிரத்தில் ஒன்பதாம்பத்தில் ஏழாவதாக அமைந்துள்ளது. அவ்வாழ்வார் இத்தலத்தைப்பற்றிப் பெரிய திருமடலில் துணுக்கைப் பாடலும் பாடியுள்ளார்.

இங்கு நாம் நம்மாழ்வாருடைய அநுபவத்தை முன்னம் விவரித்துப் பின்னர் திருமங்கையாழ்வாருடைய அநுபவத்தை விவரிப்போம்.

நம்மாழ்வார் இத்திருப்பதியை யநுபவிக்குமிடத்துத் தாம் ஆண்மையை யிழந்து பெண்மையை எய்தினர். தலைமகள் தோழியர்க்குத் தன்னுடைய மனக்கிலேசத்தை யெடுத்துரைக்கும் பாசுரமாகப் பதிகம் அமைந்துள்ளது. திருவல்லவாழ் நகருட் சென்று அங்குறையும் பெருமானைத் திருவடி தொழக் கருதிய பராங்குச நாயகி அங்கேறப் புறப்பட விருக்கையில் தோழிமார்கள் இதம் சொல்லி மீட்கப் பார்த்து 'நங்காய்! தலைமகன் நம்மைத் தேடிவரப் பார்த்திருக்கை நமக்கு உயரிதேயன்றி நாம் அவனிருப்பிடந் தேடிச் செல்லுதல் தகுதியன்று காண்' என்று இனைய பலவுஞ் சொல்லித் தடை செய்கின்றனர் தோழியர். தலைமகளோ அங்ஙனம் ஸ்வரூபவுணர்ச்சி கொண்டு ஆறியிருக்க மாட்டாது படிகடந்து புறப்பட்டுச் செல்லுகையில் ஊரினுள்ளே புகமுடியாமல் புறச்சோலைகளின் வாய்ப்பு இவள் தன்னைக் கால் கட்டுகிறபடியை—அதாவது இப்படியான மாநஸாநுபவத்தைத், தோழியர்க்குக் கூறுகின்றாள்.

மலைநாட்டில் சோலைகளின் வளம் சொல்லவும் வேணுமோ? சோலைகளின் நறுமணத்தைக் கொய்துகொண்டு புறப்படுகிற தென்றலும், வண்டுகளின் இனிதான மிடற்றோசையும், ஊரினுள்ளே அந்தணர்களின் வைதிகாநுஷ்டான கோலாஹலங்களும் மற்றுமுண்டான ஸம்பிரமங்களுமெல்லாம் ஊர் வெளியிலேயே மிகவும் நலிய, அவற்றாலுண்டான கிலேசமே இப்பதிகமாக வடிவெடுத்ததென்னும்படியாயிருந்தது

இனிப் பாசுரந்தோறும் புக்கு அநுபவிப்போம்.

1. மானேய் நோக்கு நல்லீர்!

திருவல்லவாழுறையுங் கோனாரை அடியேன் அடிகூடுவது என்றுகொலோவென்று தோழிமாரை நோக்கிக் கேட்கின்றாள் தலைவி. இது திருக்குருகூராகிற தன்னூரிலிருந்து கொண்டே கேட்கிறபடியன்று. ஊரைவிட்டுக் கிளம்பித் திருவல்லவாழ்ப்பதியின் அருகே சென்றாயிற்று. வெளி நிலங்களின் இனிமையானது உள்ளுப் புகவொட்டாமல் ஆகர்ஷிக்கின்றது. ஆகாசத்தை யளாவி ஓங்கி வளர்ந்த பாக்கு மரங்களைக் காணுகின்றாள். பட்டரென்னு மாசிரியர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் திருவரங்கநாதனுடைய திருக்கழுத்தினழகை வருணிக்கும் சுலோகத்தில் "ரமயது ஸமாம் கண்ட: ஸ்ரீரங்க நேது: உதஞ்சித க்ரமுக தருண க்ரீவாகம்புப் ரலம்ப மலீம்லுச:" என்று பாக்கு மரத்தின் கழுத்து பாகத்தோடொத்திருப்பதாகப் பேசியுள்ளதனால், உள்ளுறையும் பெருமானுடைய திருக்கழுத்தினழகு இங்ஙனே யன்றோவிருப்பது! என்று நினைந்து நைந்து உள்கரைந்துருகி வீழ்கின்றாள் தலைவி; அதற்குமேல், மதுவொழுகுகின்ற மல்லிகை மலர்களைக் காணுமிடத்து, அமுத நீரொழுகும் திருப்பவளத்திலே திருமுத்துக்கள் திகழும்படியை

நினைத்து நைகின்றாள்; இங்ஙனே இவை ஒவ்வொன்றும் உள்புகவொட்டாதே புறம்பே கால்தாழப் பண்ணுகையாலே, தோழீ! இவ்வாபத்துக்கு நான் தப்பிப் பிழைத்து உள்ளே புக்கு எம்பெருமானைத் திருவடி தொழப் பெறுவது என்றைக்கோ? என்கிறாள்.

தலைவி இங்ஙனம் சொல்லக்கேட்ட தோழியானவள் 'இவள் வெளிநிலத்திலேயே, இப் பாடுபடும்போது கோவிலினுள்ளே புகுந்தாளாகில் குறியழியாமே மீளகில்லாள்; ஆகவே இவளை எவ்வகையினாலும் ஹிதஞ் சொல்லி மீட்பதே நன்று: மீட்கா தொழிந்தோமாகில் இவளை நாம் இழக்கவே நேரும்; இது பெருங்கேடாய் முடியும்; ஆகவே இவளுடைய உறுதியைக் குலைத்து மீட்போம்' என்று கருதி ஒன்று சொல்லத் தொடங்கினாள்; 'தலைவீ! இருந்தவிடத்திலேயே யிருந்து கொண்டு அப்பிரானது திருக்குணங்களை யநுபவிப்பதுதான் உற்றது; பகவத்கீதையிலும் கண்ணபிரான் கூறியிருப்பது உனக்குத் தெரியுமே; "மச்சித்தா மத்கத ப்ராணா: போதயந்த: பரஸ்பரம்; கதயந்தச் ச மாம் பக்த்யா துஷ்யந்தி சரமந்தி ச." (அத்யாயம் 10; சுலோ. 9.) என்றன்றோ கீதாசார்யன் கூறியிருப்பது. இருவர் நால்வராய்க் கூடியிருந்து "கோவிந்தன் குணம் பாடி ஆவிகாத்திருப்பேனே" என்று ஆண்டாளருளிச் செய்தபடி அவனது திருக்குணங்களைப் பேசிக்கொண்டு கிடந்தால் இதிற்காட்டிலும் பிறிதோரின்பமுண்டோ? அபாயமில்லாததான இவ்வழியைவிட்டு நீ ஏதுக்கு வீணே துவள்கின்றாய்? இந்த அதிப்ரவிருத்தி உனக்குத் தகாது" என்று இனையபலவும் சொன்னாள் தோழி. அது கேட்ட தலைவி,

2. தோழிமீர்காள்! எம்மை நீர் நலிந்து என் செய்தீரோ?

தோழிகாள்! என் பிரகிருதியை நெடு நாளாய் நன்றாக அறிந்திருக்கின்ற நீங்கள் எனக்கு இன்பமானவற்றைச் சொல்லி என்னைத் தேற்றவேண்டியது உரித்தாயிருக்க, நான் இசையக் கூடாததைச் சொல்ல முயல்வதனால் உங்கட்கு என்ன பயனுண்டாகும்? உங்கள் வழியிலே நான் மீளப்போகிறேனென்று எண்ணமோ? அஃது ஒருநாளுமில்லை. திருவல்லவாழ்நகர்ச் சோலைகளிலிருந்து வீசுகின்ற நறுமணம் மிக்க தென்றலானது என்னை அவ்வழியே யிழுக்க, நான் உங்கள் வழியே வருவதற்கு ப்ரஸக்தி உண்டோ? அத்தலத்துப் பெருமானுடைய பாதாரவிந்த ரேணுவைச் சிரமீது அணியப் பெற வேணுமென்றன்றோ எனக்கு ஆவலோடுகின்றது. அது கைகூடும் வழியில் ஏதேனும் சொல்லவல்லீ கோளாகில் சொல்லுங்கோள். வீணாக என்னை நலிவது வேண்டா; இப்படி நீங்கள் நலிவது இன்று புதிதன்று; ஏற்கெனவே பலகாலும் நலிந்திருக்கின்றீர்கள், அப்போதுகளில் நீங்கள் ஏதேனும் பயன் கண்டதுண்டோ? இது காறும் காணாத பயனை இப்போதாகக் காணப் போகிறீர்களோ? நீங்கள் தோழியரான வாசிக்குச் சேர இங்ஙனம் தடை செய்வது தகுதியன்று என்றாளாயிற்று.

"திருவல்லவாழ் நகருள் நின்ற பிரானடி நீறு அடியோங் கொண்டு சூடுவது என்று கொல்?" என்றவிதற்கு இரண்டு வகையான கருத்துக் கூறலாம். தான் கோயிலினுள்ளே புகுந்து திருவடிதொழுது அந்தத் திருவடியிலுள்ள துகள்களைத் தலைக்கு அணியாகச் சூடப்பெற வேணுமென்பது ஒரு கருத்து. வெளிநிலங்களிலேயே வியாமோஹங் கொண்டு வீழ்கின்ற நான் உள்ளே புக்கு அநுபவிக்க முடியாதெனினும், நீங்கள் தரித்திருக்கவல்லீர்களாதலால் நீங்களாவது உள்ளே புகுந்து அப்பெருமானது திருவடித் துகளைக் கொணர்ந்து சூட்ட, நான் சூடப் பெறவேணுமென்பது மற்றொரு கருத்து, நாச்சியார் திருமொழியில் "புடையும் பெயரகில்லேன் நான் போட்கன் மிதித்த அடிப் பாட்டில், பொடித்தான். கொணர்ந்து பூசீர்கள் போகாவுயி ரென்னுடம்பையே" என்ற பாசுரத்திற்குச் சேர்ந்த கருத்து இது.

திருவல்லவாழ் நகருள் நின்ற பிரானுடைய திருவடிகளில் நீறு ஏது? விபவாவதாரமாயிருந்தால் வெளியே ஸஞ்சாரம்பண்ணித் திருவடிகளிலே துகள் உண்டாகப் பெறலாம்; அர்ச்சாவதாரத்தில் அதற்கு ப்ரஸக்தி இல்லையாயிருக்க "திருவல்லவாழ் நகருள் நின்ற பிரானடிநீறு அடியோங் கொண்டு சூடுவது என்று கொல்?" என்றது எங்ஙனே? என்று சிலர் கேட்கக் கூடும். இங்கு மருமமுணர்த்துகின்றோம். அர்ச்சாவதாரங்களில் இருந்த விடத்திலேயே யிருப்பதாகவும் சுதந்

திரமாக வெளியே ஸஞ்சாரமில்லையாகவும் நினைக்க வேண்டா; இப்பாட்டின் இரண்டா மடியில் "பொன் திகழ் புன்னை" என்றருளிச் செய்திருப்பதிலிருந்து நினைவுக்கு வந்ததோர் இதிகாசத்தை இங்குத் தெரிவிக்கின்றோம்;

திருவரங்கம் பெரிய கோயிலில் சந்திர புஷ்கரிணியின் கரையில் புன்னை மரமொன்று அநாதிகாலமாகவுள்ளது. இதைப் புன்னை மரமென்று சொல்லுவதில்லை; திருப்புன்னை யென்றே ஆசிரியர்கள் வழங்குவர்கள்; திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களில் இத் திருப்புன்னையின்கீழ் விளைந்த அர்த்த விசேஷங்களைப் பற்றிப் பேசியிருப்பனவுள. இத் திருப்புன்னையைப்பற்றி ஸ்ரீபட்ட ரென்னு மாசிரியர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (சுலோ. 48) "ஸ்ரீரங்கராஜ கரகம்ரித சாகிகாப்ய:" என்பதில் கூறியிருக்கும் இதிகாசம் கேளீர்;- இரவில் அரவணை யமுது செய்தான பிறகு அர்ச்சகர்கள் திருக்காப்பு சேர்த்துக்கொண்டு போனபிறகு, ஸ்ரீரங்கநாதனும் ஸ்ரீரங்க நாச்சியாரும் *ஆராமஞ் சூழ்ந்த அரங்கமான வதில் விளையாடப் புறப்படுவர்களாம்; விளை யாடும்போது இத்திருப்புன்னையின் மலர் களைப் பறித்துக் காதணியாக இட்டுக் கொள்ள விரும்புவளாம் ஸ்ரீரங்கநாயகி; அப் போது மலர் கொய்வதற்குப் பாங்காக ஸ்ரீரங்கநாதன் தனது திருக்கையினால் இம் மரத்தின் கிளைகளைத் தாழ்த்துவனாம்; அவற்றினின்றும் பிராட்டி பூக்கொய்து கர்ணபூஷணமிட்டுக் கொள்ளுவளாம். இத் தகைய பெருமை வாய்ந்ததாம் இத்திருப் புன்னை.

இதனால் அர்ச்சாவதாரத்திலும் எம் பெருமான் சுதந்திரமாக வெளியே புறப்பாடு கண்டருள்வதுண் டென்பது போதரும். இது திருவல்லவாழ் நகருள் நின்ற பிரானுக்கு மொக்கும். ஆகவே அப்பெருமானது திருவடி களில் துகள் காண்பது ஸம்பாவிதமே யென்று கொள்க.

3. "தோழிமீர்காள்! எம்மைநீர் நலிந் தென் செய்தீரோ" என்னும் வாக்கியம் கீழிரண்டாவது பாட்டிலும் மேல் நான்கா வது பாட்டிலு முள்ளதனால் அஃது இப்பாட் டிலு முள்ளதாகக் கொள்ளத் தகும். தோழிகள் மீண்டும் ஹிதஞ்சொல்லி மீட்கப் பார்த்தனர். அவர்களை நோக்கித் தலைவி யானவள்; 'தோழிகாள்! நீங்கள் உந்தமக்கு விருப்பமானதைச் சூடிக்கொண்டு வாழ்வது போல நானும் எனக்கு விருப்பமானதைச் சூடிக்கொண்டு வாழ நினைத்தால் இதில் என்ன பிசகு? என்னை நீங்கள் கண்டிப்பது ஏன்?' என்றாள்: அதற்குத் தோழிகள் "உனக்கென்று ஒரு தனி வழியுண்டோ? எங்கள் வழியிலேதான் நீ வந்து தீரவேண டும்" என்ன; அதற்குத் தலைவி சொல்லலுற் றாள்; திருவல்லவாழ் நகரிலே பரமவைதி கர்கள் கானம் செய்கிற ஸாமவேதத்தி னொலி யும் அங்குற்ற ஓமப்புகையின் பரிமளமும் என்னை அவ்வழியே இழுப்பது கண்டி கோளே; அத்தலத்துப் பெருமானுடைய திருவடிகளையே அநவரதமும் கண்டுகொண் டிருக்கவேணுமென்னுங் காதலையுடைய வெனக்கு அந்தக் காதல் நிறைவேறவழி சொல்லவல்லி கோளாகில் சொல்லுங்கள்— என்றுளாயிற்று. "பாடுநல் வேதவொலி" என்றவிடத்து, நல்வேத மென்றது ஸாம வேதத்தை யென்று ஒரு சாரார் கொள்கை. பொதுவாக வேதத்தைச் சொன்னபடியென்று மற்றொரு சாரார் கொள்கை. பாடும் என்ற அடைமொழிக்குச் சேர ஸாமவேத மென்று கொள்வது சிறக்கும். கானம் செய்யப்படு வது ஸாம வேதமேயாகுமன்றோ. திருநாட் டில் ஏதத் ஸாம காயந் ஆஸ்தே என்று உப நிஷத்து ஸாமவேதகானம் நிகழ்வதாகச் சொல்லியிருப்பது காண்க,

4. பாசுரம் தொடங்கும்போதே "நிச் சலும் தோழிமீர்காள்! எம்மைநீர் நலிந்துஎன் செய்தீரோ?" என்கையாலே தோழிமார்களின் தொந்தரவு இடையறாது நிகழ்வதாகத் தெரி கின்றது. தோழிகள் தலைவிக்குத் துணைவி களாக இருக்கவேண்டியது கடமையா யிருக்க, தாய்மார்போல இவர்களும் நலிவது ஏன்? என்று சங்கை தோன்றக்கூடும். இங்கு விரிவாகச் சில விஷயங்கள் தெரிவிக் கப்படுகின்றன கேளீர். திவ்யப்பிரபந்தங் களில் தாய் பேச்சாகவும் தோழி பேச்சாகவும் தலைவி பேச்சாகவும் வருமிடங்களை ஆராய்ந் தால் ஒவ்வொன்றும் விசித்திரமாயிருக்கும். தாய் பாசுரமான வொரு பதிகத்தில் "தோழிமார் பலர் கொண்டுபோய்ச் செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்" என்றுள் ளது. அதாவது, தோழிமாரன்றோ இவளைக் கொண்டுபோய் பகவத் விஷயத்திலே அகப்

படுத்தி இப்படியாக்கினார்களென்று தாயானவள் தோழிமார் மேலே பழியிடுவது காண்கிறோம். தோழி பாசுரமானவொரு பதிகத்தில் "துலைவில்லிமங்கலம் கொண்டுபுக்கு அமுதமென்மொழியாளை நீர் உமக்கு ஆசையின்றியகற்றினீர்" என்றுள்ளது. அதாவது, தாய்மாரான நீங்களேயன்றோ இவளை இளமையில் துலைவில்லி மங்கலத்திலே கொண்டுபோய் அவன் வடிவழகைக் காட்டி யீடுபடுத்தி இப்போது உங்களுக்கு ஆகாதபடி செய்துவைத்தீர்கள்!' என்று தோழியர் தாய்மார் மேலே பழியிடுவது காண்கிறோம். தலைவி பாசுரமான வொரு பதிகத்தில் "இணைக்கி எம்மை யெங்தோழிமார் விளையாடப் போதுமினென்னப் போந்தோமை" என்றுள்ளது. அதாவது, எம்பிரானே! உன்னை வெறுக்கிறதென்? உன் பக்கலிலே அகப்படுத்தின தோழிமாராலே வந்ததன்றோ விது! என்று தலைவி தோழியர்மேல் பழியிடுவதையும், தலைவி பேச்சான மற்றொரு பதிகத்திலே "எங்ஙனேயோ வன்னைமீர்காள்! என்னை முனிவது நீர்?" என்று, தாய்மார்களே! எனக்கு முந்துற முன்னம் அவ்விஷயத்தைக் காட்டி இவ்வளவான அன்பை விளைவித்த நீங்கள் இப்போது என்னைச்சீறுகிறபடி என்னே! என்று தலைவி தாய்மார் மேலும் பழியிடுவதையும் காணா நின்றோம்.

அப்பதிகந் தன்னிலேயே "முன்னின்று யென்று தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்" என்கையாலே, இதற்கு முன் ஒருவர் கண்படாதபடி வளர்ந்து போந்த நீ இப்போது எல்லாருங் காணப் புறப்பட்டு முன்னே நின்றுயென்று தோழிமாரும் தாய்மாரும் ஒன்றுகூடித் தலைவியைச் சீறுவது காணா நின்றோம். தோழி பாசுரத்தில் "இவளை நீரினியன்னைமீர் உமக்காசையில்லை விடுமினே" என்று தாய்மார்க்குக் காரியம் உபதேசிப்பதுபோலே தோழி தலைமகளுக்குத் துணை செய்வதுகாணா நின்றோம். தலைவி பாசுரத்திலே "அன்னையருந் தோழியரும் நீரென்னே யென்னுதே நீளிரவும் துஞ்சுவரால்" என்று தாய்மாரும் தோழிமாரும் இந் நிலையில் என்னைத் தேற்றாதே இரவு முழுதும் உறங்கா நின்றார்களே! என்று இரங்கிச் சொல்லுவது காணா நின்றோம். ஒருகால் தலைவி தோழியரையும் தாயரையும் நோக்கி "அன்னையர்காள்! என்னுடைத் தோழியர்காள்! என் செய்கேன்?" என்று கேட்க; அதற்கு 'நங்காய்! எங்களை நீ கேட்கில் பகவத் விஷயத்தில் நின்றும் விலகி நிற்பது தான் தகுதி' என்று அவர்கள் சொல்ல; "உங்களோடெங்களிடையில்லையே" என்று என்னை விலக்க நினைக்கிற உங்களோடு எனக்கொரு சம்பந்தமில்லையென்று தலைவி இரண்டு தலையையும் உதறுகிறபடியையும் காணா நின்றோம். இங்ஙனனே பலவகையான நிகழ்ச்சிகள் திருவாய்மொழியில் காணப்படுதலால் ஒரு வரம்பிட்டு நியமிக்க முடியாதென்பது தத்துவம்.

(தொடரும்)

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

27—2—61 பழையவலம்-அகத்தீசுவரர் ஆலயத் திருப்பணி துவக்கவிழா. வெள்ளிக் கரணையை திரு. கே. டி. கோபாலகிருஷ்ண ராஜு அவர்கள் ரூ. 225-க்கு எடுத்துக்கொண்டார்கள்.

" திருச்சத்திமுற்றம்-சிவக்கொழுந்தீசுவரர் ஆலயத் திருப்பணித் துவக்கவிழா. வெள்ளிக்கரணையை திரு. கோபாலகிருஷ்ணன் செட்டியார் ரூ. 125-க்கு எடுத்துக்கொண்டார்கள்.

" பட்டீசுவரம்-தேனுபுரீசுவரர் ஆலயத்திருப்பணித் துவக்கவிழா. வெள்ளிக் கரணையை திரு. விசுவநாத அய்யர் ரூ. 251-க்கு ஏலத்தில் எடுத்துக் கொண்டார்கள்.

9—3—61 திருவதிகையில் அப்பர் அனுதை இல்லமும், மனவாசகம் கடந்தார் தமிழ் மறைப் பள்ளியின் அடிக்கல் நாட்டுவிழா-வெள்ளிக்கரணையை ஏலத்தில் திரு. பழனியப்ப முதலியார் (சிதம்பரம்) அவர்கள் ரூ. 251-க்கு எடுத்துக் கொண்டார்கள்.

ஆர். சி. எண். 34152/60 ஏ-2

கோயில்களில் கல்வெட்டு முதலியவைகளின்மேல் படிந்திருக்கும் பாசி, எண்ணெய், சுண்ணம்பு முதலியவைகளை நீக்கும் முறைகள்

—*—

கோயில்களில் கல்வெட்டுக்கள், தூண்கள், சுவர்கள் முதலியவைகளில் படிந்துள்ள பாசிகளை நீக்குவதற்கு அமோனிய (ammonia water) நீர் மிகவும் ஏற்றது என கண்டறியப் பட்டுள்ளது. பாசியுள்ள இடங்களில் அமோனிய நீர் தெளித்து ஈரமாக்கி, பிறகு பாசியின் வளர்ச்சி மிருதுபடும்போது தேய்த்துத் துடைத்து அப்புறப்படுத்த வேண்டும். தேங்காய்ப் பஞ்சு, நார் முதலியவைகளினுலான துடைக்கும் கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். (இரும்பு முதலிய) உலோகக் கம்பிகளினுலான துடைப்பான்களைப் பயன்படுத்தக் கூடாது. இம்முறை மேற்கொள்ளப்பட்டால் கல்வெட்டு முதலியவைகள் நன்ருகத் தூய்மை செய்யப் படமுடியும்.

எண்ணெய், எண்ணெய்ப்பசை (Oil and Grease) முதலியவைகளை 5 சதவிகிதம் நீரில் கலந்த லிசபோல் 'என்' (5 percent solution of Lissapol 'N' in water) கலவை யினுல் போக்கலாம். எண்ணெய் முதலியவை மிகவும் அழுத்தமாகப் படிந்திருக்குமானுல் 5 சதவிகிதம் நீரில் கலந்த சோடியம் கார்போனேட் (a solution of Sodium carbonate in water-5 percent) கலவையைப் பயன்படுத்தலாம். பசைப் பொருள்களை நீக்கிய பிறகு அவ்விடங்களை உப்பு கலப்பில்லாத நீரால் நன்ருகக் கழுவவேண்டும். கல்வெட்டு முதலியவைகள், சுண்ணும்புக்கல், சலவைக்கல் முதலியவைகளில் இருக்குமானுல் மேற்படி முறை கையாளக்கூடாது. கருங்கல், கந்தகக்கல், முதலியவைகளினுலானவைகளை (for granite, sand-stone and basalt slabs) தூய்மைப்படுத்த சோடியம் கார்போனேட்டை நன்ருகக் கழுவி விடுவோமானுல் இம்முறை மிகவும் ஏற்றதாகும். கருங்கல், வெள்ளைக்கல், கந்தகக்கல் (granite, sand-stone, basalt) முதலிய கடினமான-கால்சியம் கார்போனேட் கலப்பில்லாத—கற்களின்மேல் படிந்துள்ள சுண்ணும்புகளை நீக்க 2 சதவிகிதம் ஐட்ரோ குளோரிக் ஆசிட் (Hydrochloric acid) கலந்த நீர்க் கலவையைப் பயன்படுத்தலாம். இக்கலவையையும் சுண்ணும்புக்கல், சலவைக்கல் முதலியவைகளைத் தூய்மைப்படுத்த உப யோகிக்கக் கூடாது. சுண்ணும்புப் படிவங்களை நீக்கிய பிறகு ஆசிட் (Acid) போகும்படி யாக நீரினுல் நன்ருகக் கழுவிவிடவேண்டும்.

ஐட்ரோக்குளோரிக் ஆசிட் கலவையால் கல்வெட்டு முதலியவைகளைத் தூய்மைப்படுத்தும்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கலவை அதிகமானுல் (Overdose) கற்களைக் கெடுக்கும். அமோனியம், சோடியம், கார்போனேட்டுகளின் எளிய கலவை (light solution of Ammonia and Sodium carbonate) மிகவும் ஏற்றதாகும். மேற்படி மருந்துகளைக்கொண்டு தூய்மைப்படுத்தப்பட்ட பின் நீரினுல் நன்ருகக் கழுவிவிட வேண்டும்.

(The Arehaeological Chemist in India at Dehra Dun and Government Epigraphist for India at Ootacamund may be consulted if necessary).

இடமாற்றம்

மதுரை பெருமாள் தெப்பக்குளம் மேற்குத்தெரு 1வது எண் கட்டிடத்தில் இயங் கிக்கொண்டிருந்த இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அலுவலகம், மதுரை வடக்குப் பெருமாள் மேஸ்திரித் தெரு, 46வது எண்ணுள்ள கட்டிடத்திற்கு 6-3-61 முதல் மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களில் அஞ்சற் பெட்டி எண். 55 என்று குறிப்பிடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நவதிருப்பதி அநுபவம்

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L.]

தென்திருப்பேரை

இப்பதிகத்துக்கு முந்தின 'கங்குலும் பகலும்' என்ற பதிகத்திலே பராங்குச நாயகி அரங்கநாதனை அவாவி அவன் நினைவேயாய் "இட்ட காலிட்டகையளாய்" தன் வசமிழந்து அவனை நினைந்து புலம்பிக் கிடந்தமை கண்ட தாய்மார் இவளுக்கு என்ன நேருமோ என்று அஞ்சிப் புலம்பியமை கூறப்பட்டது. பதிகத்தின் முடிவில் "அடியடையாதாள் போல் இவள் அணுகியடைந்தனள் முகில் வண்ணனடியே" என்று தாய்மார் கூறினர்கள். விஷயம் ஸ்ரீரங்கநாதனைப் பற்றியதாகப் பதிகம் அமைந்ததெனினும் தாய்மார் "முகில் வண்ணா தகுவதோ என்னும்" என்றும், "மணிவண்ணா என்னும்" என்றும், "கடல்வண்ணாகடிகை காண் என்னும்" என்றும், "மாமாயனே என்னும் செய்யவாய் மணியே என்னும்" என்றும், "கடல்வண்ணா கண்ணனே என்னும்" என்றும், "அஞ்சன வண்ணனே என்னும்" என்றும் "நிலமகள் கேள்வனே என்னும்" என்றும் அந்நாயகி வாய்வெருவியதாகக் கூறினர்கள். பத்தாம் பாசுரத்திலே "அடியடையாதாள்போல் இவள் அணுகியடைந்தனள் முகில் வண்ணன் அடியே" என்று முடித்தார்கள். தாய்மார் பாசுரங்களை அரைக்காதாகக் கேட்டாள் நாயகி. "காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்" என்று பழமொழியன்றோ. எனவே தாயர் வார்த்தையில் அவளுக்குத் தேறியது ஒரு முடிவு. அவனுடைய கரிய திருமேனியின் ஈடுபாட்டிலேயே லயித்திருக்கிறது அவள் மனம். அவன்தானே விரும்பித் தன் திருவெயிற்றினால் இடந்து தூக்கி அதியாதரத்தோடு அணைத்த பூமிப்பிராட்டியின்பேற்றிலேமனம் சென்றிருக்கிறது. அந்நினைவேயாய் அவள் தலை சாய்த்தது 'முகில் வண்ணன்,' அடியிலே இவற்றை எல்லாம் ஒருவிதமாகச் சேர்த்து எண்ணினாள். பளிச்சென்று ஒரு உண்மை வெளியாயிற்று. உள்ளத்தில் ஒரு தெளிவு பிறந்தது. அந்தத் தெளிவிலே உள்ளத்தே ஒரு உறுதி ஏற்பட்டது. அந்த உறுதியைப் பெற்றுவிடும் துணிவும் உண்டாகிவிட்டது. அந்தத் துணிவிலே பிறந்ததுதான் "வெள்ளைச் சுரிசுங்கொடாழி யேந்தி" என்ற தென்திருப்பேரை எம்பெருமான் விஷயமான பதிகம்.

இப்பதிகத்துக்குள் இறங்குமுன் அன்பர்கள் இத்திருப்பதியைப் பற்றிவந்த தலவரலாற்றை நினைவுகூர்ந்து கொள்ள வேணும். எம்பெருமான் தன்போலக் கறுப்பிலழகியான பூமிப்பிராட்டியின்பால் விசேஷ கடாக்ஷம்பண்ண, தன் கருமையழகில் செருக்குற்ற அவனிமாது, திருமகள் வேண்டுகோளின்பேரில் வந்த துருவாச முனியைக் கொஞ்சம் கவனியாதிருக்க அவர் சபிக்கவே அச் சாபத்தால் நிறமிழந்து பொன்னிறம் பெற்று பின் சாபவிமோசனமாக இத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் நிகரில் முகில்வண்ணன் சந்நிதியிலே பேரை என்னும் திருநாமம் பூண்டு தவங்கிடந்து மீண்டும் தன் நிறம் பெற்றாள் என்பது தலவரலாறு. தாய்மார் அவன் கரிய வண்ணத்தையும் நிலமகள் கேள்வனே என்று பூமிப்பிராட்டியை அவன் விரும்பிச் சென்றதையும், முகில்வண்ணன் அடியை அடைந்ததையும் சொன்னதைக் கூட்டி எண்ணுகிறாள் நாயகி. அருகேயுள்ள தலத்தின் காட்சி அவள் மனக்கண்ணே தோன்றுகிறது. அடடா என்ன பேதைமை. நிறமிழந்தார் மீண்டும் நிறம்பெறச் சேரவேண்டிய தலம் இதோ கூப்பிடு தூரத்திலிருக்கிறது. இதை உணராதே இவ்வளவு இடர்ப்பட்டோமே என்று தன்னை நொந்துகொள்கிறாள். இனி என்ன யோசனை. தன் மாமை பசப்பூர்ந்து நிறம் பிறிதானது நீங்க மருந்துகைக்குள்ளாயிற்று. சென்று பெறவேண்டியது என்று துணிகிறாள். அத்துணிவு பிறந்ததும் அவளிடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் அவள் தாய்மார் தோழிமார் அதன் காரணமாகப்பட்ட பாட்டினையும் கூறுவதுதான் இப்பதிகம். இனி பதிகத்தை அணுகுவோம்.

முதற் பாட்டு

வெள்ளைச்சுரி சங்கொடாழியேந்தி
தாமரைக்கண்ணன் என்நெஞ்சினூடே
புள்ளைக்கடாகின்ற ஆற்றைக்காணீர்
என்சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்
வெள்ளச்சுகமவன் வீற்றிருந்த
வேதவொலியும் விழாவொலியும்
பிள்ளைக்குழா விளையாட்டொலியும்
அறாத்திருப்பேரெ யிற்சேர்வன் நானே.

வெண்மை நிறத்தையும், வலமாகச் சுழித்த சுரியையும் கொண்ட சங்கோடு சக்கரத்தையும் உயர ஏந்தி தாமரை போன்ற கண்களையுடையவன் தான் ஏறிய பறவையை என் நெஞ்சிடத்திலே செலுத்துகின்ற விதத்தை தாய்மார்களே நீங்கள் காண்கிறீர் களில்லை. அதை என்ன சொல்லி நீங்களறிய விளக்குவேன்! (இனி எனக்கு இங்கு செய லொன்றுமில்லை). கொள்ளை கொள்ளை யாகச் சுகமுடையன் தன் வீறுதோன்ற விருப்பதும், வேதகோஷங்களும், திருவிழா முழக்கும், சிறுகுழந்தைகள் விளையாட் டொலியும் என்றும் நீங்காததுமான தென் திருப்பேரை என்னும் தலத்திலே நான் போய்ச் சேருவேன். இது நிச்சயம்.

தாய்மார் பேச்சில் தன் மனக்குகந்த வாசகங்கள் சிலவற்றைச் சேர்த்து தனக்குள் ளேயே சிந்தித்தாள். நிறங்கொடுப்பானுகிய நிகரில் முகில்வண்ணன் அருகிலேயே இருப் பது பளிச்சென்று நினைவுக்கு வருகிறது. அவனே அவள் மனம் தீவிரமாக நினைக்கவே அவள் நெஞ்சிடர் தீர்க்க அவன் தோன்றுகிறுன். ஆனையின் நெஞ்சிடர் தீர்க்கத் தோன்றினுற் போலே, அங்கு தோன்றிய படியே. 'தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே' என்று அவன் தோன்றிய விதத்திலே இதயம் பறிகொடுத் தவரல்லவா? எனவே இங்கும் அவன் புள் ளூர்ந்து தோன்றுகிறுன்.

வெள்ளைச்.........,.ஏந்தி

அவன் எட்டவரும்போதே அவன் கைகளில் சுடரும் சங்கமும் ஆழியும் அவள் கண்ணிலே படுகிறது. அதிலும் முதலிலே தோன்றுவது சங்கமாயிற்று. ஓரினமாகை யாலே 'உன்னோடுடனே ஒரு கடலில் வாழ் வாரை' என்றது காண்க. வெண்மையும் சுரியும் உடைய சங்கு. பரிசுத்தமான அவள் உள்ளம்போலே தூயவெண்மையான நிற முடைய சங்கு. பகவானை தன் வலைக்குட் படுத்திச் சுழித்து வாங்கும் இவள் உள்ளம் போலே சுரிகளையுடைய சங்கு. அச்சங்கோடு எதிர் அணியாக விளங்கும் சுதர்சனம் இரண்டையும் உயர ஏந்தி. அவன் வருகை யைத் தம் காந்தியாலே அறிவிக்கும் சங்கும் ஆழியும்.

தாமரைக் கண்ணன்

அப்போதலர்ந்த செந்தாமரை போன்று பரந்து விரிந்து குளிர்ந்து சிவந்த கண்களை யுடையவன்.

என் நெஞ்சினூடே

'எங்கே வந்தான்' என்று கேட்கிறீர்கள்? இதோ என் நெஞ்சிடத்திலே. ஆம் என் உடலிலுள்ளே யிருக்கும் நெஞ்சு இருக் கிறதே. அதையே அரங்காகக்கொண்டு உள்ளே வந்தான்.

புள்ளைக் கடாகின்ற ஆற்றைக் காணீர்

'வந்து என்ன செய்கிறுன்?' என்கி றீர்கள். ஐயோ! என்ன கேள்வி. தெரிய வில்லையா உங்களுக்கு? இதோ அவன் கருட வாகனத்தின்மேல் ஏறி என் நெஞ்சிலே சுற்றிச் சுற்றிச் சாரிகை திரிகின்றுனே. உங் களுக்குத் தென்படவே யில்லையா. இப்படிப் பாருங்கள். கண்களைத் தெளிய வைத்துக் காணுங்கள்.

என் சொல்லிச் சொல்லுகேன்

தெரியவில்லையா? இன்னுமா? என்ன! எங்கேடீ. எங்கிருக்கிறுன். என்ன செய் கிறுன். எப்படிச் சாரிகை வரமுடியுமடீ நெஞ்சிலே என்று கேட்கிறீர்கள். அட அப்பாவித் தாய்மார்களே. அதை எப்படிச் சொல்வது. என்ன சொல்லி உங்களை நம்ப வைப்பது. அதற்கு வார்த்தை ஏது. சொல்லி யுணரும் காட்சியா அது. பிறர்சொற் கேட் டுப்பெறும் அனுபவமா அது. அடடா. ஆஹா......

சேர்வன் நானே

சரி. இனி இங்கு தங்குவதில் பயனில்லை. அவன் வந்து தன்னைக் காட்டி என் நெஞ் சிலே வலமும் இடமுமாக சுழன்று அந்தப் பறவை என்நெஞ்சை யழித்துவிட்டது. அவ

னிருக்குமிடம் தெரிந்துகொண்டேன். இனி அவனிருக்குமிடம் போய்ச்சேர வேண்டியது தான். போய் வருகிறேன் அம்மா!

தென்திருப்பேரையில்

எங்கேயடி போகப் போகிறாய். பைத்தியமா உனக்கு என்று கேட்கிறீர்கள். வெகு தூரமில்லை. இதோ பக்கத்திலிருக்கிற தென் திருப்பேரைக்குத் தான்.

வேத ஒலியும்...........அரு

எந்த ஊர் என்று கேட்கிறீர்கள் மீண்டும். பக்கம்தான். என்றும் கேட்கிறதே வேதகோஷம்; ஆயிரத்தெண்மர் சாமகானம் பாடிக்கொண்டே யிருப்பார்களே தினமும் அவ்வூர்தான். என்றும் நித்யோத்ஸவமாகச் செல்கிறதே அவ்வூர்தான். குழந்தைகள் முதல் அவன்பேர் சொல்லி அவன் கோயிலமைத்து அவனுக்கு விழாக்கொண்டாடிக் குதூகலித்து மகிழும் ஒலி எப்போதும் விடாது கேட்குமே அவ்வூர். அந்த ஓசைகளும் கேட்கவில்லையா உங்களுக்கு அதுதான் நம்மூருக் கருகேயுள்ள தென்திருப்பேரை.

வெள்ளச் சுகமவன் வீற்றிருந்த

அங்கு என்ன விசேஷம் என்றே தெரியாதா. அங்குதான் சுகமனைத்தும் ஒருங்கு திரண்ட வடிவோடு ஆனந்தமயன் இருக்கிறான். அவன் "சுகவெள்ளம் விசும்பிறந்து" பாய்கிறது. அவ்வானந்தத்தைப் பெருக்கிக் கொண்டு அங்கே வீற்றிருக்கிறான். அவன் அவ்வாறு வீற்றிருக்கும் தென்திருப்பேரையில் போய்ச் சேருவது என்று தீர்மானித்து விட்டேன்.

என்நெஞ்சினூடேபுள்ளைக்
கடாகின்ற ஆற்றைக்காணீர்

காதலிகளுக்கு காதலன் நினைவேயான போது அவன் வடிவம் அவள் நெஞ்சிலே தேங்கி அங்கே செயல்படுவதாக ஒரு உணர்ச்சி யெழுவது இயல்பு. முத்தொள்ளாயிரத்திலே காதலி நெஞ்சில் யானையின்மேல் பவனிவந்து விடுகிறான் காதலன். கண்ட கண்வழியாக உட்புகுந்து அவள் நெஞ்சிலே இடங்கொள்கிறான். காதலி கெட்டிக்காரி கண்ணை இறுக மூடிக்கொள்கிறாள். தாய்மார் வந்து கண்டு என்னடீ கண்ணைப் பொத்தியிருக்கிறாய். கையை எடுத்துக் கண்ணைத் திற என்ன,

> தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
> களையினும் என்கண்திறந்து காட்டேன்—
> வளைகொடுபோம்
> வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை
> தன்னெடும்போந்
> தென்கண் புகுந்தான் இரா"

என வரும் பாடல் அக்காதலியின் மனநிலையை நமக்கு நன்கு காட்டும். இரவு முழுதும் கையை வைத்துக் கண்ணைமூடி யிருந்திருக்கிறாள் அவள்.

கம்பன் காட்டும் காதலி இன்னும் துடிப்பானவள். அவள் கண்வழி நுழைந்து நெஞ்சில்புக்கான் காதலன். முத்தொள்ளாயிரக் காதலிபோன்ற அசடல்ல அவள். கனி கண்டவள் தோலுரிக்கக் காத்தா நிற்பாள். உடனே கண்ணைப்பொத்துகிறாள். தோழீ என்று கூப்பிடுகிறாள். தோழி வரலும். இதோ அவனை அடைத்துவிட்டேன். கண்ணைத்திறந்தால் வெளிவந்து ஓடிவிடுவான். என்னை மெல்ல என் படுக்கையில் அழைத்துச்சென்று விட்டுவிட்டுக் கதவை மூடிச் சென்றுவிடு என்ற குறிப்பிலே என்ன ரஸமான பகுதிகள்!

காதலுள்ளத்திலே அறிவாராய்ச்சிக்கு இடமேது. அவர்கள் உணர்வுக்கு அவர்களே அதிகாரி. அவர்கள் உள்ளம் புரியவேண்டுமானால் அவ்வுளப்பான்மையை நாம் கற்பித்துக்கொண்டாலன்றி அவ்வுணர்வை ரஸிப்பது துர்லபமே. பராங்குச நாயகியின் தாய்மார்கள் பாடுதான்.

தென்திருப்பேரையில் ஸாமகானத்திலே ஈடுபட்டான் இறைவன். அதினிலும் மேலாக பக்தர்கள் உளம் மகிழ்ந்து பக்தியோடு எடுக்கும் திருவிழாக்களை ரஸித்தான். அவற்றுக்கெல்லாம் மேலாக குழந்தைகள் கள்ளம் கபடமற்ற தங்கள் பிஞ்சுள்ளங்களிலே இறைவனைப் போற்றித் தம் விளையாட்டுகளிலேயும் அவனுக்குக் கோயிலெடுப்பதும், விழா வயர்வதுமாகி எழுப்பும் ஆரவாரத்திலே தன் நெஞ்சைப் பறிகொடுத்தான் என்பது குறிப்பு.

எம்பெருமானார் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் அன்பர்கள் நினைவுகூர வேண்டும். இறைவனிடம் மனம் வைக்கக் கல்விவேண்டாம் வயது வேண்டாம். உடையவர் ஒரு தெருவழியே செல்ல அங்கு சிறுவர்கள் சிலர்

மண்ணுலே கிறி இது மதில், இது கோபுர வாயில், இது அர்த்தமண்டபம், இது கர்ப்பக் கிரஹம் என்றெல்லாம் கூறிவந்ததை உடையவர் கண்டு ரஸித்துப் பக்கத்திலே நின்ருர். கடைசியில் ஒரு சிறுவன் ஆஸ்தானத்திலே ஒரு செங்கல்லை ஸ்வாமீ இதுதான் பெரிய பெருமாள் என்று பிரதிஷ்டை பண்ணவும் உடையவர் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார் என்று வரும் சரிதம் இங்கு நினைக்கத் தகும்.

அப்படிக் குழந்தைகள் முதல் அவன் குணம்பாடும் ஊர். அங்குபோய்ச் சேர்வேன் என்கிருள் நாயகி.

முத்தொள்ளாயிரம், கம்பன், இவர்கள் காட்டிய காதலி போன்று அவன் நெஞ்சிலே புள்ளைக்கடாவி நிற்கும்போதே இவள் அவனை அங்கே சிறைசெய்ய அயர்ந்துவிட்டாள். எனவே அவன் இவளை நெஞ்சழித்து விட்டு "வேகப் பறவை"யை இன்னும் வேகமாக நடாத்தி வெளியே போய்விடுகிருன். நல்ல வேளையாக அவன் தன்னை இனம் காட்ட அவள் கண்டுகொண்டதால் என்னை நெஞ்சழித்த வீறுதோன்ற அவனிருக்கும் ஊருக்கு நான் போவேன் என்று தீர்மானிக்கிருள். "இங்கே போதக் கண்டீரே" என்று அவன் போன திசை தெரியாதே வினவிச் செல்லவேண்டிய கஷ்டமின்றி இருப்பிடமாவது தெரிந்துகொண்டாள்.

இரண்டாம் பாட்டு

நானக்கருங்குழல் தோழிமீர்காள்!
அன்னையர்காள்அயல் சேரியீர்காள்
நானித்தனிநெஞ்சம் காக்கமாட்டேன்
என்வசமன்றிது இராப்பகல்போய்
தேன் மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ்
தென்திருப் பேரெயில் வீற்றிருந்த
வானப்பிரான் மணிவண்ணன் கண்ணன்
செங்கனி வாயின் திறத்ததுவே.

[நறுமணம் மிக்க சுண்ணத்தின் கந்தமுடைத்தாய் கரிய சுழன்ற கூந்தலையுடைய தோழிமார்களே! தாய்மார்களே! அயலார்களே! சுதந்தரம் பெற்றுத்திரியும் என்னுடைய நெஞ்சத்தை அடக்கி நிறுத்த முடியாதவளானேன். அது இப்போது என் வசமான தன்று. இரவுபகல் வாசியற என்னைவிட்டுப் போய்விடுகிறது. போய், வண்டுகள் மொய்க்கும் பொழில்சூழ்ந்த தென்திருப்பேரையிலே தன்வீறு தோன்ற இருக்கும் இமையோர் தலைவன், நீலமணிவண்ணன், கண்ணனுடைய சிவந்த கொவ்வைக் கனி போன்ற அதரங்களின் அழகிலே ஈடுபட்டு நிற்பதாயிற்று.]

நான் தென்திருப்பேரையில் போய்ச் சேர்வேன் என்று இவள் சொல்லலுமே தாய்மார்கள் மனம் பதறுகிருர்கள். இதுவரை நம் சிறகின் கீழிருந்தாள். இப்போது அதில் அடங்காள் போன்றிருக்கின்றதே. அவளுக்கு அந்தரங்கமான தோழியர் சொன்னுலாவது கேட்பாளா பார்ப்போம் என்று தோழியரை அழைக்கிருர்கள். இச்செய்தி பரவி அயலார்களும் வந்து சேருகிருர்கள். எல்லோருமாகச் சேர்ந்து நாயகிக்கு இதவசனம்கூறி, ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களை எல்லாம் எடுத்துரைத்து இப்படி நெஞ்சை அடக்கமின்றி அலைய விடுவது பெண்குணத்துக் கொவ்வாது. இதென்ன மயக்கம். மனத்தைக் கட்டுப் படுத்தவேண்டும். அதற்கான வழிகளைப் பார் என்று உபதேசிக்க அவர்கள் அனைவரையும் நோக்கிக் கூறுகிருள் நாயகி.

நானக் கருங்குழல் தோழிமீர்காள்

நான் ஒன்றும் மயக்கத்தில் இல்லை. அறிவுத் தெளிவோடுதான் இருக்கிறேன். தோழிகளே! ஆஹா உங்கள் கரிய சுருண்ட கூந்தலின் நறுமணம் மூக்கைத் துளைக்கின்றது. சுண்ணம்தான் என்ன மணம். பார்த்தீர்களா என் இந்திரியங்கள் நன்கு செயல்படவே செய்கின்றன. மயங்கி உணர்விழந்து சொல்லவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழலும் அதன் மணமும் அவனுடைய "மைவண்ண நறுங் குஞ்சி"யை யல்லவா நினைவூட்டுகிறது!

அன்னையர்காள்

அருமைத் தாய்மார்களே. நீங்கள்தான் என்னைச் சீரும்சிறப்புமாக வளர்த்தீர்கள் அது தெரியாமல் பேசவில்லை.

அயல் சேரியீர்காள்

அயலார்களே! இல்லை அயல் சேரியீர்களே. ஓகோ. இது இத்தெரு மட்டுமல்ல பக்கத்துத் தெருவுக்குமா பரவி விட்டது! வாருங்கள் நீங்களும் கேளுங்கள்.

நல்ல புத்தித் தெளிவோடுதான் பேசுகிறேன். நீங்கள் சொன்னவற்றையெல்லாம் வாங்கி, உணர்ந்துதான் பேசுகிறேன். எனக்கு எவ்வித மயக்கமும் இல்லை.

நான் இத்தனிநெஞ்சம்
காக்கமாட்டேன் என் வசமன்றிது

என் நெஞ்சானால், எனக்கு பவ்யமான நெஞ்சானாலல்லவா, நான் அதை அடக்க. அது இப்போது என் காவலைவிட்டு மீறிச் சுதந்திரம் கொண்டாடத் தலைப்பட்டுவிட்டது. ஆகவே அதைக் கட்டுப்படுத்தும் சக்தி எனக்கில்லை இப்போது. முடியும் காரியத்தையல்லவா செய்யலாம். நான் எப்படி உங்களை மீறிவிட்ட நிலையிலிருக்கிறேனே அதேபோல் என்னை மீறிவிட்டது என்நெஞ்சம். பின் உன் நெஞ்சு எங்கே போயிற்று என்று கேட்கிறீர்கள்.

தேன்மொய்த்த......வீற்றிருந்த:—அவன் சுகம் எப்படி வெள்ளமிடுகின்றதோ அது போல மது வெள்ளமிடுகின்ற பொழிலிலுள்ள பூக்கள். அதனால் வண்டுதள் எப்போதும் மொய்த்துக்கொண்டேயிருக்கின்றன. அத்தகைய பொழில் சூழ்ந்த தென் திருப்பேரையில் வீற்றிருக்கிறானே; என் நெஞ்சைப் புள்ளைக்கடாவி அழிமதிசெய்த வீறுதோன்ற அமர்ந்திருக்கிறானே.

வானப்பிரான்:—ஏன் அழித்தாய் என்று ஒருவர் கேட்கமுடியாத நாயகன். ஞானத்துக்கு மட்டுமல்ல விசும்போர்க்கும் பிரான். யார் அவனைக் கேட்பது.

மணிவண்ணன்:—அவன் அழித்தலால் துன்பமா? இல்லை. அவனால் மனம் அழிக்கப் பெற்றோமே என்று மகிழும்படியான நீல மணி போன்ற அழகிய நிறத்தையுடையவன்.

கண்ணன்:—நீர்மையிலே இணையற்றவன். பார்த்தவர் கண்களிலே என்றும் நின்று காட்சியளிப்பவன்.

"வீதிவாய்ச் செல்கின்றான்போல்
விழித்திமை யாமல்நின்ற
மாதரார் கண்களூடே
வாவுமான் தேரில்செல்வான்
யாதினும் உயர்ந்தோன்தானே
யாவர்க்கும் கண்ணன்என்றே
ஓதிய பெயர்க்குத்தானே
உறுபொருள் உணர்த்திவிட்டான்"

என்று மிதிலையிலே பவனிவந்த இராமனைக் கம்பர் வருணித்தார். என் நெஞ்சிலே புள்ளைக்கடாவி என் கண்ணில் நின்று நிலைத்திருப்பவன் என்கிறாள் நாயகி.

செங்கனிவாயின் திறத்தது :—அப்படிப், போன நெஞ்சு அவனது அதரங்களையே நோக்கி நின்றுகொண்டிருக்கிறது. கொவ்வைக்கனி போன்று சிவந்த அவன் அதர அழகிலே ஈடுபட்டது. அவ்வதரத்தை அனுபவிக்கப்பாரித்து நின்றது.

முதலில் அவன் வரும்போது என் கண்ணில் பட்டது அவன் சங்கு. அது அவனை அனுபவிப்பது அவன் கொவ்வைக்கனி வாய் மூலமாக. என் நெஞ்சும் அதுபோல் அவன் திருமுன்பே சென்று அவ்வதர அழகிலே ஈடுபட்டு நிற்கிறது. அக்கோலச்சுரி சங்கை அம்மாயன் செவ்வாயின் குணம் வினவி நிற்கின்றதோ என்னவோ ?

மூன்றாம் பாட்டு

செங்கனி வாயின் திறத்ததாயும்
செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்ததாயும்
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்
தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்
திங்களும் நாளும் விழா வருத
தென்திருப்பேரையில் வீற்றிருந்த
நங்கள் பிரானுக்கென் நெஞ்சம்
தோழீ நாணும் நிறையும் இழந்ததுவே.

தோழீ! சிவந்த கனிபோன்ற அவன் அதர சோபையின் வசப்பட்டதாயும் செம்பொற்சுடர் சோதி வீசி உயர்ந்த அவன்திருவபிஷேகத்தைக் கண்டு அதற்கு தலைதாழ்த்தியதாயும் அவன் சங்கு சக்கரங்களைக்கண்டு மகிழ்ந்தும், அவன் தாமரைக் கண்களின் அழகிலே அனைத்தையும் இழந்து வெறிதாயும், போன என் நெஞ்சு, நாடோறும் திருவிழா நீங்காத தென்திருப்பேரையில் தன் மேன்மைதோன்ற இருந்த நம் தலைவன் விஷயமாக நாணத்தையும் அடக்கத்தையும் இழந்துவிட்டது காண்.

தோழியும் தாய்மாரும் அயலாருமாய் வந்து தேற்றித் தெளிவித்து இவளை இவள் சங்கல்பத்தினின்றும் விலக்க முயன்று பார்த்து அவள் தன் வசமில்லாது பேசுவதைக் கண்டு தோழிதான் அவளுக்கு எப்போதும் உசாத் துணையாதலால் அவளை

மட்டும் விட்டு நாயகியை நலவுசொல்லித் திருத்த நியமித்து விலக, தோழியும் "என்னடீ இது. பெண் என்றால் அடக்கம் வேண்டாமா? மகளிர்க்கு நிறைகாக்கும் காப்பே தலையாயதன்றோ. இவ்வாறிருப்பது நம் குடிக்கு ஒக்குமா. நெஞ்சை அடக்க வேண்டாமா. இது வெட்கமாயில்லையா?" என்று இடித்தும் பரிந்தும்கூற தனியே தன் அருகுள்ள தோழியை நோக்கி நாயகி கூறுகிற பாசுரம் இது.

செங்கனி வாயின் திறத்ததாயும்:—சிவந்த கனிபோன்ற அவளுடைய அதரங்கள் அவன் எதோ சொல்ல வாயெடுத்து சொல்லமாட்டமையாலே தழு தழுக்க அப்போது நெளிந்த நெளிவிலே ஈடுபட்டு, "பிரிந்து கடக்க இருக்கிலென்; உன்கண் வட்டத்திலே கிடக்கிலென்; இது உன் சரக்கன்றோ? என்று சொல்ல உபக்ரமித்துத் தழு தழுத்து வருகிற திருவதரத்திலே அகப்பட்டபடி" என்பது ஈடு.

செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்ததாயும்:—கண்ணைக்குத்தும் வெறிக்கும் சுடரின்றிரே பார்த்த கண்கள் குளிரும்படியான செம்பொற்காந்தி வீசுகின்ற திருமுடி. அவன் மேன்மையின் உயர்வைக்குறித்து நிற்கும் நீண்ட திருவபிஷேகம். அதைக்கண்டவாறே அவன் பெருமையுணர்கிறது நெஞ்சு. அவன் பெருமை உணரவே தன் தாழ்வும் சிறுமையும் தானே தெரிகிறது. தெரியவே தன் இயல்புக்கேற்பத் தாழ்கிறது.

சங்கொடு.....உகந்தும்:—அவன்கைகளுக்கணியாக விளங்கும் பாஞ்சஜன்யத்தையும் சுதர்சனத்தையும் மாறி மாறிப் பார்த்து அவ்வழகை அனுபவித்தும்

தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்:—மலர்ந்த செந்தாமரைபோன்று பரந்துவிரிந்து கருணையொழுகும் திருக்கண்ணழகிலே தனக்குள்ளவற்றை யெல்லாம் இழந்து அவனுக்கே உரியதாய்-"கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" என்றார் அவளுடைய கண்ணழகில் துவக்குண்ட மற்றொருவர்.

திங்களும்......வீற்றிருந்த:-நாள்தவறாவல் மாதம் தவறாமல் திருவிழாக்கோலாகலமாய்த் திகழும் தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கிற. அங்கே தன் மேன்மை தோற்ற வீற்றிருக்கும்.

நங்கள்பிரானுக்கு:-நம்மை ஆட்கொண்டு உபகரிக்கவே இப்படி எழுந்தருளியிருக்கும் தலைவனுக்கு. நம்போன்ற பாவ ஜன்மங்கள் கடைத்தேற வந்து முகங்கொடுத்துக்கொண்டிருக்கிற நாயகனுக்கு. "பரத்வம் நித்ய முக்தர்க்கு; வ்யூஹம் முக்தப்ராயர்க்கு; விபவம் புண்ணியம் பண்ணினர்க்கு; அர்ச்சையாகிற இவ்விருப்பு பாபம்பண்ணின சம்சாரிகளுக்கு" என்பது ஈடு.

என்நெஞ்சம்:—என்னுடைய நெஞ்சு எனக்கே பவ்யமாயிருந்த நெஞ்சு. ஆனால் இப்போது சுதந்திரம் கொண்டாடும் என் நெஞ்சு.

நாணும் நிறையும் இழந்ததுவே:—நாணத்தையும் அடக்கத்தையும் இழந்தே விட்டது.

> "பெண்வழி நலனொடும்
> பிறந்த நாணொடும்
> எண்வழி உணர்வும்
> நான் எங்கும் காண்கிலேன்"

என்றாள் முதலில் மிதிலையில் இராமனைக் கண்ட சீதை.

நாணும் நிறையும் மட்டுமா இழந்தது. "அது இழவாதது உண்டோ" என்பது ஈடு. எல்லாவற்றையும் பறிகொடுத்து வறிதாயிற்று நெஞ்சம். தேவர்களுடைய எல்லாவற்றையும் கொடுத்து வெறிதான கடல் போல.

> "தழங்கிய கலைகளும் நிறையும் சங்கமும்
> மழுங்கிய உள்ளமும் அறிவும் மாமையும்
> இழந்தவள் இமையவர் கடைய யாவையும்
> வழங்கிய கடலென வறியள் ஆயினள்"

என்பது கம்பர் வாக்கு.

அவனைக் கண்டதன் பயன் ஒவ்வொருவர் தம்தம் உடைமைகளில் ஒன்றோ பலவோ இழந்தார்கள். "நான் தன்னை (சுய உணர்வை) இழந்தேன்; தாய்மார் தோழிமார் என்னை இழந்தார்கள்; நெஞ்சு நாணும் நிறையும் இழந்தது" என்பது ஈட்டு பங்க்தி.

(தொடரும்)

திருக்கேதீச்சரம்

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி.
லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே

—திருஞானசம்பந்தர்.



திருக்கேதீச்சரம் ஆதிலிங்கம்
[பின்புறம் நிற்பவர் இலங்கை முன்னாள் அமைச்சர் திரு. சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்]

"பாடுகின்ற வீணையை யுடையவர்; பல பல ஒழுக்கத்தையுடையவர்; இடபத்தைச் செலுத்தி அரிய நடனத்தை விரும்புகின்றவர்; தேவர்கள் முறையிட நஞ்சையுண்டு இருண்ட கண்டத்தையுடையவர்; இத்தகைய சிவபெருமான் எழுந்தருளியிருப்பதற்கு இடமாவது பெரிய கடற்கரையிலுள்ள அழகு விளங்குகின்ற கேடில்லாத திருக்கேதீச்சரம் என்னும் தலமாகும். அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யும் தீவினைகளெல்லாம் கெடும்" என்பது மேற்கண்ட புகலிவேந்தரின் பாடலுக்குப் பொருள். இவ்வளவு பெருமையுடைய திருக்கேதீச்சரம் என்னும் பாடல் பெற்ற பழம்பதி ஈழநாட்டிலுள்ள இரண்டு தலங்களில் ஒன்றாகத் திகழ்வது. இது இலங்கைத் தீவின் வடமேற்குக் கோடியில் இருக்கிறது. தலைமன்னார் என்ற கப்பல்துறை முகத்திலிருந்து 23 கல் தொலைவிலும், மன்னார் என்ற இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஐந்து கல்தூரத்திலும் இருக்கிறது. பஸ்கள் இவ்வூருக்குச் செல்கின்றன.

இந்த ஊருக்கு மாதோட்டம் என்றும், இறைவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இடத்திற்குத். திருக்கேதீச்சரம் என்றும் பெயர்களுண்டென்பதைத் தேவாரப் பாடல்களால் அறிகிறோம். ஸ்ரீஸ்காந்தேய புராணத்துத் தக்ஷிணகைலாச மான்மியம் என்ற நூலில் இரண்டாம் அத்தியாயத்தில் திருக்கேதீச்சர வைபவம் கூறப் பெறுகிறது. அதில் மகாதுவட்டாபுரம் என்று குறிக்கப்படுகிறது. துவட்டா என்பவன் இங்கு இருந்தபடியால் மகாதுவட்டா என்ற பெயரே மாதோட்டம் என்று வழங்கலாயிற்று என்பர். இலங்கை வரலாற்று நூலான மகாவம்சத்தில் இதை மகாதிட்ட என்று சிங்கள மொழியில் கூறப் பெற்றிருக்கிறது. கி. மு. மூன்றும் நூற்றாண்டிலேயே இது மகதித்தா என்ற பெயருடையதாக இருந்தது என்று புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மாந்தை, மகாதீர்த்தம், மாதோட்டம், மாதோட்டை என்ற பெயர்களால் எல்லாம் வழங்கப் பெற்றதென்றும் பல நூல்கள் வாயிலாக அறிகிறோம். மாதோட்டம் பெரிய துறைமுக நகரமாக விளங்கி யிருந்ததென்பது ஆராய்ச்சியாளர் கண்டறிந்த முடிபு. சம்பந்தர், சுந்தரர் இவர்கள் பாடி யருளியிருக்கும் இத்தலத் தேவாரப் பதிகங்களில் மாதோட்ட நன்னகர் என்று சிறப்பித்திருக்கின்றனர். ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் தமிழராட்சி ஓங்கியிருந்தபோது மாதோட்டம் சீரும் சிறப்பும் உடையதாய் விளங்கிற்றென்று ராஜரத்னகார என்ற சிங்கள நூலினின்றும் அறியக் கிடக்கின்றது.

இத்தகைய பெருமை பொருந்திய மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்துக்கு

அப்பெயர் வரக் காரணமென்ன? கேது பூசித்தமையின் கேதீச்சரம் என்ற பெயர் வந்தது. புத்தர் காலத்திலேயே வட இலங்கையாகிய நாகதீபத்தில் நாகரிகமிக்க நாகர்கள் வாழ்ந்தனர் என்று மகாவம்சம் என்ற இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது. நாகர் இங்கிருந்த தொடர்புபற்றி கேது (பாம்பு) பூசித்ததாகச் சொல்லப்பட்டது. அண்மையில் சில ஆண்டுகள் வரையிலும் திருக்கோயில் மூலஸ்தானத்துக்குள் இரண்டு பாம்புகள் வந்து போய்க்கொண்டிருந்தன என்று அங்குள்ளோர் கூறுகின்றனர். பாலி மொழியிலுள்ள தத்துவசம்ம் என்ற நூலில் பண்டைக் காலத்தில் இந்த இடத்தில் ஒரு சிவன் கோயில் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் திகழ்ந்த திருஞானசம்பந்தரும், ஒன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய சுந்தரரும் இராமேசுவரத்திலிருந்தபடியே திருக்கேதீச்சரப் பெருமானைப் பாடியருளியிருக்கின்றனர். அப்பர் பெருமானும் மணிவாசகப் பெருந்தகையாரும் இத்தலத்தைப் பற்றித் தங்கள் பாடல்களில் குறித்திருக்கின்றனர். பாலாவி என்ற ஆற்றின் கரைமேல் இத்தலம் அமைந்திருந்ததென்றும் தேவாரம் கூறுகிறது. பாலாவியின் முகத்துவாரத்தில்தான் மாந்தை என்ற மாதோட்டத் துறைமுகம் இருந்தது. அத்துறைமுகம் பாழடைந்தவுடன் அந்த ஆறும் தூர்ந்து விட்டது. இப்போது நீரோட்டமாக இல்லாமல் கோயிலின் அருகே நீண்டதொரு நீர்நிலையாகவே காட்சி யளிக்கிறது. இதுவே இத்தலத்தின் தீர்த்தம். இதன் தண்ணீர் வெண்மையான பால்போன்ற நிறமுடையதாக இன்று இருக்கக் காண்கிறோம். அதனாலேயே அதற்குப் பாலாவி யென்ற பெயர் போந்தது போலும். அதில் நீராடியவர் நோய் நீங்கப் பெற்று நலன் அடைவர் என்பது இன்றும் நிகழ்வதொன்று.

இப்பழம் பெரும்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெருமானின் திருநாமம் திருக்கேதீசுவரர் என்பது. அம்பாளின் திருப்பெயர் கௌரியம்பிகை என்பது. இராமர், இராவணனைவென்று அயோத்திக்குத் திரும்புங்கால் திருக்கேதீசுவரநாதரை வணங்கிச் சென்றார் என்று தட்சிணகயிலாய புராணம் என்ற நூல் கூறுகிறது. மேலும், பஞ்சபாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையாக இலங்காபுரிக்கு வந்தபோது கேதீச்சரப் பெருமானை வழிபட்டுச்சென்றான் என்றும் சொல்லப்படுகிறது. ஆதலின் பாரத இராமாயண காலத்துக்கு முன்பே இத்தலம் புகழ்பெற்று விளங்கியிருக்கவேண்டும் என்றும் அறியலாம். தண்டமிழ் முனிவரான அகத்தியனாரும் மாந்தைத் துறைமுகத்திலிறங்கி இலங்கையில் புகுந்தனர் என்றும் கூறுகின்றனர். விசயன் என்பான் இலங்கைக்கு கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வந்தபோது அவனுடன் வந்த அந்தணன் ஒருவன் சிவன்கோயில் ஒன்றில் பூசை வழிபாடு செய்தான் என்று மகாவம்சம்என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது. அந்தக்கோயில் திருக்கேதீச்சரம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். விசயனுடன் வந்த மறையவன் பெயர் உபத்தீசன் என்பர். "விசயன் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான்" என்று யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல் எடுத்துரைக்கின்றது.

இயற்கை ஒரு போர்வை: அதன் உள்ளுறை கடவுள். இயற்கையில் இறைவனைக் கண்ட பண்டைத்தமிழர்கள் அவற்றைப் பாடல்களாக அமைத்துத் தந்தனர். சங்க காலப் புலவருக்குப் பின்னர் அத்தகைய பணியில் முன் அணியில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர் திருஞானசம்பந்தர். ஒவ்வொரு தலத்துக்கு அவர் எழுந்தருளும்போது அதன் இயற்கை எழில் நலத்தை அப்படியே தீட்டிக்காட்டுவது அவர் இயல்பு. அப்பாடல்களில் கண்டவற்றை அத்தலங்களில் நாம் இப்போதும் கண்டு மகிழலாம். பல தலங்களை வணங்கிவிட்டு ஆளுடைய பிள்ளையார், இராமேசுவரம் வந்து "சேதுவின் கண் செங்கண்மால் பூசைசெய்த சிவபெருமான் தனைப் பாடிப்பணிந்து" அங்கிருந்தபடியே இலங்கையிலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்ற இரு தலங்களுக்கும் பதிகங்கள் ஓதியருளினார். அதைச் சேக்கிழார் சுவாமிகள்,

அங்நகரில் அமர்ந்தங்கண் இனிதுமேவி ஆழிபுடை
சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்தசெங்கண் மழ
தமைப்போற்றி வணங்கிப்பாடிச் [விடையார்

சென்னிமதி புணைமாட மாதோட்டத்தில் திருக்கேதீச்
சரத்தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும் உலவாத
கிழிபெற்றார் உவகையுற்றார்

என்று கூறியுள்ளார். சண்பையர்கோன் திருக்கேதீச்சரத்தின் இயற்கைக் காட்சியைப் பின்வருமாறு படம் பிடித்துக்காட்டுகிறார்:—

"கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருதநின்ற கேதீச்சரம்"

"வாழையம் பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண்
மார்பர் கேதீச்சரம்"

"வண்டு பண்செய மாமலர் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டத்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய
அருள்செய் கேதீச்சரம்"

"கடல்வாயப் பொன்னிலங்கிய முத்துமா
மணிகளும் பொருந்திய
மாதோட்டத் துன்னி யன்பொடு மடியவ
ரிறைஞ்சு கேதீச்சரம்"

"மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே"

தாண்டகவேந்தரான திருநாவுக்கரசர் இத்தலத்திற்குத் தனிப்பதிகம் பாடவில்லையாயினும் ஒரு திருத்தாண்டகத்தில்,

பூதியணி பொன்னிறத்தர் பூண்நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சர மேவினார்.........
என்று குறித்திருக்கின்றனர்.

சுந்தரர் பெருமானும் திருவிராமேச்சுரத்திலிருந்தபடியே திருக்கேதீச்சரத் திறைவனைப் பாடினார் என்பதைக் குன்றை முனிவர்,

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை
முன் வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப்
பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத்
திருக்கேதீச் சரஞ்சார்ந்த
சொன்மலர் மாலைகள் சாத்தித்
தூரத்தே தொழுதெழுந்தார்

என்று விளக்கமாகச் சொல்லியிருக்கின்றார். நாவலூர்கோன்,

"வங்கம்மலி கின்றகடல் மாதோட் டநன்னகரிற்...
பாலாவியின் கரைமேல்...திருக்கேதீச்சரம்"

"வரியசிறை வண்டியாழ் செயுமா
தோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின்
கரைமேல்...திருக்கேதீச்சரம்"

"மாவின்கனி தூங்கும்பொழில்
மாதோட்டநன் னகரிற்
...பாலாவியின் கரைமேல்...
திருக்கேதீச்சரம்"
என்று போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

இலங்கையர்கோன் இராவணன் சிறந்த சிவபக்தன். "இராவணன் மேலது நீறு" என்பது தேவாரத் திருமுறை. அவன் மனைவியான வண்டோதரிக்கு இறைவன் அருள் புரிந்த தலம் திருக்கேதீச்சரம் என்பதை மாணிக்கவாசகர்,

"ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்வண் [டோதரிக்குப்
பேரருளின் பமளித்த பெருந்துறை மேயபிரான்"
என்று குயிற்பத்திலும்,

"உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்குமதிலிலங் [கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்"
என்று திருவார்த்தையிலும் கூறியருளியிருக்கிறார். வண்டோதரியின் தந்தையாகிய மயன் வாழ்ந்த இடம் மாதோட்டம் என ஆராய்ச்சி யறிஞர்கள் கருதுகின்றனர்.

கி. மு. ஆறும் நூற்றாண்டிலேயே விசயன் திருக்கேதீச்சரக் கோயிலைப் புதுப்பித்தான் என்று மேலே சொல்லப்பட்டது. கி. பி. 10,11-ஆம் நூற்றாண்டுகளில் சோழர் ஆட்சியின் கீழ் இலங்கை வந்தது. அப்போது தான் அனுராதபுரத்திலிருந்த தலைநகர் பொலனறுவைக்கு மாற்றப்பட்டது. அதற்கு ஜனநாதபுரம் என்று பெயர் வைக்கப்பெற்றது. கொழும்பு நகர்ப் பொருட்காட்சிச் சாலையிலுள்ள ஒரு சாசனத்தில் "சோழமண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு வெளாநாட்டுச் சிறுகூற்ற நல்லூர்க்கிழவன் தாழிகுமாரன், ஈழமான மும்மடி சோழமண்டலத்து மாதோட்டமான இராஜராஜபுரத்து எடுப்பித்த இராஜராஜ ஈஸ்வரத்து மகாதேவர்" என்று காணப்பெறுகிறது. இதனால்

முதல் இராஜராஜன்காலத்தில் திருக்கேதீச்சரக்கோயிலை தாழிகுமாரன் என்பார் எழுப்பினுர் என்று தெரிகிறது. முதலாம் சுந்தர பாண்டியன் (கி. பி. 1251-1280) ஆட்சிக் காலத்தில் திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப்பெற்று பாண்டிய மன்னர் காலச்சிற்ப முறையில் புதுப்பிக்கப்பெற்றது. இவ்வளவு பெருமையுடன் விளங்கிய திருக்கேதீச்சரம் காலப்போக்கினுலும் கவனக்குறைவாலும் பாழடைந்தது. போர்ச்சுகீசியரும், உல்லாந்தாக்காரரும் கோயில் முதலியவைகளை இடித்துத் தகர்த்துவிட்டனர்.

1887ல் போக் என்பவராலும், 1925-28ல் ஏ.எம். கோகாற் என்பவராலும், 1950ல் எஸ். சண்முகநாதன் என்பவராலும் மாந்தை இருந்த இடத்தில் புதை பொருள் ஆராய்ச்சி நடத்தப் பெற்றது. பெரிய இலிங்கம், விநாயகர் முதலியன கண்டெடுக்கப் பெற்றன. அந்த இலிங்கத்தின் படத்தை இக்கட்டுரையில் காணலாம். அந்த மூர்த்தியின் பின்புறம் நிற்பவர் இலங்கை முன்னுள் அமைச்சர் திரு. சர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஆவர்.

அழிந்துகிடந்த திருக்கேதீச்சரத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துக்கு வித்திட்டவர் ஈழத்துச் சைவப் பெரியார் ஆறுமுக நாவலர் அவர்கள்; 1872-ல் சிந்தை நொந்து பொதுமக்களுக்கு ஒரு விண்ணப்பம் விடுத்தார்கள். 1894-ல் திரு. சித. மு. பசுபதிச் செட்டியாரின் பெரும் பொருளுதவியால் ஆலயம் இருந்த இடம் சோதனை செய்யப்பெற்று அகப்பட்டது. 1903-ல் அந்த இடத்தில் ஒரு சிறு ஆலயம் அமைக்கப் பெற்றது. 1948-ல் கொழும்பில் நிறுவப் பெற்ற 'திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையாரின்' பெருமுயற்சியால் 1952-ல் குடமுழுக்கு விழா நடைபெற்றது. 1960-ல் கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இன்னும் உற்சவ மண்டபம் முதலியன கட்டத்திட்டமிட்டிருக்கின்றனர். திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு குருகுலம் கட்டிமுடி வடைந்திருக்கிறது. சத்திரங்கள், மடங்கள் முதலியனவும் இருக்கின்றன. அஞ்சலகம், தொலைபேசி, பஸ் போக்குவரவு முதலிய வசதிகளும் அண்மையில் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் முன்னுள் இலங்கை அமைச்சர் திரு. சர். கந்தையா வைத்தியநாதன் அவர்களைத் தலைவராகக்கொண்ட திருப்பணிச் சபையார் செய்து வருகின்றனர். அவர்களுக்குப் பொதுமக்கள் பலவகையிலும் உதவி செய்யவேண்டும், "கேதீச்சரம் கைதொழுதெழக்கெடுமிடர் வினைதானே", "முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே", "ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்துருள்வான்" என்ற தேவாரத் திருமுறைத் திருவாக்குகளை நினைந்து நினைந்து திருக்கேதீசுவரனின் திருவருளைப் பெறுவோமாக.

மூவரென இருவரென
  முக்கணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்குபொழில்
  மாதோட்ட நன்னகரிற்
பாவம்வினை யறுப்பார் பயில்
  பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்திருக்
  கேதீச்சரத் தானே

—சுந்தரர்.

குறிச்சி—கோதண்டராமசாமி கோயிலில் இராமநவமி விழா 25-3-61ல் நடைபெற்றது.

குத்தாலம் :—மன்மதீசுவர ஆலயத்தில் உள்ள நடராஜப்பெருமானின் மகா கும்பாபிஷேகம் 22-3-61ல் நடைபெற்றது.

திருத்தவத்துறை :—சப்தரிஷீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 21-3-61 முதல் 7-4-61 வரை நடைபெறும்.

திருப்பேரூர் :—பட்டீசுவரசுவாமி கோயிலில் தேர்த்திருவிழா 22-3-61ல் தொடங்கி 31-3-61 அன்று முடிவுற்றது.

பழனி :—தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி உத்திர விழா 25-3-61 முதல் 3-4-61 வரை நடைபெற்றது.

செய்திகள்

காஞ்சி :—காமாட்சியம்மன் கோயிலில் மாசி மகோற்சவம் 20-2-61 முதல் 28-2-61 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருவாலங்காடு :—ஊர்த்துவதாண்டவப்பெருமான் கோயிலில் மாசி சதுர்த்தசி மகா பிடேகம் 28-2-61ல் நடைபெற்றது.

திருப்பனந்தாள் :—வீரியம்மன் பங்குனி உத்திரப்பெருவிழா 22-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

கல்லங்குறிச்சி :—கலியுக வரதப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 25-3-61 தேதி ஆரம்பமாகி 3-4-61 வரை சிறப்பாக நடைபெற்றது.

பின்னத்தூர் :—கோதண்டராமசுவாமி கோயிலில் மாசி மக விழா 1-3-61 முதல் 3-3-61 வரை நடைபெற்றது.

சிதம்பரம் :—தில்லை கோவிந்தராஜசுவாமி கோயிலில் மாசிமக மண்டகப்படி விழா 1-3-61 முதல் 6-3-61 வரை நடைபெற்றது.

திருக்கோட்டியூர் :—சௌமியநாராயணப்பெருமாள் கோயிலில் அஷ்டாங்க விமானம் தாயார் ஆண்டாள் சந்நிதி விமானங்கள் குடமுழுக்குப் பெருவிழா 22-3-61 முதல் 26-3-61 வரை நடைபெற்றது.

கூடலையாத்தூர் :—நர்த்தனவல்லபேசுவரர் கோயிலில் மாசிமகப் பெருவிழா அனுக்ஞை முதல் ஆரம்பமாகி 7-ஆம் நாள் இரவு திருக்கல்யாண விழாவும் நடந்தது. சமயச்சொற்பெருக்கும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

பெரம்பலூர் :—மதனகோபாலசுவாமி கோயிலில் பெருவிழா 22-3-61 முதல் 4-4-61 வரை நடைபெறும்.

தூத்துக்குடி :—மேலூர் பத்திரகாளி அம்மனுக்கு தை கொடைச்சிறப்பு 7-2-61 காலை கும்பாபிஷேகமும் இரவு சிறந்த அலங்கார தீபாராதனையும் நடைபெற்றன.

கீழையூர் :—வீரட்டேசுவரர் கோயிலில் 19-2-61 முதல் 3-3-61 வரை பிரம்மோற்சவம் நடைபெற்றது. சமயச்சொற்பெருக்குகளும் நடைபெற்றன.

சென்னை :—ஏகாம்பரேசுவரசுவாமி கோயிலில் பிரமோற்சவம் 20-3-61 முதல் 6-4-61 வரை நடைபெறும்.

வேலைமாநகர்-சைதாப்பேட்டை :—சுந்தர விநாயகர் கோயிலில் பிரம்மோற்சவம் 21-3-61 முதல் 30-3-61 வரை நடைபெற்றது.

திருவெண்காடு :—சுவேதாரணியேசுவரசுவாமி கோயிலில் குடமுழுக்குப் பெருவிழா 19-3-61 முதல் 26-3-61 வரை நடைபெற்றது.

திருவிரிஞ்சிபுரம் :—மார்க்கபந்தீசுவரர் கோயிலில் பெருவிழா 21-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

தூத்துக்குடி :—சங்கராரமேசுவரர் கோயிலில் 12-1-61ல் திருவெம்பாவை—திருப்பாவை மகாநாட்டை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

வடபழனி :—பங்குனி உத்திர இலட்சார்ச்சனை விழா 22-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது. இக்கோயிலில் மூன்றும் முறையாக தெப்பத் திருவிழா 1-4-61 முதல் 3-4-61 வரை நடைபெறும்.

திருக்கோஷ்டியூர் :—சரபேசுவரசுவாமி கோயிலில் மகா கும்பாபிஷேகம் 26-3-61ல் நடைபெற்றது.

கரூர் :—கல்யாணபசுபதீசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 23-3-61 முதல் 2-4-61 வரை நடைபெற்றது.

திருக்கண்டியூர் :—ஹரசாபவி மோசனப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 22-3-61 முதல் 2-4-61 வரை நடைபெற்றது.

புள்ளிப்பள்ளம் :—வரதராசப்பெருமாள் கோயிலில் இராமநவமி விழா 25-3-61ல் நடைபெற்றது.

ஆத்தூர் :—சோமநாதசுவாமி கோயிலில் பங்குனித் திருவிழா 21-3-61ல் தொடங்கி 30-3-61ல் முடிவுற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

சென்னை :—அரங்கநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 21-3-61 முதல் 1-4-61 வரை நடைபெற்றது.

திரிசிராமலை :—தாயுமானேசுவரர் கோயிலில் தெப்பத் திருவிழா 21-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

பூண்டி :—புஷ்பவனேசுவரர் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழாவில் 28-3-61, 29-3-61, 30-3-61 நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும் 31-3-61 நாதசுவரக் கச்சேரியும் நடைபெற்றன.

திருவாமாத்தூர் :—அபிராமேசுவரப்பெருமாள் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா 22-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

திருப்புல்லாணி :—ஆதிஜெகன்னாதசுவாமி கோயிலில் பங்குனிபிரமோற்சவம்22-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

திருச்சுழியல் :—திருமேனிநாதசுவாமி கோயிலில் பங்குனி பிரம்மோற்சவம் 21-3-61 முதல் 31-3-61 வரை நடைபெற்றது.

காசவளநாடு கோவிலூர் :—ஜம்புகேசுவரர் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா 22-3-61 முதல் 2-4-61 வரை நடைபெற்றது.

திருப்பரிநியமம் :—பாஸ்கரேசுவரசுவாமி கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா 22-3-61 முதல் 2-4-61 வரை நடைபெற்றது.

திருவாலங்காடு :—வடாரணியேசுவரசுவாமி கோயிலில் பங்குனி பெருவிழா 21-3-61 முதல் 3-4-61 வரை நடைற்றது.

சாத்தூர் :—மாரியம்மன் கோயிலில் பங்குனிப் பொங்கல் உற்சவம் 19-3-61 முதல் 28-3-61 வரை நடைபெற்றது.

திருபுவனம் :—கம்பகரேசுவரசுவாமி கோயிலில் உருத்திரபாதத் திருநாள் 22-3-61 31-3-61 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றது.

வைத்தீசுவரன்கோயில் :—வைத்தியநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 22-3-61 முதல் 4-4-61 வரை நடைபெறும். சமயச்சொற்பொழிவுகளும் திருமுறை விழாவும் நடைபெறும்.

ஆடுதுறை :—குற்றம்பொறுத்தீசுவரர் கோயிலில் 1-3-61ல் மாசிமக மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 13 பள்ளி மாணவர்கள் இவ்விழா இனிது நடைபெற பெரிதும் உதவிபுரிந்தார்கள்.

அறநிலையச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM Translation Dept.

—:O:—

(முன் தொடர்ச்சி)

80. சில விஷயங்களின் சுவாதீனத்தில் உள்ள குத்தகைதாரர்கள் லைசென்ஸ்தாரர்கள் அல்லது கொதுவைதாரர்கள் இவர்களை வெளியேற்றலாமென்பது:—(1) ஷை அறநிலையத்துக்குச் சொந்தமானதும், ஷை அறநிலையத்தைச் சேர்ந்ததும் அல்லது அடுத்துள்ளதுமான யாதொரு நிலத்தின் அல்லது அந்த அறநிலையத்தைச்சேர்ந்த புனிதமான குளம், கிணறு, ஊற்று அல்லது நீர்வழி இவைகள்-இவைகள் ஷை வளவுகளுக்குள் இருந்தாலும் சரி அல்லது வெளியே இருந்தாலும் சரி—அறநிலையத்தைச் சேர்ந்த பிராகாரங்கள், மண்டபங்கள், கூடங்கள் அல்லது தாழ்வாரங்களுக்கு உள்ளே அல்லது வெளியேயுள்ள யாதொரு வெற்றிடம், இவைகளின் குத்தகைதாரர்கள், லைசென்ஸ்தாரர்கள் அல்லது கொதுவைதாரர்கள், ஷை அறநிலையத்தின் அழகிய தோற்றத்தையோ அல்லது சூழ்நிலையைக் கெடுக்கிற அல்லது வெகுவாய் கெடுக்கக்கூடிய யாதொரு காரியத்தைச் செய்திருக்கிறாரென்று சம்பந்தப்பட்ட அறநிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின்மீது விசாரணை அதிகாரம் வகிக்கிற உதவி ஆணையர், அபிப்பிராயப்பட்டால், ஷை உதவி ஆணையர், அந்த விஷயத்தை அவசியமான விசாரணைகளுடன் கூட ஷை அறநிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின்மீது விசாரணை அதிகாரமுள்ள துணை ஆணையருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(2) துணை ஆணையர், ஷை குத்தகைதாரர், லைசென்ஸ்தாரர் அல்லது கொதுவைதாரருடைய செயலினால், அறநிலையத்தின் அழகுத்தோற்றம் அல்லது மதச் சூழ்நிலை கெடுக்கப்பட்டிருக்கிறது அல்லது வெகுசாய் கெடுக்கப்படவிருக்கிறது என்று சந்தேகமறத் தெரிந்து கொண்டால் ஷை குத்தகைதாரர், லைசென்ஸ்தாரர் அல்லது கொதுவைதாரருக்கு நோட்டிஸ் ஒன்றைச் சேர்ப்பிக்கலாம், ஷை குத்தகை அல்லது லைசென்ஸை இறுதி செய்தும் அல்லது கொதுவையை ரத்து செய்தும் சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை குத்தகைதாரர், லைசென்ஸ்தாரர் அல்வது கொதுவைதாரர் ஷை குத்தகை லைசென்ஸ் அல்லது கொதுவை சம்பந்தமான சொத்தை ஷை நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள ஒரு தேதிக்கு முன்பு தர்மகர்த்தரிடம் சேர்ப்பிக்குமாறும் கட்டளையிடுகின்ற ஓர் உத்தரவை ஏன் பிறப்பிக்கலாகாது என்பதற்கு குறிப்பிட்ட ஒரு தேதிக்கு முன்பு காரணம் காட்டுமாறு ஷை நோட்டிஸில் அவருக்குக் கட்டளையிட வேண்டும். ஷை நோட்டிஸின் நகல் ஒன்று சம்பந்தப்பட்ட அறநிலையத்தின் தர்மகர்த்தருக்கும் அனுப்பப்படவேண்டும்.

(3). (2) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள நோட்டிஸானது நிர்ணயிக்கப்படக்கூடிய விதப்படி அனுப்பப்படவேண்டும்.

(4) துணை ஆணையர், (2) உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள நோட்டிஸில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் மேற்படி குத்தகைதாரர், லைசென்ஸ்தாரர் அல்லது கொதுவைதாரரிடமிருந்து வந்து சேருகின்ற ஏவையேனும் ஆட்சேபனைகளை ஆலோசனைக் கெடுத்துக்கொண்ட பிறகு, அவர் மேற்படி குத்தகைதாரர், மேற்படி லைசென்ஸ்தாரர் அல்லது கொதுவைதாரரின் செயல் மேற்படி அறநிலையத்தின் அழகுத் தோற்றத்தையோ,

மத சூழ்நிலையையோ கெடுத்துவிட்டிருக்கிறது அல்லது வெகுசாய் கெடுத்துவிடவிருக்கிறதென்று நிச்சயிப்பாரானல், அவர் ஓர் உத்தரவு பிறப்பித்து குத்தகையை அல்லது லைசென்சை இறுதி செய்து அல்லது கொதுவையை ரத்துசெய்து, அதன் மூலமாக அந்த உத்தரவில் குறிப்பிட்டுள்ள ஒரு தேதிக்கு முன்பு மேற்படி குத்தகை லைசென்ஸ் அல்லது கொதுவை சம்பந்தமான சொத்தின் உண்மையை தர்மகர்த்தரிடம் சேர்ப்பிக்கவேண்டும் என்று மேற்படி குத்தகைதாரர் லைசென்ஸ்தாரர் அல்லது கொதுவைதாரருக்கு உத்தரவிடலாம்.

(5) துணை ஆணையரின் உத்தரவானது எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்படவேண்டும். மேலும் அதில் அவர் உத்தரவு பிறப்பித்ததற்கான காரணங்கள் கண்டிருக்க வேண்டும்.

81. **80-வது பிரிவின்கீழ் துணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கெதிராக அப்பீல்கள்:** (1). 80-வது பிரிவின்கீழ் துணை ஆணையரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவினுல் துன்பமடைந்த யாதொரு நபர் அவருக்கு அத்தகைய உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் ஆணையருக்கு எழுத்து மூலமான அப்பீல் ஒன்றைக் கொடுத்துக் கொள்ளலாம்.

(2) அப்படிப்பட்ட அப்பீல் கொடுத்துக் கொள்ளப்படுவதன்பேரில் ஆணையர், அந்த அப்பீல் முடிவு செய்யப்படும் வரையில் மேற்படி விஷயம் சம்பந்தமாக மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுப்பதை நிறுத்தி வைத்து உத்தரவு செய்யலாம்.

(3) ஆணையர், துணை ஆணையரிடமிருந்து ஷை விஷயம் சம்பந்தமான சகல ரெகார்டுகளையும் வரவழைக்க வேண்டும்; மேலும், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதப்படி அப்பீல் வாதிகளுக்கும், அறநிலையங்களின் தர்மகர்த்தருக்கும் நோட்டிஸ் கொடுத்த பிறகும் அவசியமானல் அவர் தகுதியென்று கருதுகிற மேற்கொண்டும் விசாரணையைச் செய்தபிறகும் ஷை அப்பீலை முடிவு செய்யலாம்.

(4) ஆணையரது முடிவும் அத்தகைய முடிவுக்குட்பட்டு துணை ஆணையரது உத்தரவும் அறுதியானதாகும்; மேலும், அதை ஷை அறநிலையம் அழகிய தோற்றமோ மத சூழ் நிலையோ கெடுக்கப்பட்டிருக்கிறது அல்லது வெகுசாய்க் கெடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு முடிவான சாட்சியமாகும்.

(5). (1). உட்பிரிவின்கீழ் துணை ஆணையரது உத்தரவுக்கு எதிராக அப்பீல் எதுவும் கொடுத்துக் கொள்ளப்படாத விஷயத்தில் அல்லது அப்பீல் ஒன்று கொடுத்துக் கொள்ளப்பட்டிருந்து அது தள்ளிவிடப்பட்டிருக்கும் விஷயத்தில் உதவி ஆணையரானவர், குறிப்பிட்ட ஒரு தேதிக்குப் பிறகு ஷை நிலத்தை சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ளலாம். மேலும், ஷை அறநிலையத்தின் தர்மகர்த்தர் ஷை அறநிலையத்தின் அழகிய தோற்றத்தையோ அல்லது மதச் சூழ்நிலையையோ மீண்டும் சரிவர அமைப்பதற்காக உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். ஷை நிலத்தின் சுவாதீனத்தைப் பெறுவதற்காக உதவி ஆணையர் உதவி கோருகிற யாதொரு போலீஸ் உத்தியோகஸ்தர் அவசியமான உதவியைச்செய்யக் கடமைப்பட்டவராவார்.

82. நஷ்டஈடு கொடுப்பது:—(1) இந்த அத்தியாயத்தின் மேற்கண்ட ஷரத்துக்களின் கீழ் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை அனுசரித்து யாதொரு குத்தகைதாரர் அல்லது கொதுவைதாரர் யாதொரு நிலத்தில் நமக்குள்ள சுவாதீனத்தை இழந்துவிடும் விஷயத்தில் அவருக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும்; ஷை நஷ்டஈட்டுத் தொகை 83-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட நியாய சபையினுல் இதில் பின்னுல் விவரித்துள்ள கொள்கைகளை அனுசரித்தும் அந்த விதப்படியும் நிச்சயிக்கப்பட வேண்டும். அவை யாவன:—

(a) நியாய சபையின் முன்பு நடவடிக்கைகள் தொடங்கும் சமயத்தில் சம்பந்தப்பட்ட அறநிலையத்தின் தர்மகர்த்தரும் நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டிய நபரும் தங்களது அபிப்பிராயத்தின்படி நியாயமான நஷ்டஈடு என்ன என்று முறையே தெரிவிக்கவேண்டும்.

(b) நியாய சபையார் நம்முடைய தீர்மானத்தைச் செய்கையில் ஷை சொத்தின் தன்மை, அது உபயோகப்படுத்தப்படுகிற காரியம், சந்தர்ப்பத்துக்கேற்ப, குத்தகை, லைசென்ஸ் அல்லது கொதுவையின் ஷரத்துக்களை அனுசரித்து செலுத்தப்படத்தக்க குத்தகைக் கட்டணம் அல்லது இதர தொகை இவைகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

(c) நியாய சபையாரால் முடிவு செய்யப்பட்ட நஷ்டஈடானது ஷை குத்தகை அல்லது லைசென்ஸ்தாரரால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகைக்கும் கொதுவையின் விஷயத்தில் கொதுவை வைப்பவர் பெற்றுக்கொண்ட தொகையும் அதற்குரிய வட்டியும் சேர்ந்த தொகைக்கும் மேற்படக் கூடாது.

(2) நியாய சபையாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிற நஷ்ட ஈடானது இச் சட்டத்தில் கண்டுள்ள ஷரத்துக்களை அனுசரித்து தர்மகர்த்தா, துணை ஆணையரின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பிறகு ஷை அறநிலையத்தின் நிதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டும்.

(3) இந்தப் பிரிவிலும் இச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட எவையேனும் விதிகளிலும் ஏற்பாடு செய்திருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, பிரஸ்தாப காலத்தில் அமுலிலுள்ள யாதொரு சட்டத்தில் கண்டுள்ளதெதுவும் இந்தப் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்டுள்ள தீர்ப்புகளுக்குப் பயன்படமாட்டாது.

83. **நியாய சபையின் அமைப்பு:**—(1) அரசாங்கத்தார் இந்த அத்தியாயத்தின் காரியங்களுக்காக அவசியமாயிருக்கக்கூடிய அளவுள்ள நியாய சபைகளை அமைக்க வேண்டும்.

(2) ஒவ்வொரு நியாய சபையிலும் அரசாங்கத்தாரால் தீர்மானிக்கக் கூடியபடி மூன்று அங்கத்தினர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்கள் இருக்க வேண்டும். அத்தகைய அங்கத்தினர்கள் ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால் அவர்களுள் ஒருவர் தலைவராக அரசாங்கத்தாரால் நியமிக்கப்படவேண்டும்.

(3) ஒவ்வொரு நியாய சபைக்கும் அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது விளம்பர மூலமாகத் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய பிரதேசத்தின் மீது விசாரணை அதிகாரம் இருக்கவேண்டும்.

(4) நியாய சபையின் அங்கத்தினர்களாக நியமனம் செய்யப்பட வேண்டிய நபர்களுக்குள்ள யோக்கியதாம்சங்களும் அத்தகைய அங்கத்தினர்களின் ஊழிய நிபந்தனைகளும் நிர்ணயிக்கப்படவேண்டியபடி இருக்க வேண்டும்.

(5) ஒவ்வொரு நியாய சபையும் 1908-ம் ஆண்டு சிவில் வழக்கு முறைச் சட்டத்தின்படி (1908-ம் ஆண்டு 5-வது மத்தியச் சட்டம்) ஒரு வழக்கை விசாரிக்கும்போது ஒரு சிவில் நீதி மன்றத்தில் நிலைபெற்றுள்ள அதே அதிகாரங்களை உடையதாகும்.

(6) யாதொரு நியாய சபையின் தலைவர் பதவியில் அல்லது யாதொரு நியாய சபையின் யாதொரு இதர அங்கத்தினர் பதவியில் யாதொரு காரணத்தை முன்னிட்டு, (தற்காலிகமாக வராதிருப்பது அல்லாத) ஒரு காலிஸ்தானம் ஏற்பட்டால், அரசாங்கத்தார், இச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து ஷை காலிஸ்தானத்தை நிரப்ப மற்றொருவரை நியமிக்கவேண்டும். நியாய சபையில் நடவடிக்கைகள், காலிஸ்தானம் நிரப்பப்பட்ட திசையிலிருந்து தொடர்ந்து நடத்தப்படவேண்டும்.

(7) யாதொரு நியாய சபைக்கு முன் மேற்படி நியாய சபையில் யாதொரு காலிஸ்தானம் இருப்பது அல்லது அதன் அமைப்பில் குறைபாடு இருப்பது என்பதனால் மாத்திரம் எந்தச் செயலும் அல்லது நடவடிக்கையும் பிரச்சினைக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

84. **தீர்ப்புக்கு எதிராக வழக்குகள்:**— 82-வது பிரிவின்கீழ் நியாய சபையாரின் தீர்ப்பு ஒன்றினால் துன்பமடைந்த யாதொரு நபர், அந்தத் தீர்ப்பு அவருக்குக் கிடைத்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மேற்படி அறநிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் மீது விசாரணை அதிகாரமுள்ள ஸிவில் கோர்ட்டில் வழக்கு ஒன்றைத் தொடரலாம்.

85. இந்த அத்தியாயத்தின்மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு: (1) இந்த அத்தியாயத்தில் கண்டுள்ள ஷரத்துக்களை அனுசரித்து அல்லது அந்த ஷரத்துக்களில் யாதொன்றை அனுசரித்துச் செய்யப்பட்ட யாதொரு உத்தரவின்கீழ் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட யாதொரு காரியத்துக்காக யாதொருவர்மீது எந்த வழக்கு பிராது அல்லது இதர சட்ட நடவடிக்கை தொடரலாகாது.

(2) இந்த அத்தியாயத்தில் கண்டுள்ள ஷரத்துக்களை அனுசரித்து அல்லது அந்த ஷரத்துக்களில் யாதொன்றை அனுசரித்துச் செய்யப்பட்ட உத்தரவின்கீழ் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட யாதொரு காரியத்தினுல் ஏற்பட்ட அல்லது வெகுசாய் ஏற்பட இருந்த யாதொரு சேதத்திற்காக நியாய சபையார், ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர்மீது எவ்வித வழக்கோ அல்லது இதர சட்ட நடவடிக்கைகளோ தொடரக்கூடாது.

அத்தியாயம் VIII

பட்ஜெட்டுகளும் (அதாவது உத்தேச வரவு செலவுத் திட்டங்களும்) தணிக்கைகளும்

86. அறநிலையங்களின் பட்ஜெட்டுகள்:— (1) ஒவ்வொரு அறநிலையத்தின் தர்மகர்த்தரும் ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச்சு மாதம் முடியும்முன் ஆணையரால் நிர்ணயிக்கக்கூடிய விதமாக, அடுத்த பசலி ஆண்டுக்கான உத்தேச வரவுகளையும் செலவுகளையும் காட்டும் பட்ஜெட் ஒன்றை—

(a) மடங்கள், மடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகளின் விஷயத்தில் ஆணையருக்கும்,

(b) 46-வது பிரிவின்படி வெளியிடப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்ட நிலையங்கள் விஷயத்தில் துணை ஆணையருக்கும்,

(c) இதர நிலையங்கள் விஷயத்தில் உதவி ஆணையருக்கும் அனுப்பவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்ஜெட்டிலும் அடியிற்கண்டவைகளுக்காகப் போதுமானபடி ஏற்பாடு செய்திருக்கவேண்டும்—

(a) நிலயத்தின் பொருள்களை கிரமமாய்ப் பராமரித்தல், அதன் சேவைகளைச் சரியாக நடத்துவது;

(b) மேற்படி நிலயத்தைக் கட்டுப்படுத்தும் கடன்களின் பொறுப்புக்களைக் கிரமமாய் நடத்துவது;

(c) மேற்படி நிலயத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்டிடங்களைச் செப்பனிடுவதும், புதுப்பிப்பதும் இப்பகுதியின்படிச் செய்யப்படும் ஏற்பாடானது நிலயத்தின் அவ்வாண்டு வருமானத்தின் உபரித் தொகையில் 25 சதவீதத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது;

(d) ஆணையர் நிச்சயிக்கக்கூடியபடி வருமானத்தின் அத்தகைய சதவீதம், ஷை நிலயத்தின் ரிசெர்வ் நிதிக்காகச் சகாயமாகக் கொடுப்பது;

(e) நடைமுதல் கையிருப்புத் தொகையை வைத்து வருவது;

(3) சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ஆணையர் அல்லது துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் தர்மகர்த்தருக்கு நோட்டிஸ் கொடுத்த பிறகும் மேற்படி பட்ஜெட்டில் அவருக்கு தகுதியெனத் தோற்றும் மாறுதல்களைச் செய்யலாம், எவைகளையேனும் விட்டுவிடலாம் அல்லது சேர்க்கலாம்.

(4) யாதொரு தர்மகர்த்தர் (3) உட்பிரிவின்கீழ் உள்ள உத்தரவை அவருக்குக் கிடைத்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்-

(a) மேற்படி உத்தரவு பிராந்தியக் குழுவால் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில், துணை ஆணையருக்கும்;

(b) மேற்படி உத்தரவு துணை ஆணையரால் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில், ஆணையருக்கும்;

(c) மேற்படி உத்தரவு ஆணையரால் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில், அரசாங்கத்தாருக்கும்,

அந்த உத்தரவுக்கெதிராக அப்பீல் செய்து கொள்ளலாம்.

(5) தர்மகர்த்தர், ஒரு பசலி ஆண்டின் போது, பல்வேறு தலைப்புகளின்கீழ்ச் செல விடப்படவேண்டிய தொகைகளின் வரவு அல்லது அவைகளைப் பிரித்துக் கொடுக்கும் விஷயமாக பட்ஜெட்டில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாற்றியமைப்பது அவசியம் என்று தெரிந்துகொண்டால், அவர் சந்தர்ப் பத்துக்குத் தகுந்தாற்போல் ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் மூலமாகப் பிராந்தியக் குழுவினிடம் தனது அனுபந்த பட்ஜெட்டை அல்லது மாற்றியமைக்கப் பட்ட பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கவேண்டும்; ஆனால் பொறுப்புகளையும் கடன்களையும் கொடுத்துத் தீர்ப்பதற்காக அல்லது நடை முறை மிகுதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை யில் யாதொரு மாற்றமும் செய்யப்படக் கூடாது; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர், துணை ஆணையர் அல்லது பிராந்தி யக்குழு (3) உட்பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளபடி மாற்றங்கள், நீக்கங்கள் அல் லது சேர்க்கைகள் செய்யலாம்.

(6) தர்மகர்த்தர், ஒவ்வொரு பசலி ஆண்டும் முடிவடைந்த பிறகு இரண்டு மாதங் களுக்குள் அந்தப் பசலி ஆண்டின் சம்பந்த மான வாஸ்தவமான வரவு, செலவுபற்றிய அறிக்கை ஒன்றைச் சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் மூலமாகப் பிராந்தியக் குழுவினருக்கு ஆணையரால் நிச்சயிக்கப்படக்கூடிய நமூனு வில் அனுப்பவேண்டும். மேற்படி ஸ்டேட் மென்டில் அனுமதியின்றிச் செய்யப்பட்ட எவையேனும் செலவுகள் பற்றிய விவரங் களும் அவற்றின் அவசியம் அல்லது அவசரம் பற்றிய விளக்கமும் கண்டிருக்கவேண்டும். சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர், துணை ஆணை யர் அல்லது பிராந்தியக் குழு தர்மகர்த்தரின் விளக்கத்தை ஆலோசித்த பிறகு அத்தகைய செலவு, சம்பந்தப்பட்ட நிலையத்திற்கு நன்மை பயப்பதாக இருந்தால் அல்லது அவசியமாக இருந்தால் அதை அனுமதிப்பது மன்றி அங்கீகரிக்கவும் வேண்டும்.

87. கணக்குகளும் தணிக்கையும்:— (1) ஒவ்வொரு அறநிலையத்தின் தர்மகர்த்த ரும், சகல வரவுகளையும் செலவுகளையும்பற் றிய கணக்குகளை கிரமமாக வைத்துவர வேண்டும். மேற்படி கணக்குகளை ஆணைய ரால் குறிப்பிடக் கூடியபடிக்கான மேற்படி நமூனுவில் அத்தகைய விவரங்களைக் கொண் டதாய் ஒவ்வொரு பசலி ஆண்டிற்கும் தனி யாக வைத்து வரப்படவேண்டும்.

(2) ஒவ்வொரு அறநிலையத்தின் கணக்குகளும், நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படவேண்டும். மேற்படி தணிக்கையாளர்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21-வது பிரிவின் தாற்பரியப்படி அரசாங்க உத்தியோகஸ்தர்களாகக் கருதப் படுவார்கள்.

(3) எந்த அறநிலையத்தின் வருஷாந்தர வருமானம் அடுத்து முந்திய பசலி ஆண்டிலே 92-வது பிரிவின் காரியங்களுக்காகக் கணக் கிடப்பட்டுள்ளபடி, அறுபதாயிரம் ரூபாய்க் குக் குறையாமலிருக்கிறதோ அப்படிப்பட்ட நிலையம் ஒவ்வொன்றினுடைய கணக்குகளும் ஏக காலத்தில் தணிக்கை செய்யப்படுவதற்கு (concurrent audit) உட்பட்டவையாகும்; அதாவது, அவ்வப்போது செலவு ஏற்படும் போது தணிக்கையும் கூடவே நடக்கவேண் டும். எந்த இதர நிலையங்களின் வருஷாந்தர வருமானம், மேலே சொன்னபடி அடுத்து முந்திய பசலி வருஷத்தில் கணக்கிட்டுள்ள படி 1,000 ரூபாய்க்குக் குறையாமலிருக் கிறதோ அந்த இதர அறநிலையம் ஒவ்வொன் றினுடைய கணக்குகளும் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படவேண்டும் அல்லது யாதொரு விஷயத்திலேனும் வகுப்பைச் சேர்ந்த விஷயங்களிலேனும் ஆணையர் அப் படிக் கட்டளையிட்டால் இன்னும் குறைந்த காலத்துக்கு ஒரு தடவை தணிக்கை செய்யப் படவேண்டும்.

(4) எந்த யாதொரு இதர அறநிலையத் தின் பசலி ஆண்டுக்கு அடுத்து முந்தைய ஆண்டு வருமானம் மேற்கூறியவாறு கணக் கிடப்பட்டபடி 1,000 ரூபாய்க்குக் குறைவா யிருக்கிறதோ அதனுடைய கணக்குகள் துறை வாரியாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும்; அதற்காக கட்டணம் எதுவும் விதிக்கக்கூடாது.

(5) சம்பந்தப்பட்ட அறநிலையத்தின் விஷயமாக உள்ள சகல கணக்குகள், ரெகார்டுகள், கடிதப்போக்குவரத்து, நக் ஷாக்கள், இதர தஸ்தாவேஜுகள், சொத்து,

தொகைகள் இவைகளைத் தணிக்கையாளர்களுக்கு மேற்படி நிலையத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் விஷயமாகக் காண்பிப்பதும், தேவைப்படக்கூடிய தகவல்களைக் கொடுப்பதும் அவசியமாயிருக்கக்கூடிய அல்லது நியாயமாயிருக்கக்கூடிய சகல உதவிகளையும் வசதிகளையும் செய்து கொடுப்பதும் சம்பந்தப்பட்ட நிலையத்தின் தர்மகர்த்தர் அவருக்குக்கீழ் பணிபுரியும் சகல உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் மேற்படி நிலையத்தின் நிர்வாகத்தில் அக்கறை கொண்டுள்ள தர்மகர்த்தரின் ஏஜெண்டு யாதொரு இதர நபர் ஆகியவர்களின் கடமையாகும்.

88. **தணிக்கை அறிக்கையை எந்த அதிகாரிக்கு அனுப்ப வேண்டுமென்பது:**—சந்தர்ப்பத்துக்கேற்றபடி யாதொரு பசலி வருஷத்துக்காவது அதைவிடக் குறைந்த கால அளவுக்காவது, யாதொரு விவகாரத்துக்காவது தொடர்ச்சியாயுள்ள விவகாரங்களுக்காவது தணிக்கை செய்து முடித்த பிறகு தணிக்கையாளர்—

(a) மடங்கள், மடங்களோடு சேர்க்கப்பட்ட குறிப்பிட்ட கட்டளைகளின் விஷயத்தில் ஆணையருக்கும்,

(b) 46-வது பிரிவின்படிப் பிரசுரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நிலையங்கள் விஷயத்தில் துணை ஆணையருக்கும்,

(c) இதர நிலையங்கள் விஷயத்தில் உதவி ஆணையருக்கும்,

அறிக்கை ஒன்றை அனுப்பவேண்டும்.

89. **தணிக்கை ரிப்போர்ட்டில் இன்ன விஷயங்கள் அடங்கி யிருக்கவேண்டுமென்பது:**-(1) ஒழுங்குப் பிசகாகவாவது சட்ட விரோதமாகவாவது அக்கிரமமாகவாவது பணச் செலவு செய்த சகல விஷயங்களையும் அல்லது பிரஸ்தாப அறநிலையத்துக்குச்சேரவேண்டிய பணத் தொகைகளை அல்லது வேறே சொத்தை வசூலிக்கத் தவறிப்போன சகல விஷயங்களையும் அல்லது அசட்டையாயிருந்ததனாலாவது துர்நடத்தை காரணமாகவாவது தர்மகர்த்தர் அல்லது யாதொரு இதர நபரின் துஷ்பிரயோகம், கள்ள யோசனை, மோசடி விவகாரம் அல்லது நம்பிக்கைத் துரோகத்தால் மேற்படி நிலையத்தின் பணம் அல்லது இதர சொத்து நஷ்டமாயிருக்கும் அல்லது வீணாகியிருக்கும் சகல விஷயங்களையும் தணிக்கையாளரானவர் தமது அறிக்கையில் குறிப்பிடவேண்டும்.

(2) கணக்குகள் சம்பந்தமாய் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறே யாதொரு விஷயத்தைப் பற்றியுங்கூட அல்லது வேறு எந்த விஷயத்தைப் பற்றித்தாம் ரிப்போர்ட் செய்யவேண்டுமென்று சந்தர்ப்பத்திற்கேற்றபடி ஆணையராவது, துணை ஆணையராவது அல்லது உதவி ஆணையராவது தமக்கு உத்தரவு செய்யக்கூடுமோ அந்த விஷயத்தைப்பற்றிக்கூட தணிக்கையாளர் ரிப்போர்ட் செய்யவேண்டும்.

90. **தணிக்கையில் வெளியான குற்றங்களைச் சரிப்படுத்துவதும் தர்மகர்த்தர் முதலியவர்கள் அதிகப்படியான கட்டணம் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடுவதும்:**-(1) சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஆணையராவது துணை ஆணையராவது அல்லது உதவி ஆணையராவது யாதொரு அறநிலையத்தின் கணக்குகளுக்குச் சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கை ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதியை அதன் தர்மகர்த்தருக்கு அனுப்பவேண்டும்; அதன் பேரில் அந்த தர்மகர்த்தர் மேற்படி தணிக்கையாளர் எடுத்துக்காட்டிய எவையேனும் குற்றங்களையாவது ஒழுங்குப் பிசகுகளையாவது திருத்திக்கொள்ளவும், அதைப்பற்றி சந்தர்ப்பத்துக்கேற்றவாறு ஆணையருக்காவது துணை ஆணையருக்காவது, உதவி ஆணையருக்காவது ரிபோர்ட் செய்யவும் கடமைப்பட்டவராவார்.

(2) தணிக்கையாளருடைய ரிபோர்ட்டைப்பற்றியும் அதனுடன் தர்மகர்த்தர் ஏதாகிலும் ரிப்போர்ட் செய்திருந்தால், அதைப்பற்றியும் சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் ஏதாகிலும் ரிப்போர்ட் செய்திருந்தால் அதைப்பற்றியும் ஆலோசனை செய்ததின் பேரில் அவசியமான விசாரணைக்குப் பிறகும் தர்மகர்த்தரேனும் வேறே யாதொரு நபரேனும் மேற்படி நிலையத்தின் நிதிகளை துர்வினியோகம் செய்திருக்கிறார் என்றாவது வேண்டுமென்றே வீணாக்கி இருக்கிறாரென்றாவது அல்லது மேற்படி நிலையத்துக்கு நஷ்டமுண்டாகும் விதத்தில் பெரிதும் அசட்டையா

யிருந்திருக்கிருரென்ருவது சந்தர்ப்பத்துக் கேற்ப ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் நினைத்தால், ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் அந்த தர்மகர்த்தருக்காகிலும் மேற்படி நபருக்காகிலும் அதிகப்படியான கட்டணம் செலுத்தவேண்டுமென்று ஏன் ஓர் உத்தரவு பிறப்பிக்கக்கூடாதென்பதற்குக் காரணங் காட்டும்படி அவருக்கு நோட்டீஸ் கொடுத்த பிறகும், அவர் ஏதேனும் சமாதானம் சொன்ஞல் அதைப்பற்றி ஆலோசித்த பிறகும், உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய் மேலே கண்டபடி பணம் செலவழிக்கப்பட்டது அல்லது பணம் அல்லது சொத்தின் மதிப்பு இழக்கப்பட்டது என்று உறுதி கூறி அத் தொகையை அந்த தர்மகர்த்தரோ மேற்படி நபரோ குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் மேற்படி அறநிலையத்தின் நிதிகளிலிருந்தல்லாமல் தாமே நேரில் செலுத்த வேண்டுமென்று கட்டளையிடலாம்.

ஆனல், நிலையத்தின் சொத்தின் யாதொரு செலவு அல்லது நடவடிக்கை சம்பந்தமாக, தர்மகர்த்தர் அல்லது அத்தகைய நபர்ஒருவர்,சந்தர்ப்பத்திற்கேற்ப ஆணையரின், துணை ஆணையரின் அல்லது உதவி ஆணையரின் கட்டளைகளைப் பெற்றிருந்து, அக் கட்டளை அனுசரித்துச் செயலாற்றியிருந்தால் அவர் பொறுப்பாளியாகக் கருதப்படமாட்டார்.

(3) சந்தர்ப்பத்துக்கேற்ப ஆணையர், துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் (2) உட்பிரிவின்படிக்கான உத்தரவின் நகல் ஒன்றையும் அதற்குண்டான காரணங்களையும், தர்மகர்த்தருக்கு அல்லது சம்பந்தப்பட்ட நபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும்.

(4) மேற்படி உத்தரவினுல் துன்பமடைந்த தர்மகர்த்தராவது வேறு நபராவது அவ்வுத்தரவு தம்மிடம் வந்து சேர்ந்ததிலிருந்து முப்பது தினங்களுக்குள்—

(a) அவ்வுத்தரவை மாற்றியமைக்கும்படி அல்லது நிராகரிக்கும்படி நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அந்த நீதிமன்றத்தார், அவசியமாயுள்ள சாட்சியம் எடுத்த பிறகு செலவுகள் சம்பந்தமாய் பிரஸ்தாப சந்தர்ப்பங்களில் தங்களுக்குப் பொருத்தமாகத் தோற்றக்கூடிய உத்தரவு சகிதமாக மேற்படி அதிகப்படியான கட்டணத்தை (ஸர் சார்ஜை) ஊர்ஜ்ஜிதம் செய்யலாம், மாற்றலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்; அல்லது

(b) அவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்வதற்குப் பதிலாக, அவர் அக்காலத்துக்குள் அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்; அவர்கள் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற பிரகாரம் உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

(5) (4) உட்பிரிவின்படி எந்தக் கோர்ட்டாருக்கு அல்லது அரசாங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பம் அல்லது அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அவர்கள் அவ் விண்ணப்பம் அல்லது அப்பீல் பைசலாகாமலிருக்கிற வரையில் மேற்படி உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்படுவதை நிறுத்தி வைக்க அதிகாரம் உடையவர்களாக மாட்டார்கள்.

(6) யாதொரு தர்மகர்த்தர் அதிகப்படியான கட்டணம் செலுத்த வேண்டுமென்று இப் பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவினுல் முடிவாக விவரிக்கப்பட்ட விஷயம் சம்பந்தமாகவன்றி மற்றப்படி அவர் கணக்குகள் காட்டவேண்டுமென்று செய்து கொள்ளப்படும் ஒரு வழக்குக்குயத்துக்கு மேற்படி உத்தரவு தடையாக இராது.

(7) அதிகப்படியான கட்டணம் ரூபமாய் எந்தத் தர்மகர்த்தர் அல்லது இதர நபரிடமிருந்து யாதொரு தொகை வசூலிக்கப்படத்தக்கதாயிருக்கிறதோ அந்த தர்மகர்த்தருடைய அல்லது அந்த நபருடைய யாதொரு சொத்து இருக்கும் மாவட்டத்தின் கலெக்டரானவர், ஆணையரால் கேட்டுக் கொள்ளப்படுவதன்பேரில், அந்தத் தொகை நிலவரி பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே அதை வசூலித்து அதைச் சம்பந்தப்பட்ட அறநிலைய ஸ்தாபனத்துக்குச் செலுத்திவிடவேண்டும்.

(8) மேற்படி தர்மகர்த்தர் அல்லது இதர நபர் (2) உட்பிரிவின்கீழ் அல்லது (4) உட்பிரிவின்கீழ்ச் செய்யப்படக்கூடிய

யாதொரு உத்தரவை நிறைவேற்ருமலிருக்கும் எண்ணத்துடன் அல்லது நிறைவேற்றுவதைத் தாமதமாக்கும் எண்ணத்துடன்—

(a) தனது சொத்து முழுவதை அல்லது அதன் யாதொரு பாகத்தை விற்க இருக்கிருர், அல்லது

(b) ஆணையரின் விசாரணை அதிகாரத்திலிருந்து தமது சொத்து முழுவதையும் அல்லது யாதொரு பாகத்தை அகற்றவிருக்கிருர்

என்று ஆணையர் சந்தேகமறத் தெரிந்து கொண்டால், போதுமான ஜாமீன் கட்டப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அவர் அவசியமெனக் கருதுகிறபடி கோர்ட்டார் இந்த விஷயத்தை முடிவு செய்கிற வரையில் மேற்படி சொத்தினை அல்லது அதன் பாகத்தை நிபந்தனைக்குட்பட்ட ஜப்திக்காக கோர்ட்டாருக்கு அல்லது அரசாங்கத்தாருக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

91. **ஏற்பாட்டில் நிபந்தனை கண்டிருந்த போதிலும் பாதகமில்லாமலே இந்த அத்தியாயம் பயன்படுமென்பது**:— இச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்படும் யாதொரு ஏற்பாட்டில் அடியிற்கண்டதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்கள் ஒவ்வொரு அறநிலையத்துக்கும் பிரயோகிக்கப்படும்.

அத்தியாயம் IX.

நிதி

92. **அறநிலையங்கள் அரசாங்கத்தாருக்கு வருஷாந்தர சகாயத்தொகை செலுத்த வேண்டுமென்பது**.—*(1)* ஒவ்வொரு அறநிலையமும் அதற்குக் கிடைக்கும் வருமானத்திலிருந்து, அரசாங்கத்தாரும் அவர்களது உத்தியோகஸ்தர்களும் செய்த சேவையின் விஷயமாகவும் அத்தகைய சேவையினுல் ஏற்பட்ட செலவுகளைக் கொடுப்பதற்காகவும் 7 சதவீதத்துக்கு மேற்படால் நிர்ணயிக்கக்கூடிய ஒரு சகாயத் தொகையை ஆண்டுதோறும் ஆணையருக்குச் செலுத்தவேண்டும்.

(2) அடுத்து முந்திய ஆண்டுக்காக எந்த அறநிலையத்தின் ஆண்டு வருமானம் *(1)* உட்பிரிவின்படி சகாயத் தொகை விதித்து வாங்கும் காரியங்களுக்காகக் கணக்கிடப்பட்டபடி ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாயில்லையோ அப்படிப்பட்ட நிலையம் ஒவ்வொன்றும், அதனுடைய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குப் பிடிக்கும் செலவை ஈடு செய்வதற்காக அதனுடைய வருமானத்தில் ஒன்றரை சத வீதத்துக்கு மேற்படாமல் ஆணையர் நிர்ணயிக்கக்கூடிய அதிகப்படியான தொகையை ஆணையருக்கு ஆண்டு தோறும் செலுத்தவேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட அறநிலையத்துக்காக இச் சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்படும் யாதொரு ஏற்பாட்டிலே அடியிற்கண்டதற்கு விரோதமாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, *(1)*, *(2)* உட்பிரிவுகளில் குறிப்பிட்டிருக்கும் வருஷாந்தரத் தொகைகளைச் செலுத்தவேண்டும்.

(4) அரசாங்கத்தார்—

(i) பிராந்தியக் குழுவின் செலவுகள்,

(ii) அரசாங்கத்தாரால் அல்லது அரசாங்கத்தாரின் கீழ் உத்தியோஸ்தரான யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியினுல் அமைக்கப்பட்டவையும் அவர்களால் இதுவிஷயமாக விசேஷமாக அதிகாரமளிக்கப்பட்டவையுமான ஆலோசனைக் குழுக்கள், அதன் துணை குழுக்கள் ஆகியவைகளின் செலவுகள்.

(iii) அறநிலையங்களுக்குச் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள், புஸ்தகங்கள், ஆண்டு அறிக்கைகள், விவரமான அறிக்கைகள் ஆகியவைகளைப் பிரசுரிப்பதற்கான செலவுகள்;

உள்பட இச் சட்டத்தின் காரியங்களுக்காக ஏற்பட்ட செலவுகளைக் கொடுக்கவேண்டும்.

(தொடரும்)